# பள்ளிக் கல்வித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2019-20

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | தொடக்கக் கல்வி | 8 |
| 3 | இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி | 50 |
| 4 | நலத்திட்டங்கள் | 102 |
| 5 | மெட்ரிகுலேசன் பள்ளிகள் | 113 |
| 6 | மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | 124 |
| 7 | அரசுத் தேர்வுகள் | 155 |
| 8 | பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி | 177 |
| 9 | பொது நூலகங்கள் | 184 |
| 10 | ஆசிரியர் தேர்வு வாரியம் | 213 |
| 11 | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | 220 |
| 12 | நிதி ஒதுக்கீடு | 231 |

# 1. முன்னுரை

"குழந்தைப் பருவம், குதூகலமாய், வண்ணத்துப் பூச்சிகளாய் விளையாடித் துள்ளித் திரியும் காலம். பள்ளி சென்று பயில வேண்டிய காலம். குழந்தைகளின் திறமைகளைக் கண்டறிந்து, மேம்படுத்தி அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, பராமரிக்க வேண்டியது நமது கடமையாகும்"

-மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

குழந்தைப் பருவம் முதற்கொண்டே அனைத்து குடிமக்களுக்கும் தரம் வாய்ந்த கல்வி கிடைக்கப் பெறச் செய்வதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. தரமான கல்வியே சமுதாய சமநிலைக்கு அடித்தளம் அமைக்கிறது. கல்வியானது குடிமக்களை அறிவு பெற்றவர்களாக விழிப்புணர்வூட்டுவது மட்டும் அல்லாமல் வலிமை உள்ளவர்களாகவும் உருவாக்கி, சமுதாயத்தில் அவர்களைச் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு பெருமளவிற்கு பங்களிப்பவர்களாக உருவாக்குகிறது. 2019-20 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்வித் துறைக்கென மிக அதிக அளவில் ரூ.28,957.62 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

வறுமையை ஒழிக்கவும், புவியைப் பாதுகாக்கவும், அமைதியையும், வளமையையும் அனைத்து மக்களுக்கும் உறுதி செய்யவும், வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்களை (Sustainable Development Goals) ஐக்கிய நாடுகள் சபை உலகக் குறிக்கோள்களாக கொண்டுள்ளது. இவற்றுள் யாவரையும் உள்ளடக்கிய, சமவாய்ப்புள்ள, சமத்துவமான, தரமான கல்வியை உறுதிப்படுத்துதல் மற்றும் எல்லோருக்கும் வாழ்நாள் முழுமைக்கும் கல்வி கற்றலுக்கான வாய்ப்பினை ஊக்குவித்தல் என்பதே அதன் 4வது குறிக்கோள் ஆகும். தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வியில் தமிழ்நாடு சிறந்து விளங்குகின்றது. தொடக்கக் கல்வியில் நிகரச் சேர்க்கை விகிதத்தில் ஏறக்குறைய 100 விழுக்காடு அடைவு பெற்ற ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. மேலும், இதர குறியீடுகளான மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளின் சேர்க்கை விகிதம், பாலின சமநிலை குறியீடுகள், இளையோர் எழுத்தறிவு விகிதம், மின்சார வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளுடைய பள்ளிகளின் விகிதம் போன்றவற்றில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. அனைவருக்கும் சமமான, தரமான கல்வி மற்றும் வாழ்நாள் முழுமைக்குமான கற்றல் நோக்கத்தினை அடைந்திடவும்,

அதற்கென திட்டமிடவும் பல்வேறு பங்கேற்பாளர்களைக் கொண்ட பணிக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

வேகமாக மாறிவரும் கற்றல் சூழ்நிலையில் தகவல் தொழில் நுட்ப செயல்திறனை பள்ளிகளில் இணைப்பது இன்றியமையாததாக உள்ளது. இது, தகவல் வசதி மற்றும் கற்றல் வெளிப்பாடுகளில் உள்ள இடைவெளியைக் குறைக்கிறது. இதனால் மாணவர்-மையக் கற்றல் ஊக்குவிக்கப்படுகிறது. ரூ.520.13 கோடியில் உயர் தொழில்நுட்ப ஆய்வக வசதிகள் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அரசால் அமைக்கப்பட்டு வருகிறது. அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classrooms) ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தகவல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு திறம்பட கற்பித்திட புதிய வழிகளை உருவாக்க ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது.

பள்ளி வசதி, தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமித்தல், கற்றல்-கற்பித்தலில் வளர்ந்து வரும் மாறுதல்களை சேர்த்தல் போன்ற கற்றல் முறைமைகளை கையாண்டு மிக உயர்ந்த

தரமான கற்றல் விளைவுகளை அடைய அரசு உறுதி பூண்டுள்ளது.

மாணவர்களுக்கு சத்துள்ள மதிய உணவு, விலையில்லா பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், மடிக்கணினி, சீருடை, காலணி, புத்தகப்பை, கிரையான்ஸ், வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப்பெட்டி, புவியியல் வரைபட புத்தகம், கம்பளிச்சட்டை, மழைக்கால ஆடை, உறைக் காலணி, காலுறைகள், பேருந்து பயண அட்டை மற்றும் மிதிவண்டிகள் போன்ற விலையில்லா நலத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் மாணவர்களின் தேவைகள் முழுமையாக நிறைவு செய்யப் படுகின்றன. பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான துயர்துடைப்பு நிதி உதவி, விபத்தை எதிர் கொண்ட மாணவர்களுக்கான காப்பீடு திட்டம், 10 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் பள்ளி இடைநிற்றலைக் குறைக்க சிறப்பு ஊக்கத் தொகை போன்ற தனித்தன்மை வாய்ந்த திட்டங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மாணவர்களுக்கான நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்த நடப்பு ஆண்டில் ரூ.2,578.87 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒரு மிகப்பெரிய அளவிலான நிர்வாக சீரமைப்பு நடவடிக்கையாக பல்வேறு ஆளுமை வரம்பிற்கு உட்பட்டு ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்திய அதிகாரம் உடைய பல இணையான நிர்வாக அமைப்புகளுக்கு மாற்றாக, துறையின் நிர்வாக அமைப்பானது கள அளவில் தெளிவான மூன்றடுக்கு அமைப்பாக மாற்றப்பட்டு, அதிகாரம் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் அனைத்து வகையான பள்ளிகளையும் திறம்பட கண்காணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சமீப காலத்திற்கேற்ப மாற்றங்களை புகுத்தி, 12ஆம் வகுப்பு வரையிலான கலைத்திட்டம் மற்றும் பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. 12ஆம் வகுப்பு வரையில் உள்ள அனைத்து வகுப்புகளுக்கான பாடப்-புத்தகங்களும் திருத்தி எழுதப்பட்டு நடப்புக் கல்வி ஆண்டிலேயே மாணவர்களால் பயன்படுத்தப்பட உள்ளது. செறிவூட்டப்பட்ட இப்பாடப்புத்தகங்கள் (Energised textbooks) ஒலி-ஒளி பொருளடக்கத்தோடு இணைந்த விரைவுத்-துலங்கல் குறியீடுகளோடு (QR Code) வினா வங்கியையும் உள்ளடக்கி உள்ளன. மாற்றி அமைக்கப்பட்ட கலைத்-திட்டம் மற்றும் பாடத் திட்டங்களுக்கு ஏற்றவாறு தங்களை தயார்படுத்திக்கொள்ள ஆசிரியர்களுக்கு பணியிடைப்

பயிற்சி அளிக்கப்படுவதால் அவர்களின் கற்பிக்கும் திறன் மெருகேற்றப்பட்டு மேம்படுத்தப் படுகின்றது.

புதுமை முயற்சியாக அறிவியல், தொழில்நுட்பம், கலை மற்றும் இலக்கியத்தில் திறமை பெற்ற 75 மாணவர்கள் பின்லாந்து, ஸ்வீடன், மலேசியா மற்றும் சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். இதன் மூலம் அந்தந்த நாடுகளில் உள்ள கல்விமுறை, அறிவியல் வளர்ச்சி, கலாச்சாரம் மற்றும் மரபு ஆகியவை பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

2018-19 ஆம் ஆண்டில், ரூ.277.69 கோடி செலவில் அரசுப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்-பட்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகள் என்பது கூடுதல் வகுப்பறைகள், தளவாடங்கள், ஆய்வகங்கள், குடிநீர் வசதிகள், கழிப்பறைகள், சுற்றுச்சுவர், சாய்தளம், மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான கைப்பிடி பொருத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

கல்வித் தகவல் மேலாண்மை முறைமையானது இணைய வழியாக்கப்பட்டு, அதன் மூலம் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளின் விபரங்கள், ஆசிரியர் மற்றும் மாணவர்கள் பற்றிய முழுவிபரங்கள் அனைத்தும் உடனடியாக பதிவேற்றம் செய்யப்பட்டு

பராமரிக்கப்படுகிறது. இது சிறந்த கொள்கை முடிவுகளை எடுப்பதற்கு அரசிற்கு பெரிதும் உதவுகிறது.

புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் "தொலைநோக்கு தமிழ்நாடு 2023" இன்படி தமிழகத்தை முதலிடத்தில் நிலைநிறுத்த உயிரோட்டமான மற்றும் மாறும் கல்வி முறைக்கேற்ப தரமான மற்றும் சமமான கல்வியை மாணவர்களுக்குத் தருவதற்காக இந்த அரசு பல்வேறு புதுமையான முயற்சிகளை அறிமுகப்படுத்த உறுதி பூண்டுள்ளது.

# 2. தொடக்கக் கல்வி

## 2.1. முன்னுரை

கல்வியில் தொடக்க நிலை என்பது குழந்தைகளின் வாழ்நாளில் மிக முக்கிய நிலையாகும். குழந்தைகளின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் தொடக்கக் கல்வி முக்கிய பங்கு வகிக்கின்றது. குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி, எண்ணறிவு, தொடர்பு கொள்ளும் திறன் மற்றும் அவர்களின் படைப்பாற்றலை ஊக்குவித்தல் போன்ற கற்றல் வாய்ப்புகளை வழங்குவதாக தொடக்கக் கல்வி அமைய வேண்டும். 6 முதல் 14 வயதுடைய அனைத்துக் குழந்தைகளுக்கும் சாதி, மதம் மற்றும் பொருளாதாரப் பாகுபாடின்றித் தரமான கல்வியை வழங்குவதே குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009இன் உள்ளார்ந்த நோக்கமாகும். இதற்கென அரசு பல்வேறு நலத்திட்டங்களையும் புத்தாக்கத் திட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

## 2.2. நோக்கங்கள்

- 6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அனைவரையும் 100 விழுக்காடு பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தலை உறுதி செய்தல்

- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ நடைமுறைப் படுத்துதல்
- அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி வழங்குதல் மூலம் கற்றல் அடைவினை மேம்படுத்துதல்
- அனைத்துக் குழந்தைகளுக்கும் 100 விழுக்காடு பள்ளி வசதியை வழங்கிட புதிய பள்ளிகளைத் தொடங்குதல் மற்றும் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்
- பள்ளி வசதியை ஏற்படுத்துவதில் குறைந்தபட்ச தரநிலையை உறுதி செய்தல்
- மக்கள் தொகை பரவலாக உள்ள பகுதிகளில் உண்டு உறைவிடப் பள்ளிகளைத் தொடங்குதல்
- புதிய பள்ளிகள் தொடங்க வாய்ப்பில்லாத அடர்ந்த வனப்பகுதிகளிலும் மலைப் பிரதேசங்களிலும் வசிக்கும் குழந்தைகளுக்கு போக்குவரத்து / பாதுகாவலர் வசதியை அமைத்துக் கொடுத்தல்
- சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள், நலிவடைந்த பிரிவைச் சார்ந்த குழந்தைகள், மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த

குழந்தைகளுக்கு ஏற்ற உள்ளடக்கிய சூழலைப் பள்ளிகளில் ஏற்படுத்துதல்

- கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் மற்றும் கணிதத் திறனை மேம்படுத்துதல்
- பள்ளிக் குழந்தைகளிடத்தில் கல்வி மற்றும் கல்விசார் திறன்களை மேம்படுத்துதல்

## 2.3. பள்ளி வசதி ஏற்படுத்துதல்

அனைத்து குழந்தைகளுக்கும் அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே பள்ளி வசதி கிடைத்திட சிறப்பு முன்னுரிமை வழங்கி, தமிழ்நாடு கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகள், 2011இல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி 2011-12 முதல் 2018-19 வரையிலான காலத்தில், 248 புதிய தொடக்கப் பள்ளிகளை அரசு தொடங்கியுள்ளதுடன் 117 தொடக்கப் பள்ளிகளையும் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி உள்ளது.

### *2.3.1. புவியியல் தகவல் முறைமை*

தமிழ்நாடு, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகள், 2011இன் படி குடியிருப்பு பகுதிகளில் புதிய பள்ளி வசதியினை உறுதி

செய்ய புவியியல் தகவல் முறைமை பின்பற்றப்பட்டு வருகிறது.




தற்போது 58,734 பள்ளிகள் மற்றும் 92,234 குடியிருப்புகள் இம்முறைமைக்குள் கொண்டுவரப் பட்டுள்ளன.

பள்ளி வசதியில்லாத குடியிருப்புகளில் உள்ள குழந்தைகள் பாதுகாப்பாக பள்ளி செல்வதற்கு ஏற்ற உத்தியினைக் கண்டறிய தொடக்க நிலையில் பள்ளி வரைபட தகவல் சேகரிப்பு பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது. தமிழகத்தில் 92,234 குடியிருப்புகள் உள்ளன. இவற்றுள் 89,995 குடியிருப்புகளில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள் அமைந்துள்ளன. உயர் தொடக்க நிலையில் 91,040 குடியிருப்புகளில் அரசு மற்றும்

அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் அமைந்துள்ளன. பள்ளி வசதி இல்லாத குடியிருப்புகளில் உள்ள குழந்தைகளுக்கு போக்குவரத்து / பாதுகாவலர் வசதி அல்லது உண்டு உறைவிடப் பள்ளி வசதி அளிக்கப்படுகிறது.

### *2.3.2. போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதிகள்*

பள்ளிகள் அமையப் பெறாத குடியிருப்புப் பகுதிகளில் குறிப்பாக வனம் மற்றும் மலைப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு 2012-13ஆம் ஆண்டிலிருந்து போக்கு-வரத்து மற்றும் பாதுகாவலர் வசதி வழங்கப்பட்டு வருகிறது. 2018-19ஆம் ஆண்டில் 17,230 குழந்தைகளுக்கு ரூ.933.18 இலட்சம் செலவில் இவ்வசதி வழங்கப்பட்டுள்ளது.

### *2.3.3. உண்டு உறைவிடப் பள்ளிகள்*

அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளின் 100 விழுக்காடு பள்ளி சேர்க்கையை உறுதி செய்வதற்கு, மக்கள் தொகை பரவலாக உள்ள மலை மற்றும் வனப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள், நகரப் பகுதிகளில் உள்ள வாய்ப்பு மறுக்கப்பட்ட தெருவோரக் குழந்தைகள் மற்றும் பெரியோர் பாதுகாப்பின்றி வாழும் குழந்தைகள் ஆகியோர் பயன் பெறும் வகையில் உண்டு உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 11 உண்டு

உறைவிடப் பள்ளிகள் மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டு 1,041 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். 2018-19 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.490.72 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### *2.3.4. கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா*

தமிழகத்தில் 14 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில், 61 கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற 10 முதல் 14 வயதுக்குட்பட்ட பெண்குழந்தைகளுக்கு உணவு மற்றும் தங்கும் இடவசதியுடன் கூடிய கல்வி வழங்கப்பட்டு வருகிறது. 2018-19 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாணவிக்கான மாதாந்திர ஊக்கத் தொகை ரூ.100லிருந்து ரூ.150 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மாணவிகள் இப்பள்ளியில் தங்கிப் பயிலும் காலம் வரை அவர்களுக்குக் குழுக் காப்பீடு வழங்கப்படுகிறது. 2018-19 ஆம் ஆண்டில் 4504 பெண் குழந்தைகள் கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா பள்ளிகள் மூலமாக பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக ரூ.2,807.13 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### *2.3.5. பள்ளி செல்லாக் குழந்தைகளை சேர்க்கை செய்திட சிறப்புப் பயிற்சி செயல்பாடுகள்*

பள்ளி செல்லாக் குழந்தைகளை மீண்டும் பள்ளிகளில் சேர்ப்பதற்கு அரசு மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளால் கடந்த 8 ஆண்டுகளில், பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது. 2011-12 ஆம் கல்வி ஆண்டில் 63,178 எனக் கண்டறியப்பட்ட பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை 2018-19 இல் 33,519 ஆகக் குறைந்துள்ளது. கள ஆய்வு செய்து கண்டறியப்பட்ட 33,519 பள்ளி செல்லாக் குழந்தைகளில் 33,087 குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கும் அரசால் வழங்கப்படும் விலையில்லாப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. சிறப்புப் பயிற்சி மையங்களிலிருந்து முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளைத் தக்க வைக்க அரசால் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. சிறப்புப் பயிற்சி மையங்களில் பயின்ற 5,305 மாணவர்கள் 2018-19 ஆம் ஆண்டில் 8, 10 மற்றும் 12 ஆம் வகுப்பை நிறைவு செய்துள்ளனர். 2018-19 ஆம் ஆண்டில் இச்செயல்பாடுகளுக்காக ரூ.1,691.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### *2.3.6. புலம்பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி*

2018-19 ஆம் ஆண்டில் 7,149 புலம் பெயர்ந்து வந்த தொழிலாளர்களின் குழந்தைகள் கண்டறியப்பட்டு (மாநிலத்திற்குள்ளும், மாநிலத்திற்கு வெளியிலும்) அதில் 7,057 குழந்தைகள் அவர்களின் வயதுக்கேற்ற வகுப்பில் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். வெளி மாநிலத்திலிருந்து புலம் பெயர்ந்த 4,260 குழந்தைகளின் தேவையை பூர்த்தி செய்வதற்கு தெலுங்கு, இந்தி, வங்காளம் மற்றும் ஒடியா மொழிகளைச் சார்ந்த 158 கல்வித் தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களது தாய் மொழியிலேயே பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளுக்கு இரு மொழி மாற்றுச்சான்றிதழ் வழங்கப்படுவதனால், அவர்கள் எவ்விடத்திலும், எந்தத் தடையுமின்றி தொடர்ந்து கல்வி கற்றிட முடியும். புலம் பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி நலனுக்காக ரூ.200.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### *2.3.7. உள்ளடக்கிய கல்வி*

சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் தங்கள் கல்வியைத் தொடர்வதற்கு ஏற்றவாறு உதவி

உபகரணங்கள் மற்றும் இதர வசதிகளை வழங்குவதற்கு இவ்வரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. 2018-19இல் 1,32,314 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் கண்டறியப்பட்டனர். அவர்களில் 1,24,011 குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளிலும், 8,303 குழந்தைகளுக்கு வீட்டிற்கு சென்றும் கல்வி வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 2018-19 ஆம் ஆண்டில் ரூ.5,487.23 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்குழந்தைகளுக்கு வழங்கப்படும் ஏனைய வசதிகள் பின்வருமாறு:

சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் வசதிகள்

| வ. எண் | வசதிகள் | குழந்தைகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | உதவி உபகரணங்கள் | 8,854 | 218.98 |
| 2. | பாதுகாவலர் பயணப்படி | 8,000 | 479.99 |
| 3. | போக்குவரத்துப் பயணப்படி | 21,800 | 1,281.03 |
| 4. | பிரெய்லி புத்தகங்கள் | 1,015 | 3.23 |
| 5. | பெரிய எழுத்து அச்சுப் புத்தகங்கள் | 3,227 | 10.44 |
| 6. | மாணவிகளுக்கான ஊக்கத்தொகை | 30,000 | 600.00 |
| 7. | சிறப்புப் பராமரிப்புத் தொகை | 8,303 | 198.07 |

### *2.3.8.ஆரம்பகால ஆயத்தப் பயிற்சி மையம்*

பிறந்தது முதல் 6 வயது வரையிலான சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்காக 85 ஆரம்ப கால ஆயத்தப் பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் 2018-19ஆம் ஆண்டில் 1,417 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள், சிறப்புக் கல்வி மற்றும் தேவைக்கேற்ற உடல் இயக்கப்பயிற்சிகள் மூலம் பயனடைந்துள்ளனர். 2018-19இல் 258 குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு முறையான பள்ளிகளில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

### 2.4. உட்கட்டமைப்பு வசதிகள்

அரசு பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் 2011-12 ஆம் ஆண்டு முதல் 2018-19 ஆம் ஆண்டு வரை ரூ.1,155.35 கோடி செலவில் புதிய தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வசதி, பள்ளிக் கட்டடங்கள் பழுது பார்த்தல் ஆகிய 52,483 கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 2018-19 ஆம் ஆண்டில் மட்டும் ரூ.54.68 கோடி செலவில் 1,350 கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 2.5. கல்விசார் குறியீடுகள்

அனைத்துக் கல்விசார் செயல்பாடுகளின் விளைவுகளைக் கல்விசார் குறியீடுகள் மூலமாக எளிதில் மதிப்பிட இயலும். கல்வி முறை சார்ந்த இலக்கினை நோக்கிச் செயல்படுவதில் தற்போதைய நிலையினை அல்லது மாற்றத்தை அளவீடு செய்திட கல்விசார் குறியீடு உதவுகிறது. கல்விசார் குறியீடுகள் சிலவற்றின் விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### *2.5.1. மொத்த சேர்க்கை விகிதம்*

தொடக்கக் கல்வியில் வயது வரம்பின்றி (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கைக்கும், (6+ முதல் 10+ வயதுக்கு உட்பட்ட) தொடக்க நிலையில் தகுதியான பள்ளி வயது குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள விகிதமாகும்.

### *2.5.2. நிகர சேர்க்கை விகிதம்*

தொடக்கக் கல்வியில் (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) பயிலும் வகுப்புக்கேற்ற வயதுடைய மாணவர்களின் எண்ணிக்கைக்கும், மக்கள் தொகையில் 6+ முதல் 10+

வயதுடைய பள்ளி வயதுக் குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும்.

*2.5.3. தக்க வைத்தல் விகிதம் (தொடக்க நிலை)*

தொடக்க நிலையில் தக்க வைத்தல் விகிதம் என்பது 5 ஆம் வகுப்பு மாணாக்கர் சேர்க்கைக்கும் நான்கு ஆண்டுகளுக்கு முன்பான 1 ஆம் வகுப்பு மாணாக்கர் சேர்க்கைக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும்.

*2.5.4. தக்க வைத்தல் விகிதம் (நடுநிலை)*

நடுநிலையில் தக்க வைத்தல் விகிதம் என்பது 8 ஆம் வகுப்பு மாணாக்கர் சேர்க்கைக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பான 6 ஆம் வகுப்பு மாணாக்கர் சேர்க்கைக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும்.

*2.5.5. இடை நிற்றல் விகிதம்*

ஒரு குறிப்பிட்ட வகுப்பில் மொத்த மாணாக்கர் சேர்க்கைக்கும் அதே ஆண்டில் கல்வியைத் தொடர இயலாத மாணாக்கர் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும்.

### *2.5.6. மாற்றல் விகிதம்*

மாற்றல் விகிதம் என்பது 5 ஆம் வகுப்பிலிருந்து 6 ஆம் வகுப்பிற்கு செல்லும் குழந்தைகளைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. இது தொடக்க நிலையில் 5 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர் எண்ணிக்கைக்கும், அதே ஆண்டில் 6 ஆம் வகுப்பில் சேர்ந்த மொத்த மாணாக்கர் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும்.

### *2.5.7. மாணவர் ஆசிரியர் விகிதம்.*

மாணவர் ஆசிரியர் விகிதம் =

$$\frac{\text{பள்ளியில் குறிப்பிட்ட பிரிவில் மொத்த மாணவர் சேர்க்கை}}{\text{அக்குறிப்பிட்ட பிரிவில் உள்ள மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை}}$$

**கல்விசார் குறியீடுகள்** (2018-19)

| குறியீடுகள் | தொடக்க நிலை | நடுநிலை |
|---|---|---|
| மொத்த சேர்க்கை விகிதம் | 106.55 | 106.45 |
| நிகர சேர்க்கை விகிதம் | 99.88 | 99.25 |
| தக்க வைத்தல் விகிதம் | 99.25 | 98.70 |
| இடை நிற்றல் விகிதம் | 0.80 | 1.35 |
| மாணவர் ஆசிரியர் விகிதம் | 22.10 | 23.60 |

### *2.5.8. சேர்க்கையில் சம வாய்ப்பு*

அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்பது பள்ளி வசதியும், சம வாய்ப்புச் சூழ்நிலையும் ஒருங்கிணையும் போதுதான் உறுதி செய்யப்படுகிறது. தொடக்கக்கல்வியில் பால், இன வேறுபாடின்றி மாணாக்கர்களைச் சேர்க்கவும் இடைநிற்றல் இன்றி மாணாக்கர்களைப் பள்ளியில் தக்க வைத்து கற்றல் விளைவுகளை முழுமையாக அடைவதற்கும் சிறப்பு செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்-பட்டுள்ளன. மேலும், சிறப்பு முயற்சிகள் மற்றும் உத்திகளின் மூலம் பெண் குழந்தைகள், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகள் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள், நகர்ப்புற வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகள், சிறுபான்மை வகுப்பினர் குழந்தைகள் மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் ஆகிய அனைவரும் தொடக்கக் கல்வியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

### *2.5.9. மாணாக்கர் சேர்க்கையில் பாலின விகிதம்*

2018-19 ஆம் கல்வியாண்டில் தொடக்க நிலை வகுப்புகளில் ஆண், பெண் மாணவர் சேர்க்கை விகிதம் முறையே 51.90 மற்றும் 48.10 விழுக்காடு எனவும்

நடுநிலைப் வகுப்புகளில் முறையே 51.54 மற்றும் 48.46 விழுக்காடு எனவும் உள்ளது.

## 2.6. குழந்தை-மையக் கல்வி

மாணவர்களின் ஆளுமையில் கற்றல் நிகழ்வுகள் இயல்பாகவும், இனிமையாகவும் அவர்களின் உள்ளார்ந்த திறன்களை வளர்க்கக் கூடியதாகவும் அமைவதே குழந்தை-மையக் கல்வி ஆகும். குழந்தை-மையக் கல்வியினை அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது.

### *2.6.1. எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக்கற்றல்*

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 3 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக்கற்றல் மூலம் கற்றல் கற்பித்தல் நடைபெறுகிறது. இம்முறையானது பல்வேறு செயல்பாடுகளையும் உள்ளடக்கி, மாணவர்கள் கற்கும் வேகத்திற்கேற்ப சக மாணவர்களின் ஒத்துழைப்போடும் தானாகவும் மனமகிழ்வுடன் கற்கும் வகையில் அமைந்துள்ளது. மதிப்பீடானது மாணவர்களின் கற்றல் விளைவுகளை வெளிக்கொணரும் வகையில்

அமைந்துள்ளது. இதன் நோக்கம் கற்றல் வழிமுறைகளைப் பின்பற்றுவது மட்டுமின்றி அவர்களின் அறிவுத் திறனை தூண்டச் செய்வது ஆகும். இம்-முறையானது ஒவ்வொரு மாணவரும் கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளில் கலந்துரையாடி, சிந்தித்து, ஆர்வத்துடன் கேள்வி கேட்டு, மதிப்பீட்டில் பயமில்லாமலும் தயக்கமில்லாமலும் தொடர்ச்சியாக கற்றலில் ஈடுபடக்-கூடிய சூழலை உருவாக்கி அவர்களின் தனித்திறனையும் படைப்பாற்றலையும் வெளிக் கொணர்வதற்கு வழி செய்கிறது.

### *2.6.2. எளிமைப்படுத்தப்பட்ட படைப்பாற்றல் கல்வி*

எளிமைப்படுத்தப்பட்ட படைப்பாற்றல் கல்வி அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு நடைமுறையில் உள்ளது. இம்முறை அனைத்து மாணவர்களையும் கற்றல் செயல்பாடுகளில் நேரிடையாக ஈடுபடுத்தி, ஆசிரியரின் உதவியுடன் கற்றல் திறன்களை வளர்ப்பதற்கு வாய்ப்பளிக்கிறது.

### *2.6.3. படைப்பாற்றல் கல்வி*

கற்பவரை மையப்படுத்தும் படைப்பாற்றல் கல்வி முறையில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் கற்றல் செயல்பாடுகளில் நேரிடையாக ஈடுபடுகின்றனர். கற்பவரை "கற்பதற்காகக் கற்க" என்பதில் ஈடுபடுத்துவதே படைப்பாற்றல் கல்வியின் நோக்கமாகும். மாணவர்கள் தங்களின் அறிவுத் திறனை மேம்படுத்திக் கொள்ள படைப்பாற்றல் கல்வியின் கற்கும் சூழல் பெரிதும் உதவி புரிகிறது. ஒவ்வொரு மாணவரும் அறிந்துள்ள தகவல்களை அறிவுத் திறனாக மாற்றுவதற்கு ஆசிரியர் வழிகாட்டியாகச் செயல்படுகிறார். வகுப்பறையில் மாணவர்கள் சிறுசிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, அவர்கள் கலந்துரையாடுவதற்கும், சிந்திக்கவும் கேள்வி கேட்கவும் வாய்ப்பளிக்கப்படுகிறது. மாணவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணர்வது மட்டுமல்லாமல் அவர்கள் பாடம் சார்ந்த புரிதலையும் மன-வரைபடம் வெளிப்படுத்துகிறது. மாணவர்களின் தனித்தன்மையை எளிதாக ஆசிரியர் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது.

இதன் சிறப்புக் கூறுகள் பின்வருமாறு:

- தயக்கமின்றி, பயமின்றி கற்றல் நடைபெற இம்முறை உதவுகிறது
- பாடப்பொருளின் மையக் கருத்தினைப் புரிந்து கொள்ள உதவுகிறது
- தேர்வுகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள உதவுகிறது
- சிந்திக்கும் திறனையும், மன-வரைபடம் வரையும் திறனையும் படைப்பாற்றல் கல்வி முறை மேம்படுத்துகிறது
- மாணவர்கள் தாங்கள் கற்று உணர்ந்ததை வெளிப்படுத்துவதற்குரிய ஆற்றலை வளர்க்கிறது

**2.7.பணியிடைப் பயிற்சி**

***2.7.1.ஆசிரியர்களுக்கான பயிற்சி***

தமிழக அரசானது கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு கலைத் திட்டம் மற்றும் பாடத் திட்டத்தினை மாற்றி அமைத்துள்ளது. இதன் முதற்கட்டமாக 2018- 19 ஆம் கல்வியாண்டில் 1, 6, 9 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு புதிய பாடப் புத்தகங்கள் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டத்தில் மேற்கொள்ளப்-

பட்ட மாற்றங்களைப் புரிந்து செயல்-படுவதற்காகவும், புதிய பாடப்புத்தகங்களைக் கையாளுவதற்காகவும், எதிர்-பார்க்கப்படும் கற்றல் விளைவுகள், கற்பிக்கும் முறைகள் மற்றும் மதிப்பீட்டு முறைகள் குறித்த பணியிடைப் பயிற்சி ஆசிரியர்களுக்கு ரூ.1,665.36 இலட்சம் செலவில் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன உதவியுடன் வழங்கப்பட்டுள்ளது. 2019-20 ஆம் கல்வியாண்டில் மீதமுள்ள வகுப்புகளுக்கு (2, 3, 4, 5, 7, 8, 10, 12) மாற்றியமைக்கப்பட்ட கலைத் திட்டத்தின்படி புதிய பாடப்புத்தகங்கள் வழங்க அரசு நடவடிக்கை மேற்-கொண்டுள்ளது. ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி 2019-20 ஆம் கல்வியாண்டிலும் தொடர்ந்து நடத்தப்படும்.

### *2.7.2.தலைமை ஆசிரியர்களுக்கான பள்ளி தலைமைப் பண்பு மேம்பாட்டுத் திட்டம்*

பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அவர்தம் தலைமைப்பண்புகளை வளர்த்துக்கொள்ள ஒவ்வொரு வருடமும் பள்ளித் தலைமைப் பண்பு மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் கீழ் 2018-19 ஆம் ஆண்டில் 306 மாநிலக் கருத்தாளர் குழு உறுப்பினர்களுக்கு ரூ.7.50 இலட்சம் செலவில் தலைமைப் பண்புகளுக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக இப்பயிற்சி 6,180 பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவில் ரூ.131.04 இலட்சம் செலவில் வழங்கப் பட்டுள்ளது. 836 வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கும் ரூ.17.12 இலட்சம் செலவில் நிர்வாகத் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 1,92,758 ஆசிரியர்களுக்கும் இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### *2.7.3.சிறப்புப் பயிற்றுநர்கள் மற்றும் இயன்முறை பயிற்றுநர்களுக்கான பயிற்சி*

ஒவ்வொரு ஒன்றியத்திலும் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளை அவர்களின் குறைபாடுகளுக்கு ஏற்ப கையாளுவதற்கு சிறப்பு பயிற்றுநர்கள் மற்றும் இயன்முறைப் பயிற்றுநர்கள் உள்ளனர். மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 அறிமுகத்திற்குப்பின் 21 வகையான மாற்றுத்திறன் குறைபாடுகளைக் கண்டறிவதற்கும், அத்தகைய குழந்தைகளுக்குப் பயிற்சி வழங்கவும் அனைத்து வட்டார வள மையங்களில் பணிபுரியும் சிறப்புப் பயிற்றுநர்கள் மற்றும் இயன்முறை பயிற்றுநர்களுக்கான பயிற்சி வழங்கப் பட்டுள்ளது.

## 2.8. முன்பருவக்கல்வி

### *2.8.1. அங்கன்வாடி மையங்களுக்கு கற்றல் உபகரணங்கள்*

முன்பருவக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமிழக அரசு அங்கன்வாடிப் பணியாளர்களுக்குப் பயிற்சியும், மையங்களை வளப்படுத்த பல்வேறு கற்றல் உபகரணங்களையும் வழங்கியுள்ளது. இதற்கென 2018-19 ஆம் ஆண்டில் ரூ.205.00 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.


### *2.8.2.தேர்வு செய்யப்பட்ட அங்கன்வாடி மையங்களில் முன்பருவக்கல்வி (எல்.கே.ஜி/யூ.கே.ஜி) அறிமுகம்*

அரசு நடுநிலைப்பள்ளி வளாகத்தில் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கும் வண்ணம் அவர்களை ஊக்குவிக்க மாண்டிசோரி கல்வி முறை எல்.கே.ஜி / யூ.கே.ஜி வகுப்புகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும், மாணவர்களின் கற்றல், பேசுதல், எழுதுதல் ஆகிய திறன்களை ஆங்கில மொழியில் மேம்படுத்தவும் உதவிடும். இத்திட்டத்தின் மூலம் 2,381 அங்கன்வாடி

மையங்களில் பயிலும் சுமார் 52,000 மாணவர்கள் பயன் பெறுவர்.

### 2.9. கல்வித் தகவல் மேலாண்மை முறைமை(EMIS)

கல்வித் தகவல் மேலாண்மை முறைமையானது, பள்ளிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் பற்றிய முழுத் தகவல்களை உள்ளடக்கியது. இத்தகவல்கள் அனைத்து பங்கேற்பாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் கிடைக்கச் செய்வதன் மூலம் கொள்கை முடிவுகள் எடுக்க வழிகோலுகிறது.



பள்ளிக் கட்டடங்கள், விளையாட்டு மைதான வசதிகள், குடிநீர், கழிவறை, சுத்தம் சுகாதாரம் போன்ற தகவல்கள் அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களால் இம்முறைமையில் உள்ளீடு செய்யப்படுகின்றன. இதனால் பள்ளியின் உட்கட்டமைப்பு தேவை குறித்த அறிக்கைகளை எளிதில் பெறமுடியும்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 பிரிவு 12(1)(c)ன் கீழ் இணைய வழியாக மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பித்தல், சரிபார்த்து தேர்ந்தெடுத்தல் போன்றவை இம்முறைமையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதனால் ஒளிவு மறைவற்ற தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தனியார் பள்ளிகளின் அங்கீகாரம் புதுப்பித்தல் / புதிய அங்கீகாரம் வழங்குதல் ஆகியவை இணைய வழி மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தனியார் பள்ளிகள் பள்ளி அங்கீகாரம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தலுக்குத் தேவையான ஆவணங்களுடன் எளிதில் விண்ணப்பிக்க இயலும். ஒப்புதல் வழங்குவதற்கு முன்னர் உரிய அலுவலர்கள் இந்த ஆவணங்களை சரிபார்த்துக் கொள்ள உதவுகிறது. புதுப்பித்தல் சான்று

ஒப்புதலுக்குப் பின்னர் பள்ளிகளுக்கு இணைய வழியாக மின்னஞ்சல் செய்யப்படுகிறது.

மாணவர்கள் தங்களின் பள்ளி மாற்றுச் சான்றிதழைத் தேவையான விவரங்களுடன் இணைய வழி மூலம் பெறலாம். மாற்றுச் சான்றிதழில் உள்ள விரைவுத் துலங்கல் குறியீட்டை பயன்படுத்தி அதனை சரிபார்த்து உறுதிப்படுத்த இயலும்.

ஆசிரியர்கள் இணைய வழி மூலம் பள்ளிப் பாடவேளை அட்டவணையை எளிதில் தயாரித்து பயன்படுத்த இயலும். இதன் மூலம் தங்கள் வகுப்புகளுக்கான பாடத் திட்டங்களைச் சிறப்பாகத் திட்டமிட இயலும்.

பள்ளி மாணவர்களுக்கான விலையில்லா பொருட்களுக்கான தேவைப்பட்டியல் மற்றும் அவற்றை விநியோகிப்பது குறித்த விவரங்கள் முழுமையாக இணைய வழியில் பதிவுசெய்யப் படுகிறது. இதன் மூலம் தேவைப்பட்டியல் பெறுவதற்கான காலம் மற்றும் பணிச்சுமை பெருமளவில் குறைக்கப்படுவதுடன், மாணவர் சேர்க்கையுடன் இணைக்கப்பட்டுள்ளதால் விபரங்கள் மிகத் துல்லியமாக பெறப்படுகிறது. இதன் மூலம் விலையில்லா பொருட்களை மிகக் குறைவான நேரத்தில்

சரிபார்த்து விநியோகிக்கவும் அனைத்து நிலைகளிலும் தகவல் பரிமாற்றம் செய்யவும் முடிகிறது.

தலைமையாசிரியர்களின் நிர்வாகப் பணிச் சுமையைக் குறைக்க வருகைப் பதிவேடுகள், விளையாட்டுப் பதிவேடுகள், உதவித் தொகை பதிவேடுகள் போன்ற முக்கியப் பதிவேடுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

சேகரிக்கப்பட்ட வங்கி கணக்கு விபரங்கள் உள்ளிட்ட மாணவரின் விபரங்கள் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு முதன் முறையாக இணைய வழியாக பகிரப்பட்டது. இதனால் ஊக்கத்தொகை பணப்பரிமாற்ற நடைமுறைகளுக்கான நேரம் வெகுவாக குறைக்கப்பட்டு, பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் பொதுவாக அக்டோபர் / நவம்பரில் செய்யப்படும் பணப்பரிமாற்றம் இம்முறை மே 2019 லேயே செய்யப்பட்டுள்ளது.

அரசு தேர்வுகளை நடத்துவதற்கு, தேர்வு எழுதும் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் பெயர் பட்டியல் துல்லியமாக தயாரிப்பது மிக முக்கியமானதாகும். தற்போது இணைய வழி மூலம் மாணவர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்படுவதால், நிர்வாகச் சுமை மற்றும் கையேடு பிழைகள் தவிர்க்கப் படுவதுடன் தகவல்கள் அனைத்தும்

தடையில்லாமல் ஒருங்கிணைப்பது உறுதிப்படுத்தப்-படுகிறது.

## 2.10. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு

தமிழ்நாடு அரசு 2012–13 ஆம் கல்வியாண்டில் அனைத்து தொடக்க மற்றும் உயர் தொடக்க வகுப்புகளில் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையை அறிமுகப்படுத்தியது. இம்முறையானது கருத்துப்-பரிமாற்றம், ஒருங்கிணைப்பு, பங்கேற்பு மற்றும் கற்றலுக்கு உகந்த சூழல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் கற்றல் அனுபவங்களைப் பெற வழிவகுக்கிறது. ஒவ்வொரு மாணவனின் தனித்திறனை அங்கீகரித்தல் இம்முறையின் சிறப்பம்சமாகும். மாணவர்களின் கற்றல் நிகழ்வுகளின் அடைவுத்-தன்மையை அறிவதற்கும் குறைகளை களைவதற்கும் இம்முறை வழிவகுக்கிறது. பள்ளி அளவில் மாணவர்களின் கல்வி மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளை மதிப்பிட உதவுகிறது. மாணவர்கள் புரிதலுடன் கற்று, கற்றதை அன்றாட வாழ்வில் செயல்படுத்துவதற்கு உதவுகிறது.

### *2.10.1. காலமுறை மதிப்பீடு*

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 2 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் மொழி மற்றும் கணிதப்பாடங்களில் அடிப்படைத்திறன்கள் பெற்றுள்ளதை உறுதி செய்வதே காலமுறை மதிப்பீட்டின் முக்கிய குறிக்கோளாகும். இரண்டு கட்டங்களாக நடைபெறும் இம்மதிப்பீடு ஒவ்வொரு மாணவரும் அவரது அடைவுத்திறனில் முன்னேற்றம் காணத் தேவையான செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆசிரியர்களுக்கு உதவியாக உள்ளது.

## 2.11. கற்றல் மேம்பாட்டுத் திட்டம்

### *2.11.1. ஆங்கிலம்-தமிழ் – பட அகராதி*



1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் ஆரம்ப எழுத்தறிவு, குறிப்பாக மொழியைக் கையாளும் திறனை மேம்படுத்த ஆங்கிலம் - தமிழ் – பட அகராதி 37,999 அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும்

பள்ளிகளுக்கு 2018-19 ஆம் கல்வியாண்டில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வகராதியில் ஆங்கில வார்த்தைகளுக்கான எழுத்துக்கோர்வைகள், உச்சரிப்பு முறை, இணைச்சொற்கள், தமிழில் பொருள், எடுத்துக்காட்டுத் தொடர்கள் மற்றும் விளக்கப் படங்கள் இடம்பெற்றுள்ளன. கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகள் அனைத்தும் மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ.101.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### *2.11.2.நில வரைபடத்திறன் பயிற்சிப் புத்தகம்*



நில வரைபடத்திறன் பயிற்சிப் புத்தகம் 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 2018–19 ஆம் கல்வியாண்டில் ரூ.154.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. இப்புத்தகம் மாணவர்களிடையே வரைபடத்திறனை வளர்ப்பதோடல்லாமல் அவர்கள் சமூக அறிவியல் பாடத்தை ஆர்வமுடன் கற்பதற்கும் தூண்டுகோலாய் அமைகிறது. இப்புத்தகம் ஆசிரியர்கள், சமூக அறிவியல் பாடங்களை ஆர்வத்துடன் திறம்படக்கற்பிப்பதற்கு

உதவுவதோடு மாணவர்களிடையே கற்றல் எளிதாக நடைபெறவும் உதவுகிறது. இப்புத்தகத்தில் வழங்கப் பட்டுள்ள பயிற்சிகள் பாடநூல்களை மையமாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது.

### *2.11.3. குழந்தைப்பாடல்கள் அடங்கிய காணொலி குறுந்தகடுகள்*

ஒலிகளை அறிமுகப்படுத்தி, மொழியை மகிழ்வுடனும் ஊக்கத்துடனும் கற்பதற்குப் பாடல்கள் அடங்கிய காணொலி குறுந்தகடுகள் சிறப்பாக உதவி புரிகின்றன. குழந்தைகள் ஒலி-ஒளி வடிவத்தை விரும்புவதால் கற்றல் எளிமையாக்கப் படுகிறது. குழந்தைகள் விரும்பத்தக்க வகையில் அசைவூட்டும் காணொலிப்பதிவுகளுடன் கூடிய பாடல்கள், கதைகள் மற்றும் செயல்பாடுகளை விரைவுத் துலங்கல் குறியீட்டுடன் இணைத்து முதலாம் வகுப்பிற்கான புதிய ஆங்கிலம், தமிழ், கணிதம், மற்றும் சூழ்நிலையியல் புத்தகங்கள் காணொலி குறுந்தகடுகளில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. 2018-19 ஆம் ஆண்டில்



ரூ.4.06 இலட்சம் செலவில் 4,088 குறுவள மையங்களுக்கு இக்காணொலி குறுந்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.

### *2.11.4. ஆங்கில கற்றல் உபகரணப் பெட்டி*

ஆண்டுக்கு இருமுறை பள்ளிகளில் மாணவர்களுக்கு நடத்தப்படும் காலமுறை மதிப்பீட்டின் முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு, மாணவர்களுக்கு ஆங்கில மொழியில் பயிற்சி அதிகம் தேவைப்படுகிறது என கண்டறியப் பட்டுள்ளது. கற்றல் உபகரணப் பெட்டியில் உள்ள கற்றல் பொருட்கள் நவீன கற்றல் கருவிகள் மொழியினைச் சிறந்த முறையில் கற்பதற்கு உறுதுணை புரிகிறது. எனவே, 22,400 அரசு தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களின் ஆங்கில அறிவு மேம்பட 14 உபகரணங்களை உள்ளடக்கிய ஆங்கில கற்றல் உபகரண பெட்டிகள் ரூ.1,344.00 இலட்சம் செலவில் 2018-19 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.



### *2.11.5. அறிவியல் மற்றும் கணித உபகரணப் பெட்டி – வழிகாட்டிக் கையேடு*

2018-19 ஆம் ஆண்டில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் மாண-வர்கள் பயன்பெறும் வகையில் ரூ.4.37 இலட்சம் செலவில் அறிவியல் மற்றும் கணித உபகரணப்பெட்டி வழிகாட்டி கையேடுகள் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கையேடுகள் மாணவர்கள் அன்றாட வாழ்வில் அறிவியல் மற்றும் கணிதத்தின் பயன்பாட்டை புரிந்து கொள்ள உதவுவதுடன் அப்பாடங்கள் சார்ந்த கற்றல் திறனையும் மேம்படுத்த உதவுகின்றன.




### *2.11.6. குறைதீர் கற்பித்தல்*

மெல்லக் கற்கும் மாணவர்களுக்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் குறைதீர் கற்றல் பயிற்சிக்கையேடும், ஆசிரியர் கையேடும் மாணவர்களின் அடிப்படைத் திறனை மேம்படுத்த ரூ.471.31

இலட்சம் செலவில் வடிவமைக்கப்பட்டு இதன் மூலம் 5,42,476 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.




### *2.11.7. பள்ளித் தரநிலை மற்றும் மதிப்பீடு*

பள்ளித் தரநிலை மற்றும் மதிப்பீடு திட்டம் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 2016-17 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்-பட்டு வருகிறது. இத்திட்டம் பள்ளியை மதிப்பீடு செய்வதற்கான ஒரு விரிவான செயற் கருவியாகும். 2018-19 ஆம் ஆண்டில், பள்ளிகளின் சுயமதிப்பீடு முடிக்கப்பட்டு அதன் விவரங்கள் தேசியக் கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாக நிறுவனத்தால் பராமரிக்கப்படும் இணைய-தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. பள்ளிப் புறமதிப்பீடு மார்ச், 2019 இல் தெரிவு செய்யப்பட்ட 8,260 பள்ளிகளில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

## 2.12. பிற திட்டங்கள்/ செயல்பாடுகள்

### *2.12.1. விளையாட்டு மற்றும் உடற்கல்வி*

விளையாட்டுகளில் ஈடுபாட்டுடன் பங்கேற்பதை ஊக்கப்படுத்துவதன் மூலமாக மாணவர்கள் உடல் மற்றும் மனநலத் தகுதியுடன் இருப்பதை உறுதிசெய்வதே விளையாட்டு மற்றும் உடற்கல்வியின் நோக்கமாக உள்ளது. தேவையான விளையாட்டு உபகரணங்களை வழங்குதல், மாணாக்கர்கள் குறிப்பாக மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்பதை ஊக்குவிப்பதோடு திறமையை மேம்படுத்தவும் உதவுகிறது. 2018-19 ஆம் ஆண்டில், ரூ.719.60 இலட்சம் செலவில் 7,432 தொடக்கப் பள்ளிகளுக்கும் மற்றும் 5,279 நடுநிலைப் பள்ளிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளன.

### *2.12.2.தற்காப்புக் கலைப் பயிற்சி*



மாணவியர் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், எதிர்பாராத சம்பவங்கள் நிகழாமல் தடுக்கவும் தற்காப்புக் கலைப் பயிற்சி உதவுகிறது.

2018-19 ஆம் ஆண்டில் அரசு நடுநிலைப் பள்ளி-களில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் 7,043 மாணவிகளுக்கான இப்பயிற்சியினை அளிக்க ரூ.633.87 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### *2.12.3. உள்ளடக்கிய கல்விக்கான மாநில ஆதார வள மையம்*

பிறந்தது முதல் 18 வயது வரையுள்ள சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கென சென்னையில் உள்ளடக்கிய கல்விக்கான மாநில ஆதார வள மையம் அமைக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு வகையான குறைபாடுகளுக்குப் பயிற்சி பெறும் வகையில் தேவையான உபகரணங்களுடன் பயிற்சி மையம் உள்ளது. இம்மையம் பேச்சு, கேட்டல், பார்வைக்குறைபாடு, தற்புணை ஆழ்வு (autism), மூளை முடக்குவாதம் (Cerebral palsy) குறைபாடுகளைக் கொண்ட குழந்தைகளுக்கு குறை நீக்கும் பயிற்சிகளை வழங்கி வருகிறது. மேலும், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் பெற்றோர்-களுக்கு வழிகாட்டுதல்களும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுவருகிறது. இதுவரை 73 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். பல்வேறு சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளில் குறிப்பாக

சமூகத்தில் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவுகளைச் சார்ந்த குழந்தைகள் மாநில ஆதார வள மையத்தில் ஆர்வமுடன் சிறப்புப் பயிற்சியில் பங்கேற்று தொடர்பு கொள்ளும் திறனில் நல்ல முன்னேற்றம் அடைந்து வருவதைக் காணமுடிகிறது.

### *2.12.4. பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள்*

2018-19 ஆம் கல்வி ஆண்டில் 31,293 அரசுப் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பெண் கல்வி, மகளிர் திறன் மேம்பாடு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, ஓவியம், கட்டுரை, பேச்சுப் போட்டிகள் ரூ.95.64 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் 30,35,980 மாணவர்கள் பங்கேற்றனர்.

### *2.12.5. சுவர் ஓவியம்*

2018-19 ஆம் ஆண்டில், அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 3,758 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கல்வியின் முக்கியத்துவம், மாணவர் சேர்க்கை, பெண்கல்வி, சமூக ஈடுபாடு, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு போன்ற தலைப்புகளின் கீழ் சுவர் ஓவியங்களை வரைய ரூ.112.74 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### 2.12.6. பள்ளி ஆண்டு விழா

2018-19 ஆம் ஆண்டில் 4,436 அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆண்டு விழா கொண்டாட்டங்கள் ரூ.197.24 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

### 2.12.7. பள்ளிப் பரிமாற்றத் திட்டம்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பள்ளிகளை இணைத்து மாணவர்கள் தங்கள் அனுபவங்களை பரிமாறிக் கொள்ள வாய்ப்பை ஏற்படுத்துவதே தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட







பள்ளிப் பரிமாற்றத் திட்டத்தின் நோக்கமாகும். 2018–19 ஆம் ஆண்டில் 11,400 மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்திற்காக ரூ.171.00 இலட்சம் நிதி செலவிடப் பட்டுள்ளது.

### *2.12.8. தேசிய புனைவுத் திட்ட செயல்பாடுகள் (Rashtriya Avishkar Abhiyan Activities) – (தொடக்கநிலை)*

#### *2.12.8.1. உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களைக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லல்*

மாணவர்களுக்கு உயர் கல்வியின் அவசியத்தை உணர்த்துவதற்காகவும், தன்னம்பிக்கையினை வளர்ப்பதற்காகவும், உயர் கல்வியை தொடர்வதற்கு அவர்களிடையே உள்ள தயக்கத்தினை நீக்குவதற்காகவும், 2018-19 ஆம் ஆண்டு ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்தும் 8 ஆம் வகுப்பில் பயிலும் இரு மாணவர்கள் வீதம் மொத்தம் 826 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்விச்சுற்றுலாவாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

#### *2.12.8.2. நேரடி கற்றலுக்கான மாநிலத்திற்குள்ளான களப்பயணம்*

கணிதம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் ஆர்வமுள்ள 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் 2018-19 ஆம் ஆண்டில் ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்தும் இரு மாணவர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு கல்வி சுற்றுலாவாக அருங்காட்சியகம், கோளரங்கம் மற்றும் உயிரியல் பூங்காவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

## 2.13. சிறப்பு மானியங்கள்

### *2.13.1. பள்ளி மானியம்*

2018-19 ஆம் ஆண்டில், 31,266 அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பள்ளி மானியமாக ரூ.9,343.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இம்மானியம் பள்ளி உபகரணங்கள் வாங்கவும் ஆண்டு பராமரிப்பிற்கான தொடர் செலவினங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

| வ. எண் | பள்ளியிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை | மானியத் தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | 1 முதல் 15 வரை | 12,500 |
| 2. | 16 முதல் 100 வரை | 25,000 |
| 3. | 101 முதல் 250 வரை | 50,000 |
| 4. | 251 முதல் 1000 வரை | 75,000 |
| 5. | 1000 க்கு மேல் | 1,00,000 |

### *2.13.2. நூலக மானியம்*

மாணவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை உண்டாக்குவதற்கான புதிய முயற்சியாக 3,527 அரசு நடுநிலைப் பள்ளிகளில் புதிய நூலகங்கள் தொடங்கவும்

புத்தகங்கள் வழங்கவும் ரூ.352.40 இலட்சம் செலவிடப் பட்டது.

### 2.14. பள்ளி மேலாண்மைக் குழு

பள்ளி நிர்வாகப் பொறுப்புகளும், அதிகாரமும் ஓரிடத்தில் குவியாமல் பரவலாக்கப்பட சமுதாயப் பங்கேற்பு மட்டுமே உதவும் எனக் கருதப்பட்டது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009இன் சரத்துகளை முழுமையாக நடைமுறைப்படுத்தும் பொறுப்பு முதற்கண் பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் உள்ளூர் அதிகார அமைப்புகளிடமே உள்ளது. 31,293 அரசுப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பெற்று செயலாற்றி வருகிறது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி சட்டம், 2009இன் வழிகாட்டுதல்களுக்கிணங்க பள்ளி வளர்ச்சித் திட்டத்தை உருவாக்கிச் செயல் படுத்துவதே இக்குழுக்களின் முக்கிய நோக்கமாகும். 2018-19 இல் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு வட்டார வள மையத்தில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி ரூ.422.44 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது. இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 குறித்த

விழிப்புணர்வும், அவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகளும் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

“கல்விச் சீர் திட்டம்” என்பது பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் முழுமையான பங்கேற்பின் மூலம் 4,777 பள்ளிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வாய்ப்பாக அமைந்த ஒரு திட்டமாகும். இதன் விளைவாக ரூ.2,101.40 இலட்சம் மதிப்புள்ள கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், தளவாடப் பொருட்கள், திறன்மிகு தொலைக் காட்சிகள், கணினிகள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் பொதுமக்களால் வழங்கப்பட்டுள்ளன.

**2.15. ஆங்கில வழிக் கல்வி**

தங்கள் குழந்தைகளை ஆங்கில வழிக் கல்வியில் சேர்க்க பெற்றோர்களிடையே காணப்படும் ஆர்வத்தைக் கண்டறிந்து சில அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. 2018-19 ஆம் ஆண்டில், 14,636 அரசு பள்ளிகளில் 6,34,110 குழந்தைகள் ஆங்கில வழிக் கல்வியில் சேர்க்கப்பட்டனர். ஆங்கில வழிக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தொடர்ந்து பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. 2018-19 ஆம் ஆண்டில் ஆங்கில வழிக் கல்விக்கான திட்டம் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## 2.16. புதிய சீருடை – அறிமுகம்

2019-20 ஆம் ஆண்டில், விலையில்லா சீருடைத் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு புதிய வடிவமைப்புடன் கூடிய சீருடை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

| வகுப்புகள் 1 முதல் 5 வரை | வகுப்புகள் 6 முதல் 8 வரை |
|---|---|
|  |  |

புதியதாக வடிவமைக்கப்பட்ட விலையில்லா சீருடையின் விவரம் பின்வருமாறு:

| வகுப்புகள் | பாலினம் | புதியதாக வடிவமைக்கப்பட்ட சீருடை |
|---|---|---|
| 1 முதல் 5 வரை | ஆண் | கரும்பச்சை அரைக்கால் சட்டை மற்றும் கட்டம் போட்ட இளம் பச்சை அரை கை மேல்சட்டை |
| | பெண் | கரும்பச்சை அரைப் பாவாடை மற்றும் கட்டம் போட்ட இளம் பச்சை அரை கை மேல்சட்டை |
| 6 முதல் 8 வரை | ஆண் | சந்தன நிற முழுக்கால் சட்டை மற்றும் கட்டம் போட்ட சந்தன நிற அரை கை மேல்சட்டை |
| | பெண் | சந்தன நிற முழுக்கால் சட்டை, கட்டம் போட்ட சந்தன நிற சல்வார்கமீஸ் மற்றும் சந்தன நிற மேல் அங்கி |

## 2.17. நிதி ஒதுக்கீடு

2019-20 ஆம் ஆண்டிற்கு தொடக்கக் கல்விக்கு ரூ.13,919.74 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

# 3. இடை நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

## 3.1. முன்னுரை

தமிழ்நாடு அரசு, பள்ளிகளில் தரமான கல்வி வழங்கிட மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. மாணவர்களை உருவாக்குவதில் இடைநிலைக் கல்வியின் முக்கிய பங்கினை உணர்ந்து, மாணவர்களின் கற்றல் அடைவுகளை மேம்படுத்திட, பள்ளிகளில் கற்றலுக்கான சூழ்நிலை மற்றும் ஆசிரியர் திறன் ஆகியவை மேம்படுத்தப்படுகிறது. மாணவர்களின் கல்வித்தகுதி, உள்ளார்ந்த ஆர்வம் ஆகியவற்றின் அடிப்படையில் மேல்நிலைக்கல்விப் பிரிவைத் தேர்ந்தெடுப்பதற்கு உரிய திறன்களை இடைநிலைக் கல்வி வழங்குகிறது. தங்கள் கல்வித் தகுதி மற்றும் ஆர்வத்திற்கேற்றவாறு உயர் கல்வியைத் தேர்ந்தெடுக்கவும், வேலை வாய்ப்பினைப் பெறுவதற்குமான திறமைகளை வளர்த்தெடுக்கிறது.

## 3.2. தொலைநோக்கு

மாணவர்களின் அறிவாற்றல், விழுமியங்கள் மற்றும் திறன்களை உயர்த்துவதற்கான கற்றல் கற்பித்தலுக்குரிய

முழுமையான சூழ்நிலையை உருவாக்கி வளர்க்கும் கல்வி அமைப்பினை ஏற்படுத்துதல்.

### 3.3. நோக்கங்கள்

- சமூக – பொருளாதாரத் தடைகள் மற்றும் பாலினப் பாகுபாடின்றித் தரமான இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி அளித்தல்
- இடைநிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் 100 விழுக்காடு மாணவர்களைத் தக்க வைத்தலை உறுதி செய்தல்
- மாணவர்களுக்குத் தேவையான மென் திறன்களையும், தொழில் திறன்களையும் ஒருங்கிணைத்து அளிப்பதன் மூலம் வேலை வாய்ப்பிற்கான திறமைகளை மேம்படுத்துதல்
- கற்றலுக்கு உகந்த மற்றும் மகிழ்ச்சியான சூழ்நிலைக் கல்வியை அளிக்கத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் மேம்படுத்துதல்
- கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் உள்ள மாதிரிப் பள்ளிகள் மற்றும் பெண்கள் விடுதிகளின்

செயல்திறனை மேம்படுத்துவதன் மூலம் சமூக சமத்துவம் மற்றும் சரி நிகர் பங்கேற்பு ஆகியவற்றை உறுதிசெய்யும் முன்மாதிரி நிறுவனங்களாக அவற்றை முன்னிறுத்துதல்

- அணுகல் இலக்கினை அதிகரிக்க கட்டணம் இல்லா போக்குவரத்து வசதிகளும், தேவை அடிப்படையிலான தங்கும் இடவசதிகளும் கிடைப்பதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்

- சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்குத் தேவையான உதவிகள் மற்றும் பாதுகாப்பினை அளித்தல்

- மாணவர்களுக்கு கல்வி சார்ந்த, கல்வி இணைச் செயல்பாடுகள் சார்ந்த மற்றும் கல்வி சாரா திறன்களில் பங்கு பெறவும், மிகச் சிறப்பாகச் செயல்படவும் தேவையான சம வாய்ப்புகளை அதிகப்படுத்துதல்

- இடைநிலை மற்றும் மேல்நிலைத் தேர்வுகளை எழுதும் மாணவர்களின் செயல்பாடுகளை மேம்படுத்த சிறப்பு முயற்சிகளைச் செயல் படுத்துதல்

- அறிவியல் கழகம், சுற்றுச்சூழல் மன்றம், செயல்திட்ட வழிக் கற்றல் மற்றும் கண்டறிந்து கற்றல் ஆகியவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலமாக அவர்களின் அறிவியல் மனப்பான்மையையும் அறிந்து கொள்ளும் ஆர்வத்தையும் மேம்படுத்துதல்

- தடகளம் மற்றும் விளையாட்டில் சிறப்புத் திறமைகளைக் கொண்ட மாணவர்களைக் கண்டறிந்து, திறமைகளை வளர்த்து மாவட்ட, மாநில, தேசிய அளவிலான போட்டிகளில் பங்குபெறக் கூடிய வகையில் வாய்ப்புகளை உருவாக்குதல்

- ஆசிரியர்களுக்குத் தொடர்ந்து பணியிடைப் பயிற்சிகள் வழங்குவதன் வாயிலாக அவர்களது கற்பித்தல் திறனை மேம்படுத்துதல்

- மருத்துவ முகாம்கள், விழிப்புணர்வு இயக்கங்கள் ஆகியவற்றின் வழியாக நலவாழ்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

- மாணவர்களுக்கு அவ்வப்போது வழி காட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகள் அளிக்கும் உதவிகளை விரிவுபடுத்துதல்

### 3.4. பள்ளி வசதி ஏற்படுத்துதல்

பள்ளி வசதிகளை ஏற்படுத்துதலே அனைவருக்கும் இடைநிலைக் கல்வி கிடைப்பதற்கான முக்கிய திறவுகோலாகும். பள்ளி வசதி இல்லாத குடியிருப்புப் பகுதிகளை புவியியல் தகவல் முறைமை (GIS) மூலம் கண்டறிய வரைபட தகவல் சேகரிப்பு பணி மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது. அதன் அடிப்படையில் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு பள்ளிவசதி ஏற்படுத்தப்படுகிறது. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியினை வழங்கும் நோக்கில் 2011-12 ஆம் ஆண்டு முதல் 1,079 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 604 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

**<u>தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள்</u>**

| வ. எண் | கல்வி ஆண்டு | நடுநிலைப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளி | உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளி |
|---|---|---|---|
| 1 | 2011-12 | 710 | 100 |
| 2 | 2012-13 | -- | 100 |
| 3 | 2013-14 | 50 | 100 |
| 4 | 2014-15 | 50 | 101 |
| 5 | 2015-16 | -- | 1 |
| 6 | 2016-17 | 19 | -- |
| 7 | 2017-18 | 150 | 102 |
| 8 | 2018-19 | 100 | 100 |
| | மொத்தம் | 1079 | 604 |

### *3.4.1. மாணவியர் விடுதி*

இடைநிலைக் கல்வி அளவில் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் இடையே கல்வியில் ஏற்படும் ஏற்றத்தாழ்வினைத் தடுப்பதற்கு கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் 100 மாணவியர்களுக்குத் தங்குமிட விடுதிகள் அமைக்கப்பட்டன. 14 முதல் 18 வயது பிரிவுக்குள் உள்ள 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களில் குறிப்பாக பட்டியல் இனத்தவர், பழங்-குடியினர், இதர பிற்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்கள்

ஆகியவற்றைச் சார்ந்த மாணவியர்களே இவ்விடுதிகளில் தங்கலாம். இவ்விடுதிகளில் சேர்வதற்கு கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயாவிலிருந்து தேர்ச்சி பெற்றுவரும் மாணவியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 2018-19 ஆம் ஆண்டு இந்த 44 மாணவியர் விடுதிகளில் 4,081 மாணவியர் தங்கிப் பயனடைந்தனர். இதற்கான மொத்தச் செலவு ரூ.1,074.48 இலட்சம் ஆகும்.

### *3.4.2. இடைநிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான உள்ளடக்கிய கல்வி*

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயில்வோரில் மாற்றுத் திறனாளிகள் உரிமைச்சட்டம் 2016 இன் கீழ் வரையறை செய்யப்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனுடன் கூடிய குழந்தைகள் அனைவரும் இத்திட்டத்தில் அடங்குவர். இடை நிலைப் பள்ளிகளில், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள், கல்வி செயல்பாடுகளில் பங்கு பெறுவதை மேம்படுத்துவதற்குக் கீழ்க்காணும் வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

- சிறப்பு ஆசிரியர்களை நியமனம் செய்தல்
- சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்குதல்

- மருத்துவ முகாம்கள்
- சுற்றுச் சூழல் மற்றும் கவன ஒருங்கிணைப்பை வளர்த்திடும் திட்டங்கள்
- உதவிக் கருவிகள் வழங்குதல்
- பாதுகாவலர் மற்றும் போக்குவரத்துப் படிகள் வழங்குதல்
- உதவியாளர் வசதியளித்தல்
- படித்துக் காட்டுவோருக்கான படி வழங்குதல்
- தனித்துவம் வாய்ந்த ஆதாரவள அறைகள்

மேற்குறிப்பிட்ட மேம்பாட்டுச் செயல்களால் 16,826 சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவ / மாணவியர் பயன்பெற்றனர். 2018-19 ஆம் ஆண்டில் ரூ.974.86 இலட்சம் இதற்குச் செலவிடப்பட்டது.

## 3.5.ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர் நியமனம்

பள்ளிகளில் தரமான கற்பித்தல் வேண்டும் என்பதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. அதை உறுதிப்படுத்தும் விதமாக தேவையான, தகுதியான ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்பி வருகிறது. காலிப் பணியிடங்கள் முறையாகக் கண்டறியப்பட்டு, உரிய வழிமுறைகளைப்

பின்பற்றி காலதாமதம் இன்றி நிரப்பப்படுகின்றன. அரசு மேற்கொண்ட தொடர் முயற்சியின் காரணமாக 2018-19 ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் பின்வருமாறு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| வ. எண். | பதவி | நியமன முறை | நிரப்பப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | முதுகலை ஆசிரியர் | நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வு | 860 |
| 2 | உதவியாளர் | நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வு | 162 |

மேற்கூறியவற்றோடு 2018-19ஆம் கல்வி ஆண்டில் கருணை அடிப்படையில் 49 இளநிலை உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## 3.6. உட்கட்டமைப்பு வசதிகள்

### *3.6.1. நபார்டு திட்ட கட்டுமானப் பணிகள்*

தரம் உயர்த்தப்பட்ட அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (RIDF) நபார்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகள் குறித்த

ஆண்டுவாரியான விவர அறிக்கை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | அனுமதிக்கப் பட்ட ஆண்டு | பயனடைந்த பள்ளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2012 | 131 | 152.73 |
| 2 | 2014 | 210 | 247.75 |
| 3 | 2015 | 155 | 208.62 |
| 4 | 2015 | 424 | 41.58 |
| 5 | 2016 | 228 | 355.57 |
| 6 | 2016 | 149 | 251.92 |
| 7 | 2017 | 104 | 217.06 |
| 8 | 2018 | 111 | 200.18 |
| | மொத்தம் | 1,512 | 1,675.41 |

### *3.6.2. 2018-19 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ் கட்டுமானப் பணிகள்*

அரசுப் பள்ளிகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் என்பது ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் முதன்மையான திட்டக்கூறுகளில் ஒன்றாகும். அனைத்து அரசு உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதே இதன் இறுதி நோக்கமாகும். ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின்கீழ் செய்து முடிக்கப்பட்ட கட்டுமானப்

பணிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

**2018-19 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ் செய்து முடிக்கப்பட்ட கட்டுமானப் பணிகள்**

| வ. எண் | இனம் | ஒப்புதல் எண்ணி-க்கை | அனுமதிக்கப் பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | புதிய மேல்நிலைப் பள்ளிகள் | 5 | 785.75 |
| 2 | அறிவியல் ஆய்வகம் – மேம்படுத்துதல் | 24 | 409.20 |
| 3 | இயற்பியல் ஆய்வகம் – மேம்படுத்துதல் | 2 | 34.10 |
| 4 | உயிரியல் ஆய்வகம் – மேம்படுத்துதல் | 3 | 51.15 |
| 5 | நூலகக் கட்டடம் – மேம்படுத்துதல் | 1 | 22.00 |
| 6 | கலை மற்றும் கைத்தொழில் அறை -மேம்படுத்துதல் | 26 | 386.10 |
| 7 | மாணவர்கள் கழிப்பிட வசதி – மேம்படுத்துதல் | 54 | 194.40 |
| 8 | மாணவியர்கள் கழிப்பிட வசதி – மேம்படுத்துதல் | 77 | 315.70 |
| 9 | ஆய்வக உபகரணங்கள் வழங்குதல் | 29 | 29.00 |
| 10 | சூரிய ஒளி ஏற்புத் தகடுகள் அமைத்தல் | 16 | 56.00 |
| மொத்தம் | | | 2,283.40 |

## 3.7. கல்விசார் குறியீடுகள்

### *3.7.1. மொத்தச் சேர்க்கை விகிதம்*

இடைநிலை மற்றும் மேல்நிலைக்கல்வி நிலைகளில் பள்ளிச்சேர்க்கையில் உள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கையினை அவர்களின் வயது நிலையில் உள்ள மொத்த மக்கள் தொகையோடு ஒப்பிட்டுச் சேர்க்கை விகிதத்தினை அறிய உதவுகிறது.

மொத்தச் சேர்க்கை விகிதம் =

$$\frac{\text{குறித்த நிலையில் சேர்க்கை}}{\text{அந்நிலையில் அவ்வயதுடைய மக்கள் தொகை}} X100$$

### *3.7.2. பாலினச் சமநிலை குறியீடு*

இடைநிலை மற்றும் மேல்நிலைக்கல்வி நிலைகளில் பள்ளிச் சேர்க்கையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையினை, மாணவிகளின் எண்ணிக்கையோடு ஒப்பீடு செய்து, பாலின வாரியாகச் சேர்க்கை விகிதத்தினை அறிய இக்குறியீடு பயன்படுகிறது.

$$\textit{பாலினச் சமநிலை குறியீடு} = \frac{\text{மாணவியர் சேர்க்கை எண்ணிக்கை}}{\text{மாணவர் சேர்க்கை எண்ணிக்கை}}$$

### *3.7.3. பாலினச் சமத்துவக் குறியீடு*

பள்ளிச் சேர்க்கையில் பாலினச் சமத்துவத்தினை அறிய இக்குறியீடு வழிகாட்டுகிறது.

பாலினச் சமத்துவக் குறியீடு = $\frac{\text{குறித்த நிலையில் பெண்களின் சேர்க்கை பங்கு}}{\text{அந்நிலையில் அவ்வயதுடைய பெண்களின் பங்கு}}$

### *3.7.4. சமூக சமத்துவக் குறியீடு*

சமூக சமத்துவம் என்பது குறிப்பிட்ட சமுதாயத்தினர் அல்லது தனிப்பட்ட குழுவிலுள்ள அனைவருக்குமான சமூக உரிமைகள், பேச்சுரிமை, சொத்துரிமை, மேலும் சமூகப் பொருள்களையும் சேவைகளையும் சமமாகப் பெறுவதனைக் குறிக்கும். சமூகப் பிரிவுகளில் இத்தகைய சமத்துவத்தைப் பெறாத மக்களையும் கல்வி சென்று சேர வேண்டும் என்பதே இக்குறியீடு காட்டுகிறது.

சமூக சமத்துவ குறியீடு - பட்டியல் இனப்பிரிவினர் = $\frac{\text{சேர்க்கையில் பட்டியல் இனப்பிரிவினரின் பங்கு}}{14-15 \text{ வயதுடைய பட்டியல் இனப்பிரிவினரின் பங்கு}}$

சமூக சமத்துவ குறியீடு - பட்டியல் இனப்பழங்குடியினர் = $\frac{\text{சேர்க்கையில் பழங்குடியினரின் பங்கு}}{14-15 \text{ வயதுடைய பழங்குடியினரின் பங்கு}}$

### *3.7.5. இடைநிலைக்கல்வி அடைவு விகிதம்*

நம் கல்வி முறையின் உள்ளார்ந்த ஆற்றல் மேம்பாட்டை வெளிக்காட்டும் அளவுகோலாக இக்குறியீடு திகழ்கிறது.

இடைநிலைக்கல்வி அடைவு விகிதம் =

$$\frac{\text{10 ஆம் வகுப்புத் தேர்வு எழுதிய மாணாக்கர்கள் எண்ணிக்கை}}{\text{முந்தைய ஆண்டில் 9 ஆம் வகுப்பில் சேர்ந்த மாணாக்கர்கள் எண்ணிக்கை}}$$

இந்தச் செயல்திறன் குறியீடுகள் சார்ந்து மாநிலத்தின் முன்னேற்றமானது கீழ்க்காணும் அட்டவணையில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

*3.7.5.1.* **கல்விசார் குறியீடுகள் (இடைநிலை):**

| | |
|---|---|
| மொத்த சேர்க்கை விகிதம் (GER) | 93.80 |
| மொத்த சேர்க்கை விகிதம் (GER) – மாணவிகள் | 95.10 |
| மொத்த சேர்க்கை விகிதம் (GER) - SC | 99.80 |
| மொத்த சேர்க்கை விகிதம் (GER) - ST | 74.30 |
| பாலின சமநிலைக் குறியீட்டு எண் (GPI) | 1.07 |
| பாலின சமத்துவக் குறியீட்டு எண் (GEI) | 1.03 |
| சமூக சமத்துவக் குறியீட்டு எண் - SC (SEI-SC) | 1.10 |
| சமூக சமத்துவக் குறியீட்டு எண் - ST (SEI-ST) | 0.90 |
| இடைநிலைக் கல்வி அடைவு விகிதம் (SGR) | 95.20 |

### 3.7.5.2. கல்விசார் குறியீடுகள் (மேல் நிலை)

| | |
|---|---|
| மொத்த சேர்க்கை விகிதம் (GER) | 77.50 |
| மொத்த சேர்க்கை விகிதம் (GER) – மாணவர்கள் | 76.70 |
| மொத்த சேர்க்கை விகிதம் (GER) – மாணவிகள் | 81.80 |
| மொத்த சேர்க்கை விகிதம் (GER) - SC | 77.50 |
| மொத்த சேர்க்கை விகிதம் (GER) - ST | 53.10 |

### 3.7.5.3. இடை நிற்றல் மற்றும் தக்கவைத்தல் விகிதம் (இடை நிலை)

| செயல்திறன் குறியீடுகள் | மாணவர்கள் | மாணவிகள் | சராசரி |
|---|---|---|---|
| இடை நிற்றல் விகிதம் | 4.10 | 2.50 | 3.30 |
| தக்கவைத்தல் விகிதம் | 95.90 | 97.50 | 96.70 |

### 3.7.5.4. மாற்றல் விகிதம் (இடை நிலை)

| இடைநிலை ( 8இல் இருந்து 9ஆம் வகுப்பிற்கு) | | | மேல்நிலை (10இல் இருந்து 11ஆம் வகுப்பிற்கு) | | |
|---|---|---|---|---|---|
| மாண-வர்கள் | மாணவி-கள் | சராசரி | மாண-வர்கள் | மாணவி-கள் | சராசரி |
| 96.70 | 96.90 | 96.80 | 86.00 | 93.00 | 89.50 |

## 3.8. பயிற்சி

### *3.8.1. ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி*

இடைநிலை மற்றும் மேல் நிலைப்பள்ளி அளவில் கற்பித்தல் தரத்தை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கான பணிமேம்பாடு இன்றியமையாத-தாகும். ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை மேம்படுத்த பட்டதாரி மற்றும் முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள் அனைவருக்கும் திருத்தியமைக்கப்பட்ட கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்களைக் கவனத்தில் கொண்டு 8 நாட்கள் பணியிடைப்பயிற்சி அளிக்கப்பட்டது. 2018-19 ஆம் ஆண்டில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (SCERT) வள ஆதரவுடன் 66,665 பட்டதாரி ஆசிரியர்களுக்கும், 36,867 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் ரூ.512.00 இலட்சம் செலவில் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### *3.8.2. தலைமையாசிரியர்களுக்கான பள்ளித் தலைமைப் பண்பு மேம்பாட்டுத் திட்டம்*

பள்ளித் தலைமை ஆசிரியர்களிடையே பள்ளித் தலைமைப் பண்புகளை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வோராண்டும் பள்ளித் தலைமைப் பண்பு மேம்பாட்டுப்

பயிற்சிக்கு அரசு ஏற்பாடு செய்கிறது. 2018-19 ஆம் ஆண்டில் 200 மாநில வள மைய உறுப்பினர்களுக்கு ரூ.9.60 இலட்சம் செலவில் இப்பயிற்சி அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இம்மாநில வள மைய உறுப்பினர்களால் 1,300 தலைமை ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கென ரூ.62.40 இலட்சம் செலவிடப்பட்டது.

### *3.8.3. பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி*

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒவ்வொரு ஒன்றிய அளவிலும் 6,064 பள்ளிகளில் உள்ள பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக் குழு (SMDC) உறுப்பினர்களுக்கு அன்றாடப் பள்ளி நடவடிக்கைகளில் சமுதாயப் பங்களிப்பை மேம்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கென ரூ.90.96 இலட்சம் செலவிடப்பட்டது.

### *3.8.4. நிர்வாக அலுவலர்களுக்கான பயிற்சி*

2018-19 ஆம் ஆண்டில் 115 மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு சென்னையில் நிர்வாகப் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியானது கல்விசார்

விவாதங்களுக்கான பயனுள்ள தளமாகவும், பல்வேறு சிக்கல்களுக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதற்கான அணுகு முறைகளை வளப்படுத்திக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகவும் பயன்பட்டது. கல்வி, வளர் இளம் பருவ உளவியல், சமுதாயத்தைப் பேணுதல் ஆகிய தலைப்புகளில் மாநிலத்திலுள்ள சிறந்த வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப் பட்டது.

## 3.9. கல்வி இணைச் செயல்பாடுகள்

### *3.9.1. மாநில மற்றும் தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகள்*

மாணவர்களின் விளையாட்டுத் திறனை மேம் படுத்தும் வகையில் மாநில அரசானது பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மண்டல, மாவட்ட, மாநில, பன்னாட்டு அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றிபெறும் வகையில் இளம் விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 15 இலட்சம் மாணவர்கள் பல்வேறு நிலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுள்ளனர். 2018-19 ஆம் ஆண்டில் தேசிய அளவிலான போட்டிகளில் தமிழகம் சார்பில் 80 தங்கம், 76 வெள்ளி மற்றும் 113 வெண்கலப் பதக்கங்களை

வென்றுள்ளனர். 2013-14 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இந்தப் போட்டிகளை நடத்திடும் பொருட்டு அரசு ரூ.10.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்கிறது.

### *3.9.2. சதுரங்க விளையாட்டு*

இந்திய அளவில் சதுரங்க விளையாட்டினை மாணவர்களிடையே ஊக்கப்படுத்தி வளர்ப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. மாணவர்களின் பகுப்பாய்வுச் சிந்தனையை மேம்படுத்தும் வகையில் இவ்விளையாட்டு அரசுப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. 7 முதல் 17 வயது வரையுள்ள பல்வேறு பிரிவினர்க்கு பள்ளி முதல் மாநில அளவிலான சதுரங்கப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. 2018-19 ஆம் ஆண்டில் மாநில அளவிலான சதுரங்கப் போட்டிகளில் 24 மாணவர்கள் வெற்றி வாகை சூடினர். ஒவ்வோராண்டும் இப்போட்டிகளை நடத்துவதற்கு மாநில அரசானது ரூ.22.00 இலட்சத்தைத் தொடர் செலவினமாக ஒதுக்கியுள்ளது. 2018-19 ஆம் ஆண்டில் இந்தியப் பள்ளிகள் விளையாட்டுக் கூட்டமைப்பில் (SGFI) தமிழக சதுரங்கக் குழு ஆண்கள் பிரிவில் 2 தங்கப் பதக்கங்களையும், 1 வெள்ளிப் பதக்கத்தையும், பெண்கள் பிரிவில் 3 வெண்கலப் பதக்கங்களையும் வென்றுள்ளது.

### *3.9.3. யோகா*

2017-18 ஆம் கல்வி ஆண்டிலிருந்து யோகா தன்னார்வ உடற்பயிற்சியாகப் பள்ளிகளில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இன்றைய போட்டி நிறைந்த சூழலில், மாணவர்கள் தங்கள் சக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை நினைத்து பல்வேறு சூழலில் மன அழுத்தத்திற்கு உள்ளாகக்கூடும். மாணவர்கள் உரிய காலத்திற்குள் தம் இலக்கினைப் பூர்த்தி செய்ய இயலாமலும், போட்டியிட இயலாமலும் மன-அழுத்தத்திற்கு உள்ளாகிறார்கள். யோகாவானது மாணவர்களை மன அழுத்தம் மற்றும் மன இறுக்கத்திலிருந்து விடுபட உதவுகிறது. பள்ளிக் குழந்தைகளைப் பொறுத்தவரை யோகாவானது அவர்களின் விளையாட்டுச் செயல்பாடுகளின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறிவருகிறது. 2018-19 ஆம் ஆண்டில் இந்திய பள்ளிகள் விளையாட்டுக் கூட்டமைப்பு நடத்திய போட்டியில் தமிழ்நாடு ஆண்கள் பிரிவில் 2 தங்கப் பதக்கங்களும், 1 வெள்ளிப் பதக்கமும், பெண்கள் பிரிவில் 1 வெள்ளிப்பதக்கமும், 1 வெண்கலப் பதக்கமும் வென்றுள்ளது.

### *3.9.4. நாட்டு நலப்பணித் திட்டம்*

நாட்டு நலப்பணித் திட்டமானது சுகாதார முகாம்கள், இரத்த தான முகாம்கள், சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பேரணிகள், மரம் நடுதல் முதலான சமூக சேவைத் திட்டங்களில் தன்னார்வ நோக்கத்தோடு பணியாற்ற மாணவர்களை ஊக்குவிப்பதன் மூலம், மாணாக்கர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு வித்திடுவதாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 1,957 நாட்டு நலப்பணி திட்ட அலகுகளில் 97,650 மாணவர்கள் தன்னார்வ நோக்கோடு செயலாற்றி வருகின்றனர். இத்திட்டத்தின் தொடர் செயல்பாடுகளுக்கு ரூ.183.00 இலட்சமும், சிறப்பு முகாம்கள் நடத்த ரூ.164.00 இலட்சமும் ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### *3.9.5. இளம் செஞ்சிலுவைச் சங்கம்*

இளம் செஞ்சிலுவைச் சங்க அலகுகள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வருகின்றன. ஆசிரியர்கள் ஆலோசகர்களாகவும், ஈடுபாடு உள்ள மாணவர்கள் தன்னார்வலர்களாகவும் இம்மன்றத்தில் செயல்படுகின்றனர். இந்த மன்றம் மனித நேய விழுமியங்களை மனதில் பதியச் செய்வதுடன், கனிவான

செயல்களை செய்திடும் திறனை மெருகேற்றவும் உதவுகிறது. இம்மன்றத் தன்னார்வலர்களுக்கு, முதலுதவி, பேரிடர் மேலாண்மை, சாலைப்பாதுகாப்பு, தீயிலிருந்து தற்காத்துக் கொள்ளுதல், விழாக்கள் மற்றும் பெருநிகழ்வுகளின் போது பொதுமக்களுக்கு உதவி செய்தல் ஆகியவற்றிற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இச்சங்கம் 11,824 இளம் செஞ்சிலுவைச் சங்க குழுக்களையும், 4,72,960 மாணவ மாணவியர் உறுப்பினர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

### *3.9.6. சுற்றுச்சூழல் மன்றம்*

சுற்றுச்சூழல் மன்றங்களும், தேசிய பசுமைப் படைகளும் பள்ளி மாணவரிடையே சுற்றுப்புறச் சூழல் மற்றும் அதன் பாதுகாப்பு குறித்து அறிவூட்டுகின்றன. இதன் மூலம் சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இம்மன்றத்தின் நோக்கமாகும். அனைத்து மாவட்டங்களிலும் 11,460 பள்ளிகளில் இம்மன்றம் தொடங்கப்பட்டுள்ளது. மக்களிடையே மாணவர்கள் மூலமாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு தேசிய பசுமைப் படை அலகிற்கும் சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தால் ஒவ்வோராண்டும்

ரூ.5,000 வழங்கப்படுகிறது. தேசிய பசுமைப் படையைச் சேர்ந்த மாணவர்கள் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படச் செய்வதே இதன் நோக்கமாகும். சுற்றுச்சூழல் மன்றங்கள் செடி நடுதல், தோட்டப் பராமரிப்பு, வளாகங்களுக்குள் பசுமை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நெகிழித் (பிளாஸ்டிக்) தடை பற்றிய விழிப்புணர்வைப் பரப்புதல், உலகச் சுற்றுச்சூழல் நாள், ஓசோன் நாள், பல்லுயிர் ஓம்பல் நாள் ஆகியவற்றைக் கொண்டாடுதல், பள்ளி மாணவர்களிடையே கட்டுரை, ஓவியம் தீட்டுதல், வினாடிவினா ஆகியவற்றில் போட்டிகள் நடத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

## 3.10. வழிகாட்டல் மற்றும் ஆலோசனை

### *3.10.1. மாணவர்களுக்கான நடமாடும் ஆலோசனை மையங்கள்*

மாணவர்களுக்கு அவர்களுடைய முன் வளரிளம் பருவத்தில் கல்விசார் அடைவுகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற, பலதரப்பட்ட சவால்களை எதிர்கொள்ள வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் மிக உதவியாக இருக்கின்றன. இத்தகைய கட்டாய மனநலத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மாநிலத்தின் 32

மாவட்டங்கள் 17 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பள்ளிகளையும் சென்றடையும் வகையில் முழுமையான வசதிகளைக் கொண்ட 17 ஊர்திகள், நடமாடும் ஆலோசனை மையங்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. இத்தகைய நடமாடும் ஆலோசனை மையங்களில் தொலைக்காட்சி மற்றும் மின்மயக் கருவிகளைக் கொண்டு, நவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 2018-19 ஆம் கல்வி ஆண்டில் மாநிலத்திலுள்ள 1,373 பள்ளிகளைச் சார்ந்த 2,23,379 மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

| பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---:|---:|---:|
| குழு ஆலோசனை | 1,00,260 | 1,12,850 | 2,13,110 |
| தனி நபர் ஆலோசனை | 4,585 | 5,684 | 10,269 |
| **மொத்தம்** | **1,04,845** | **1,18,534** | **2,23,379** |

### *3.10.2. கட்டணமில்லா உதவி எண் - 14417*

01.03.2018 முதல் 24 மணி நேரமும் செயல்படக் கூடிய கட்டணமில்லா ஆலோசனை உதவி 14417 என்ற எண் மூலம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இது அரசினுடைய ஒரு முன்னோடி முயற்சியாக மாணவர், ஆசிரியர் மற்றும் பெற்றோர் குறிப்பாகக் கிராமப்புற மக்கள் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதி பள்ளி

மாணவர்களுக்கான நலத் திட்டங்கள் பற்றி பயனுடைய தகவல்களை வழங்குவதற்கும், பாடத்திட்டங்கள் மற்றும் தேர்வுகள் தொடர்பான விளக்கங்களை அளிப்பதற்கும், மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை, மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பிற்கான வழிகாட்டல், நடத்தை சார்ந்த பிரச்சினைகள், மன அழுத்த மேலாண்மை, போன்ற தகவல்களை வழங்கவும், கண்காணிக்கவும் முதன் முறையாக தமிழ் நாடு அரசால் உருவாக்கப்பட்ட திட்டம் ஆகும். இக்கட்டணமில்லா ஆலோசனை உதவி எண் மூலம் 1,62,572 அழைப்புகள் ஏற்கப்பட்டு தேவையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 3.11. கல்வித்தர மேம்பாட்டு முனைப்புகள்

### *3.11.1. தகவல் தொலைத்தொடர்புத் தொழில் நுட்பம் மற்றும் மின்மயமாக்கல்*

தகவல் தொலைத்தொடர்பு தொழில் நுட்பமானது நாட்டின் வளர்ச்சிக்கும் சமூக மாற்றத்திற்குமான முக்கியமான செயல் ஊக்கியாக உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டமானது மின்மயமாக்கலில் மாணவர்களையும் இணைத்து, கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பளிக்கும் ஒரு சாளரமாகத் திகழ்கிறது.

*3.11.1.1. உயர் தொழில் நுட்ப ஆய்வகம்*

வளர்ந்துவரும் தகவல் தொலைத்தொடர்பு மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த கற்றல் விளைவுகளை மாணவர்களுக்கு அளிக்கும் வகையில் 6,029 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் ஏற்படுத்த அரசால் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒரு உயர்நிலைப் பள்ளிக்கு 10 கணிப்பொறிகளும், ஒரு மேல்நிலைப் பள்ளிக்கு 20 கணிப்பொறிகளும், அதன் இணைப்புகள் மற்றும் உபகரணங்களுடன் வழங்கப் படுகிறது. பிரத்யேக கம்பி வழி இணைய இணைப்பு கொண்ட அனைத்து ஆய்வகங்களின் செயல்பாடுகளும் கட்டுப்பாட்டு அறை மூலம் கண்காணிக்கப்படுகிறது. மாணவர்களுக்கு மின்மயப் பாடப்பொருள் வழங்கவும் மற்றும் மதிப்பீடு செய்யவும் இவ்வசதிகள் பயன் படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கென ரூ.520.13 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்ட செயலாக்கம் முடிவுறும் நிலையில் உள்ளது.

*3.11.1.2. திறன் வகுப்பறைகள்*

அரசுப் பள்ளிகளில் திறன் வகுப்பறைகளை அமைப்பதற்கான நிதியினை பல்வேறு திட்டங்கள் மூலம் திரட்ட அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. மேலும் பெரு

நிறுவன சமூகப் பங்களிப்புடன் அரசுப் பள்ளிகளில் திறன் வகுப்புகளை அமைப்பதற்கு ஊக்குவிக்கப்படுகிறது. இந்த முயற்சியானது மாணவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்த வாய்ப்புகளை வழங்குகிறது.

### *3.11.2. திறன் அட்டைகள் வழங்கல்*

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் திறன் அட்டைகள் வழங்கிட 2018-19 ஆம் ஆண்டில், ரூ.12.70 கோடி மாநில அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவுத் துலங்கல் குறியீட்டுடன் கூடிய இத்திறன் அட்டைகள் மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களின் சுயவிபரங்களை எளிதில் அறியக் கூடிய வகையில் கல்வி மேலாண்மை தகவல் முறைமை மூலம் பராமரிக்கப் படுகிறது.

### *3.11.3. ஆசிரியர்களுக்கான தொட்டுணர் கருவி வருகைப் பதிவு*

ஆசிரியர்களின் வருகையைக் கண்காணிப்-பதற்காகப் பள்ளிகளில் ஆதார் அட்டையை அடிப்படையாகக் கொண்ட தொட்டுணர் கருவிகளை நிறுவுவதற்காக அரசால் ரூ.9.00 கோடி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. வட்டாரக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் ஆகியோரின் அலுவலகங்களிலும், பள்ளிகளிலும் விரல் பதிவுக் கருவிகள் / கருவிழிப்படலம் கைப்பற்றும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதுடன் தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளிலும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

### *3.11.4. தொடுவானம்*

NEET, JEE போன்ற பல்வேறு போட்டி மற்றும் நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்ளும் பொருட்டு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாநிலம் முழுவதும் 412 பயிற்சி மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதற்கென 2017-18 ஆம் ஆண்டில் ரூ.1,979.00 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது. இந்த மையங்களில், தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்பச் சாதனங்களுடன் கூடிய கணினிகள், VSAT வலை, LCD ஒளிப்பட வீழ்த்திகள் கொண்ட நவீன உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப் பட்டுள்ளன. இம்மையங்களில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு வார இறுதி நாட்கள் மற்றும் பள்ளி விடுமுறை

நாட்களிலும் சிறந்த முறையில் பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. இம்மையங்களில் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் அனைத்துப் பாடங்களுக்கான கட்டகங்கள், மின்மயப் பாடப்பொருள் மற்றும் பிற துணை கருவிகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றோடு 2019 ஆம் ஆண்டு மே மாதத்தில் நீட் தேர்வு எழுதிய 3,522 மாணவர்களுக்கு தங்குமிட வசதி கொண்ட 14 மையங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன.

ஒலி ஒளியுடன் கூடிய உட்கருத்துகளை உருவாக்க படப்பிடிப்பு அரங்குகள் அமைப்பதற்கு அரசு ரூ.135.55 இலட்சம் ஒதுக்கியுள்ளது. முதற்கட்டமாக சென்னையிலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் அதிநவீன படப்பிடிப்பு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறையிலும் உள்ள வல்லுநர்களின் தொடர்ச்சியான காணொலி விரிவுரைகளை ஒளிபரப்புவதன் மூலம் பயிற்சி வகுப்புகளுக்கு மேலும் வலுவூட்ட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### *3.11.5. தற்காப்புக்கலை பயிற்சி*

தமிழ்நாட்டில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 9, 10 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவியர்களுக்குத் தற்காப்புக்கலை பயிற்சி வழங்கப்

பட்டது. இது மகளிர்க்கு அதிகாரம் அளிக்கும் நோக்கிலான ஒரு முயற்சியாகும். 5,711 பள்ளிகளில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நன்கு பயிற்சி பெற்ற பெண் பயிற்சியாளர்களைக் கொண்டு பள்ளி ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் 9 மற்றும் 10 ஆம் வகுப்பில் பயிலும் மாணவிகளுக்கு வாரம் இரு முறை என மூன்று மாதங்களுக்கு கராத்தே, ஜூடோ மற்றும் டேக்வாண்டோ முதலான தற்காப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இத்திட்டத்தால் 4,10,669 மாணவிகள் 2018-19 ஆம் ஆண்டில் ரூ.513.99 இலட்சம் செலவினத்தில் பயன் பெற்றுள்ளனர்.

### *3.11.6. நூலக மானியம்*

2018-19 ஆம் ஆண்டில் பள்ளிகளில் புதிய நூலகங்கள் திறக்கவும், 6,032 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குப் புத்தகங்கள் வழங்கிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குமான புதிய முன்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்கென ரூ.270.63 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப் பட்டது.

### *3.11.7. பள்ளிகளில் திறன் தேடல்*

திறன் தேடல் என்பது தமிழக அரசின் தனித்துவமான ஒரு புதுமைத் திட்டமாகும். இத்திட்டத்தின் நோக்கம் கிராமப்புற மாணவர்களிடத்தில் உள்ள மிகச்சிறப்பான கல்வித் திறமைகளைக் கண்டறிந்து வளப்படுத்தி வளர்த்தெடுத்தலாகும். மாநில அளவில் 134 திறன் தேடல் மையங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. மாணவர்களின் கல்வித் திறனை மேலும் வலிமைப்படுத்தும் வகையில் விடுமுறை காலங்களிலும், வார இறுதி நாட்களிலும் சிறப்பு வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன.

மேலும், மாணவர்கள் தங்களுடைய திறமைக்கும், ஆற்றலுக்கும் ஏற்ற ஒரு தொழில் பிரிவைத் தெரிவு செய்து கொள்ள இம்மையங்கள் உதவுகின்றன. இம்மையங்களின் செயல்பாடுகளோடு, சிறப்பு வேலைவாய்ப்பு குறித்த விழிப்புணர்வுத் திட்டங்களும் முக்கியப் பகுதியாக இணைக்கப் பட்டுள்ளன. இம்முயற்சியினால் ஏறக்குறைய 13,400 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 2018-19 ஆம் ஆண்டில் ரூ.67.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### *3.11.8. மெல்லக் கற்கும் மாணவர்களின் சாதனை அடைவுத்திட்டம்*

பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வு எழுதும் மாணவர்களில், குறிப்பாக மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு உதவுவதற்காக இச்சிறப்புத் திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது. இத்திட்டமானது 32 மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்பட்டது. இச்சிறப்புத் திட்டத்தால் 1,04,762 மாணவர்கள் பயன்பெற்றனர். 2018-19ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.60.64 இலட்சம் செலவிடப் பட்டது.

### *3.11.9. படைப்புசார் கற்றல் திட்டம்*

இத்திட்டம், இடைநிலைப்பள்ளி மாணவர்கள் தங்களது கல்விச் செயல்பாடுகளில் பங்கெடுப்பதை மேம் படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு சிறப்பு முயற்சியாகும். இத்திட்டமானது 32 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. மாணவர்கள் தங்களுடைய கற்றல் அனுபவங்களை உயர்த்திடும் நோக்கில் சொந்தமாகச் செயல் திட்டங்களைத் தயாரிக்க இது ஊக்கப்படுத்துகிறது. மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சிறந்த செயல் திட்டங்களுக்கு மாவட்ட அறிவியல் கண்காட்சிகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தைச் செயல்படுத்திட 2018-19 ஆம் ஆண்டில் ரூ.128.00 இலட்சம் செலவிடப்பட்டது. 1,51,600 மாணவர்கள் இத்திட்டத்தால் பயன் பெற்றுள்ளனர்.

### *3.11.10 . வினாடி வினா நிகழ்ச்சி*

பாடநூல்களுக்கு அப்பாலும் மாணவர்களின் அறிவுத் தேடலை ஊக்குவிப்பது வினாடிவினாப் போட்டியின் முதன்மைக் குறிக்கோளாகும். அரசுப்-பள்ளிகளில் 9, 10 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு வினாடிவினாப் போட்டிகள் பள்ளி, கல்வி மாவட்டம், மாவட்டம், மண்டலம் மற்றும் மாநிலம் என்னும் 5 நிலைகளில் நடத்தப்பெற்றன. இதில் மொத்தம் 24,256 மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். மாநில அளவில் மூன்று சிறந்த அணிகள் தேர்ந்தெடுக்கப்பெற்றன. அனைத்து நிலைகளிலும் வினாடி வினாப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்க்கு ரொக்கப் பரிசுகளும், சான்றிதழ்களும், சுழற் கோப்பைகளும் பரிசளிக்கப்பட்டன. 2018-19 ஆம் ஆண்டில் ரூ.16.50 இலட்சம் இதற்கென செலவிடப்பட்டது.

### *3.11.11. நேரடி கற்றலுக்கான களப்பயணம்*

நேரடி கற்றலுக்கான களப்பயணம் என்பது ஒரு புதுமை முயற்சியாகும். இது மாணவர்களுக்குக் கற்றல் அனுபவத்தை வழங்குவதோடு மாறுபட்ட பண்பாடுகள், நன்னெறிகள், வாழ்க்கை முறைகள் பற்றி அறிய வழிவகை செய்கிறது. 2018-19 ஆம் ஆண்டில் 67 கல்வி மாவட்டங்களிலிருந்து 2010 மாணவர்கள் பெங்களூரு, மைசூரு, ஐதராபாத் ஆகிய இடங்களுக்கு சென்று அறிவியல் மையங்கள், அருங்காட்சியகம் மற்றும் புராதன கட்டடங்களை கண்டுகளித்தனர். இப்பயணத்தால், அண்டை மாநிலங்களின் பாரம்பரியங்கள், பண்பாடுகள் ஆகியவற்றை நமது மாணவர்கள் அறிந்து கொண்டனர். 2018-19 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.40.20 இலட்சம் செலவிடப்பட்டது.

### *3.11.12. ஆசிரியர் பரிமாற்றத் திட்டம்*

இத்திட்டம் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையால் ஒரு முன்னோடித் திட்டமாக ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்ற மாநிலங்களில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பார்வையிடுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. அந்த உயர்கல்வி

நிறுவனங்கள் எவ்வாறு வகுப்பறைகளில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துகின்றன என்பதை அறிந்துகொள்ளமுடிகிறது.

ஆசிரியர்கள் கற்பித்தலுக்குக் கிடைக்கப் பெறும் புதிய தொழில் நுட்பங்களைத் தெரிந்துகொண்டு கற்றுக் கொள்ள இது உதவுகிறது. மொத்தம் 670 ஆசிரியர்கள் இத்திட்டத்தில் பயன்பெற்றனர். இதற்கு ரூ 13.40 இலட்சம் செலவிடப்பட்டது.

### *3.11.13. சத்தான உணவு நலவாழ்வு மற்றும் சுகாதாரம்*

9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் அதிக அளவில் மாணவியர் சேர்க்கை செய்யப்பட்ட 5,711 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இந்த 'சத்தான உணவு நலவாழ்வு மற்றும் சுகாதாரம்' என்னும் சிறப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதன்மை நோக்கமானது திறன்களை அடிப்படையாகக் கொண்ட நலவாழ்வு மற்றும் சத்துணவு பற்றிய கல்வியை மேம்படுத்துதலாகும். இக்கல்வியானது நலவாழ்வுப் பணியாளர்களாலும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களாலும் அனைத்து நிலைகளிலும் வழங்கப்படுகிறது. கற்றலுக்கும் அறிதிறனுக்கும் மிகவும் இன்றியமையாததாகிய நல்ல உடல் நலம் பெறுவதை உறுதி செய்வதற்குத் திறன்கள்

அடிப்படையிலான நலவாழ்வுக் கல்வியைக் குழந்தைகளுக்கு வழங்கி நலவாழ்வுப் பழக்க வழக்கங்களை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்திட இத்திட்டம் உதவுகிறது. இத்திட்டத்தின் மூலம் 4,10,669 இலட்சம் மாணவிகள் பயன் பெற்றனர். இதற்கான மொத்த செலவு ரூ.114.22 இலட்சமாகும்.

### *3.11.14. நில வரைபடத்திறன் 2018-19*

மாணவர்களுக்கு வரைபடத்திறனை வளர்ப்பதில் கவனம் செலுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சமூக அறிவியல் ஆசிரியர்கள் அனைவருக்கும், குறிப்பாகப் புவியியல் ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது. இவ்வாறு பயிற்சி பெற்ற சமூக அறிவியல் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இத்திறனைக் கற்றுக் கொடுத்தனர். இதன் விளைவால் வரைபடம் வரைவதில் மாணவர்கள் மிகவும் திறன் பெற்றவர்களாயினர். இட அமைப்புத் தாள்கள் (TOPE Sheet) தடமறி தாள் (Tracing Sheet) ஆகிய கருவிகளின் துணைகொண்டு வரைபடத்தின் தொலைவுகளை அளக்க மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு வகுப்பறைகளில் இவை பெரிதும் உதவியாக அமைந்தன. இத்திட்டத்திற்காக ரூ.9.78

இலட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தால் 69,105 மாணவர்கள் பயன்பெற்றனர்.

## 3.12. நிகழ்வுகள் மற்றும் விருதுகள்

### *3.12.1. அறிவியல் கண்காட்சி*

தமிழக அரசு மாணவர்களிடையே அறிவியல் சிந்தனையை வளர்க்கும் வகையிலும், அதனை மேம்படுத்தும் வகையிலும் பலதரப்பட்ட அறிவியல் செய்முறைப் பயிற்சிகளை அளித்து வருகிறது. அதற்காக மாணவர்களிடையே பள்ளி அளவிலும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் அறிவியல் கண்காட்சிகளை நடத்தி மாணவர்களின் அறிவியல் சிந்தனையையும், திறனையும் வளர்த்து வருகிறது. அறிவியல் கண்காட்சி மாணவர்களிடையே கருத்துப் பரிமாற்றம், இணைந்து செயல்படுதல் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான திறன் ஆகியவற்றை வளர்க்க உதவுகிறது. 22.11.2018 அன்று மதுரையில் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் மாசினைக் கட்டுப்படுத்துவது, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்துதல் போன்றவை உள்ளிட்ட பல்வேறு கருத்துகள் அடங்கிய 138 அறிவியல் செயல்திட்டங்கள் பார்வைக்கு வைக்கப்

பட்டன. அதில் மாநில அளவில் முதலிடம் பெற்றவர்கள், அகமதாபாத் நகரில் 2018 நவம்பரில் நடைபெற்ற தேசிய அளவிலான அறிவியல் கண்காட்சியில் கலந்து கொண்டனர். இத்திட்டத்திற்கு ரூபாய் 32.60 இலட்சம் நிதி செலவிடப்பட்டது.

### *3.12.2. கலைத் திருவிழா*

நம் மாநிலத்தில் பாரம்பரிய, பன்முகத் தன்மை கொண்ட கலை வடிவங்கள் உள்ளன. இவற்றுள் சில கலைகள் முறையான ஆதரவு இல்லாததால், அழியும் நிலையில் உள்ளன. "கலைத் திருவிழா" பள்ளி மாணவர்களின் கலை வடிவக் கொண்டாட்டம் என்ற வடிவில் நடத்தப்பெறுகிறது. மாநில அரசானது மாநிலத்தின் பல்வேறு கலை வடிவங்களுக்கு உதவி செய்து, அவை எழுச்சி பெற உதவுகிறது. மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளையும், தனித்துவமான கலைத் திறன்களையும் வளர்க்க இந்த முயற்சி உதவுகிறது. இப்போட்டிகள் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த 1 முதல் 12 வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படுகிறது. கலைத் திருவிழாப் போட்டிகள் ரூ.4.00 கோடி செலவில் பள்ளி, ஒன்றிய, கல்வி மாவட்ட மற்றும் வருவாய் மாவட்ட அளவில் நடத்தப்பட்டுள்ளன. 2018-19 ஆம் கல்வியாண்டில்,

மாநில அளவிலான போட்டிகள் நாமக்கல்லில் நடை-பெற்றன. இதில் 3,227 மாணவர்களும், 3,770 மாணவிகளும் கலந்து கொண்டனர்.

### *3.12.3. கலா உத்சவ் (தேசிய கலைத்திறன் திருவிழா)*

கலா உத்சவ் என்பது இடைநிலையளவில் பள்ளி மாணவர்களின் கலையை மேம்படுத்துவதற்கும், வெளிக் கொணர்வதற்குமான ஒரு சிறந்த முன் முயற்சியாகும். கலா உத்சவ் கொண்டாட்டங்கள் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (DIET) ஆகியவற்றின் முழு ஒத்துழைப்போடு மாவட்ட, மாநில, தேசிய அளவில் நடைபெறுகின்றன. மாணவர்கள் தங்களின் வாழும் கலை மரபுகளை நாடகம், நாட்டியம், இசை மற்றும் ஓவியம் ஆகிய வடிவங்களில் வெளிக்காட்டவும், அவற்றைப் புரிந்து கொள்ளவும், ஆழ்ந்து ஆராயவும், மாணவர்களுக்கு இக்கலா உத்சவ் உதவுகிறது.

| வ. எண் | கலை வடிவம் | பங்கேற்ற மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | மாவட்ட அளவில் | மாநில அளவில் |
| 1 | இசை/வாய்ப்பாட்டு | 1,161 | 63 |
| 2 | இசை/கருவி | 762 | 63 |

| | | | |
|---|---|---|---|
| 3 | நடனம் | 1,472 | 62 |
| 4 | ஓவியம் | 2,173 | 62 |
| | மொத்தம் | 5,568 | 250 |

திருச்சிராப்பள்ளி, நாமக்கல், நாகப்பட்டினம், சேலம் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களிலிருந்து மாநில அளவில் வெற்றிபெற்ற குழுக்கள் புதுதில்லியில் நடத்தப்பட்ட தேசிய அளவிலான போட்டியில் பங்கு பெற்றன. தேசிய அளவிலான இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளில் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி மாணவர்கள் முதலிடம் பெற்றனர். இதில் வெற்றி பெற்ற ஒவ்வொருவருக்கும் தங்கப்பதக்கமும், சான்றிதழும், ரூ.25,000 விருதுத் தொகையும் பரிசாக வழங்கப்பெற்றன. 2018-19 ஆம் ஆண்டில் கலாஉத்சவ் திட்டத்திற்காக ரூ.11.00 இலட்சம் செலவிடப்பட்டது.

### *3.12.4. பெருந்தலைவர் காமராசர் விருது*

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு பெருந்தலைவர் காமராசர் விருது வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்விலும் பிற கல்வி இணைச் செயல்பாடுகளிலும் முதலிடம் பெற்ற 15 மாணவர்களுக்கு தலா ரூ.10,000 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில்

முதலிடம் பெற்று பிற கல்வி இணைச் செயல்பாடுகளிலும் முதலிடம் பெற்ற 15 மாணவர்களுக்கு தலா ரூ.20,000 விருதுத் தொகையாக வழங்கிட அரசு ரூ.145.30 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. 2017-18 ஆம் ஆண்டிற்கான விருதுகள் 960 மாணவர்களுக்கு 05.09.2018 அன்று வழங்கப்பட்டன.

### *3.12.5. புதுமைப் பள்ளி விருது*

மாணவர் சேர்க்கையினை மேம்படுத்துதல், கற்பித்தலில் புதிய உத்திகளை நடைமுறைப் படுத்துதல், நிர்ணயிக்கப்பட்ட உட்கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்தல், பள்ளி மேலாண்மை வளர்ச்சிக் குழு மற்றும் பொதுமக்களுடன் பள்ளி நலனுக்காக இணைந்து செயல்படுதல் ஆகியவற்றில் சிறந்து விளங்கிடும் பள்ளிகளுக்குப் புதுமைப் பள்ளி விருது வழங்கப்படுகிறது. 2017-18 ஆம் ஆண்டில் 58 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.83.00 இலட்சத்திற்கு ரொக்க விருதுகள் வழங்கப் பெற்றன.

### *3.12.6. கனவு ஆசிரியர் விருது*

அரசுப் பள்ளிகளில் கணினி வசதிகளுடன் பாடங்களை நடத்தும் ஆசிரியர்கள், பாடம் சாராத

கல்விப்பணிகள் மற்றும் இணைச் செயல்பாடுகள் ஆகியவற்றை மேற்கொள்வோர், பள்ளியின் நலன்களுக்காக அப்பகுதி சமூக உறுப்பினர்களோடு இணைந்து செயல்படும் ஆசிரியர்கள், மாணவர் சேர்க்கையை அதிகப்படுத்த உதவும் ஆசிரியர்கள் ஆகியோரை ஊக்கப்படுத்தும் விதமாகக் "கனவு ஆசிரியர் விருது" வழங்கப்படுகிறது. 2017-18 ஆம் ஆண்டிற்கு 141 திறமையான ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுத் தொகையாக ஒவ்வொருவருக்கும் ரூ.10,000 வீதம் ரூ.14.10 இலட்சம் மதிப்பில் ரொக்க விருதுகள் 05.09.2018 அன்று வழங்கப்பட்டன.

## 3.13. புதிய முன்முயற்சிகள்

### *3.13.1. நிர்வாக மறு சீரமைப்பு*

மறுசீரமைப்பிற்கு முன், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், மெட்ரிகுலேசன் பள்ளிகள் மற்றும் ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் போன்ற பலதரப்பட்ட பள்ளிகளை கண்காணிக்க ஒத்த நிலையில் உள்ள பல்வேறு நிர்வாக அமைப்புகள் இருந்தன. மாவட்ட அளவில் இவ்வமைப்புகள் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படுவதில் மிகுந்த சிரமங்கள் இருந்தன. இதனால்

தரமான கண்காணிப்பு முழுமையான அளவில் மேற்கொள்ள இயலாமலும், இரட்டிப்பு வேலையும், காலவிரயமும் ஏற்பட்டன. வருவாய் மாவட்ட அளவில் 32 முதன்மைக் கல்வி அலுவலர்களும், கல்வி மாவட்ட அளவில் 67 மாவட்டக் கல்வி அலுவலர்களும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை கண்காணித்து வந்தனர். வருவாய் மாவட்ட அளவில் 32 மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களும், ஒன்றிய அளவில் 836 உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை கண்காணித்து வந்தனர், மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்களும், ஆங்கிலோ-இந்திய பள்ளிகளை ஆங்கிலோ-இந்திய பள்ளி ஆய்வாளர்களும் கண்காணித்து வந்தனர். இவற்றில் முதன்மைக் கல்வி அலுவலர் பதவி தவிர்த்து ஏனைய பதவிகள் அனைத்தும் இணையாக இருந்தாலும் ஒரே எல்லைக்குள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பள்ளிகளை மட்டுமே ஆய்வு செய்து வந்தனர்.

மேற்குறிப்பிட்ட நிர்வாகக் கட்டமைப்பு கள அளவில் முழுமையாக மறு சீரமைக்கப்பட்டு நிர்வாக முறையினை எளிமையாக்கும் வகையில் அனைத்துப் பள்ளிகளையும்

முறையாக ஆய்வு செய்யவும், கண்காணிக்கவும் உரிய அதிகார பகிர்ந்தளிப்பு செய்து ஒரு தெளிவான மூன்றடுக்கு நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மறு சீரமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பின்படி, 2018-19 ஆம் ஆண்டில் மாவட்ட அளவில் 32 முதன்மைக் கல்வி அலுவலர்கள், கல்வி மாவட்ட அளவில் 120 மாவட்டக் கல்வி அலுவலர்கள், ஒன்றிய அளவில் 836 வட்டாரக் கல்வி அலுவலர்கள் என மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் போன்ற அனைத்து வகைப் பள்ளிகளையும் கள அளவில் சிறந்த முறையில் கண்காணிக்க இம்மறுசீரமைப்பு உதவுகிறது.

***3.13.2. அரசுப் பள்ளிகளை மாதிரிப் பள்ளிகளாக மாற்றுதல்***

மாவட்டத்திற்கு ஒரு மேல்நிலைப் பள்ளி வீதம் 32 மேல்நிலைப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாதிரிப் பள்ளிகள் ஏற்படுத்த அரசு முடிவு செய்து, ஒரு பள்ளிக்கு ரூ.50.00 இலட்சம் வீதம் ரூ.16.00 கோடி செலவில் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இப்பள்ளிகளை மாதிரி பள்ளிகளாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எந்த ஒரு முன்னோடித் திட்டமும் முதலில் இம்மாதிரிப் பள்ளிகளிலேயே அறிமுகப்-

படுத்திடவும் இவ்வனுபவத்தைக் கொண்டு பிற பள்ளிகள் கற்றுணர்ந்து அவற்றை மாவட்டம் முழுவதிலும் பின்பற்றவும் வழிவகை செய்யப்-பட்டுள்ளது. இம்மாதிரிப் பள்ளிகளுக்கான வழிகாட்டு நெறி முறைகளை ஏற்படுத்தவும், செலவினங்கள் மற்றும் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப் பட்டுள்ளது.





மழலையர் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள ஒருங்கிணைந்த பள்ளியாக மாதிரிப் பள்ளிகள் இயங்குகின்றன. இப்பள்ளிகளில், அத்தியாவசியத் தேவையான திறன்மிகு வகுப்பறை, உயர் தொழில்நுட்ப ஆய்வகம், சூரிய விளக்குகள், தொழில்நுட்ப தொட்டுணர் வருகைப் பதிவு, மின்நூலகம், ஆய்வகங்கள், விளையாட்டு உபகரணங்கள், கழிப்பறை வசதிகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கண்காணிப்புக் கேமரா மற்றும் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்

பட்டுள்ளன. பெருநிறுவன சமூக பங்களிப்பு, பொது மக்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் அரசுத் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் தலைமை ஆசிரியர்களால் நிதியுதவி பெறப்படுகிறது. நடப்பு கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை குறிப்பிடத்தக்க அளவில் இப்பள்ளிகளில் அதிகரித்துள்ளது.

### *3.13.3. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை தொழில்திறன்மயமாக்கல்*

இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியைத் தொழிற்கல்வி மயமாக்கும் இத்திட்டம் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உயர்த்துவதற்காகக் கொண்டு வரப்பட்டதாகும். தொழிற்கல்விப் படிப்புகள் வாயிலாக தங்களது போட்டியிடும் திறன்களை வளர்த்துக் கொள்ளவும், பல துறைகளில் நுழைவதற்கும், கல்வித் தகுதிகளுக்கேற்ப இடம் பெயரவும் கல்வித் தகுதிகளில் மாற்றம் செய்து கொள்ளவும் கல்வியறிவு பெற்ற பின்பு வேலைவாய்ப்பு பெறுவதற்கான இடைவெளியைக் குறைப்பதற்கும், இடைநிலைக் கல்வி அளவில் இடைநிற்றலைக் குறைப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது.

தற்பொழுது 67 கல்வி மாவட்டங்களில் 67 பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு 2 தொழிற்பாடங்கள் வீதம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான தொழிற்கல்வி, தேசிய திறன்கள் தகுதிக் கட்டமைப்பின் (NSQF) அடிப்படையில் செயல்படுத்தப் படுகிறது. பள்ளிகளில் வேளாண்மை, பல்திறன் அடிப்படைப் படிப்புகள், மின்னணுவியல் மற்றும் வன்பொருள், அழகு மற்றும் நலம், வாகனத் தொழில் மற்றும் ஆடைகள் தயாரிப்பு, வீட்டுப் பொருள்கள் தயாரிப்பு போன்ற 6 தொழிற் பாடங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. 2018-19 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தின் மூலம் 5,342 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதில் 2,727 மாணவியரும் 2,615 மாணவர்களும் அடங்குவர். இத்திட்டத்திற்காக ரூ. 741.09 இலட்சம் பயன்படுத்தப் பட்டுள்ளது.

### *3.13.4. ஆசிரியர்களுக்கு மடிக்கணினி*

நவீன தொழில் நுட்ப வளர்ச்சிப் போக்கினை மாணவர்கள் எதிர்கொள்ளும் பொருட்டு, தகவல் தொழில்நுட்பத்தைப் பள்ளிகளில் அறிமுகப் படுத்துவதில் அரசு மிகவும் முனைப்போடு செயல்பட்டு வருகிறது. மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா

மடிக்கணினி வழங்கி முறையாக பல்வேறு பாடங்களை மாணவர்கள் எளிதில் அணுகும் வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. பெரும்பாலான பள்ளிகளில் உள்ள கணினி ஆய்வக வசதிகள், மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தாலும் ஆசிரியர்களின் பணி மேம்பாட்டுத் தேவைக்கு சிறிதளவே பயன்படுகிறது. எனவே பல்வேறு இணையதளங்களைப் பயன்படுத்தி ஆசிரியர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையாகவும் ஆசிரியப் பணி மேம்பாட்டுத் தேவைக்காகவும் 29,891 மடிக்கணினிகளை அரசு பள்ளிகளில் பணியாற்றும் முதுகலை ஆசிரியர்கள் பயன்படுத்தும் பொருட்டு வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ரூ.37.86 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் பயன்பாட்டிற்காக வழங்கப்படும் மடிக்கணினிகள் வலை தளத்தில் உள்ள பல்வேறு ஆதார வளங்களை ஆசிரியர்கள் பெற்று அவர்களது அறிவை வளப்படுத்திக் கொள்ள உதவுகின்றன.

### *3.13.5. விளையாட்டுப் பள்ளிகள்*

2018-19 ஆம் கல்வி ஆண்டில் மாவட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம் 32 மாவட்டங்களில் 'விளையாட்டுப் பள்ளிகள்' அமைத்திடும் ஒரு புதிய திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் நோக்கம் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுள் விளையாட்டில் திறமையும் ஆர்வமும் உள்ளவர்களைக் கண்டறிந்து, மாநில, தேசிய, பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிகரமாகப் பங்கேற்கும் வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க உதவுவதாகும். பள்ளிகளுக்கு தேவைக்கேற்ப வசதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அளித்திட ரூ.96.00 இலட்சம் செலவிடப்பட்டது.

***3.13.6. கல்விச் சுற்றுலா***

ஒரு சிறப்பு முயற்சியாக, திறமையான மாணவர்களை அயல்நாடுகளில் உள்ள சிறப்புமிகு கல்வி நிறுவனங்களுக்கு அழைத்துச் செல்வதற்கென அரசு ரூ.3.00 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. முதற்கட்டமாக அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையில் சிறந்து விளங்கும் 50 மாணவர்கள் பின்லாந்து மற்றும் ஸ்வீடன் நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இம்மாணவர்கள் அங்குள்ள பள்ளிகள், அருங்காட்சியகங்கள், நூலகங்கள் அறிவியல் ஆய்வகங்கள் ஆகியவற்றிலிருந்தும், ஆசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்களுடன் கலந்துரையாடியதன் வாயிலாகவும் மிகச் சிறப்பான மற்றும் ஆழ்ந்த அறிவு பெற்று திரும்பியுள்ளனர்.

இரண்டாம் கட்டமாக, கலை, இலக்கியம் மற்றும் கலாச்சாரத்தில் சிறந்து விளங்கும் 25 மாணவர்கள் சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அவர்கள் மலேசியா நாடாளு-மன்றம், தொல்லியல் அருங்காட்சியகம், பாரம்பரிய பண்பாட்டு மையம், AIMST பல்கலைக் கழகம் ஆகிய இடங்களைப் பார்வையிட்டனர். மேலும் 25 மாணவர்கள் விரைவில் வேறுசில வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.



பின்லாந்து மாணவர்களோடு கலந்துரையாடல்



சிங்கப்பூர் கோளரங்கத்தை பார்வையிடல்

### *3.13.7. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி*

அரசுப் பள்ளிகள் அனைத்திலும் பாதுகாப்பான குடிநீர் வசதியை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே எடுத்துள்ளது. மேலும், 2,448 அரசு உயர்நிலை

மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பின்னூட்டுப் பரவல் (R.O.) முறையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நாடாளு-மன்ற, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டது. அதன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மொத்த ஒதுக்கீட்டில் பின்னூட்டுப் பரவல் (R.O.) முறையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிக்காக ரூ.15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *3.13.8. சாரண சாரணியர்*

தமிழ்நாட்டில் சாரண சாரணியர் இயக்கம் துடிப்புடன் செயல்பட்டு வருகிறது. முக்கியமான இடங்கள் மற்றும் தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றைச் சுத்தம் செய்தல், மரம் நடுதல், பொது சுகாதாரம் மற்றும் உடல்நலம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், முதலுதவி மற்றும் போக்குவரத்து நெரிசலை நெறிப்படுத்துதல் ஆகியவை இவற்றின் முக்கிய செயல்பாடுகள் ஆகும்.

2018-19 ஆம் ஆண்டில் சாரண சாரணியர் இயக்கத்திற்காக அரசு ரூ.2.00 கோடியை தொகுப்பு நிதியாக (corpus fund) விடுவித்து அதனை தமிழ்நாடு

மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளது. இம்-முதலீட்டிலிருந்து பெறப்படும் வட்டித்தொகை மாநிலம் முழுவதும் உள்ள சாரண சாரணியர் அமைப்புகளின் தலைமையகங்களைப் பராமரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வியக்கத்தில் 3,21,328 மாணவர்களும் 12,740 ஆசிரியர்களும் பங்காற்றிவருகின்றனர்.

## 3.14. நிதி ஒதுக்கீடு

2019-20 ஆம் ஆண்டிற்கு இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கு ரூ.14,408.86 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 4 . நலத்திட்டங்கள்

## 4. முன்னுரை

மாணவர்களிடையேயான சமூக மற்றும் பொருளாதார வேறுபாடுகளைக் களைவதற்கும், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் சேர்க்கையை உறுதி செய்வதற்கும், மாணவர்களை தக்க வைப்பதற்கும், அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு பின்வரும் விலையில்லாப் பொருட்களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

## 4.1. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு சத்துள்ள மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 2018-19ஆம் கல்வி ஆண்டில் 48.19 இலட்சம் மாணாக்கர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இத்திட்டம்

2019-20 ஆம் கல்வியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.2. பாடப் புத்தகங்கள்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு விலையில்லாப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மாணாக்கர்களது புத்தகச் சுமையினை குறைக்கும் நோக்கத்தோடு 2012-13 ஆம் கல்வியாண்டில் முப்பருவ முறை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. பாடப்புத்தகங்கள் பருவத்தின் தொடக்க நாளன்றே மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது. 2018-19 ஆம் கல்வியாண்டில் 74.18 இலட்சம் மாணாக்கர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர். 2019-20 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் தொடர ரூ.195.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.3. நோட்டுப் புத்தகங்கள்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் 2012-13 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு பருவத்தின் தொடக்க நாளன்றே நோட்டுப் புத்தகங்கள் மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகின்றன. 2018-19 ஆம் கல்வியாண்டில் 58.63 இலட்சம் மாணாக்கர்கள் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளனர். 2019-20 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் தொடர ரூ.107.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.4. மடிக்கணினி**

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில், மேல்நிலை வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி 2011-12 ஆம் கல்வியாண்டு முதல் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. 2018-19 ஆம் கல்வி ஆண்டில் 10.30 இலட்சம் மாணாக்கர்கள் இதன்மூலம் பயன்பெற வழிவகை செய்யப் பட்டுள்ளது. 2019-20 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் தொடர ரூ.1,362.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.5. சீருடை**

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும்

மாணாக்கர்களுக்கு விலையில்லா நான்கு இணைச் சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. அரசு 2019-20 ஆம் கல்வியாண்டில் புதிய வடிவமைப்புடன் கூடிய சீருடையை அறிமுகப்படுத்தி உள்ளது. 2018-19 ஆம் கல்வி ஆண்டில் இத்திட்டத்தினால் 40.65 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். 2019-20 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் தொடர ரூ.414.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.6. காலணிகள்**

2012-13 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு விலையில்லாக் காலணி வழங்கப்பட்டு வருகிறது. 2018-19 ஆம் கல்வியாண்டில் 58.63 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். 2019-20 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் தொடர ரூ.81.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.7. புத்தகப்பை**

2012-13 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் புத்தகப்பை

வழங்கப்பட்டு வருகிறது. 2018-19 ஆம் கல்வியாண்டில் 69.81 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

**4.8. கிரையான்ஸ்**

2012-13 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 மற்றும் 2 ஆம் வகுப்பில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கிரையான்ஸ் வழங்கப்பட்டு வருகிறது. 2018-19 ஆம் கல்வியாண்டில் 9.15 இலட்சம் மாணாக்கர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**4.9. வண்ணப்பென்சில்கள்**

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் வண்ணப் பென்சில்கள் வழங்கும் திட்டம் 2012-13 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2018-19 ஆம் கல்வியாண்டில் 15.16 இலட்சம் மாணாக்கர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**4.10. கணித உபகரணப் பெட்டி**

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்குக் கணித உபகரணப் பெட்டி வழங்கும் திட்டம் 2012-13 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2013-14 ஆம் கல்வியாண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2018-19 ஆம் கல்வியாண்டில் 16.29 இலட்சம் மாணாக்கர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

**4.11. நில வரைபட புத்தகம்**

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு நில வரைபட புத்தகங்கள் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2012-13 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2018-19 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினால் 7.05 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

2019-20 ஆம் கல்வியாண்டில் புத்தகப்பை, கிரையான்ஸ், வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டி மற்றும் நில வரைபட புத்தகங்களை வழங்குவதற்கு ரூ.91.84 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

### 4.12. கம்பளிச் சட்டை

மலைப்பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்குக் கம்பளிச் சட்டை வழங்கும் திட்டம் 2013-14 ஆம் கல்வியாண்டில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. 2018-19 ஆம் கல்வியாண்டில் 1.23 இலட்சம் மாணாக்கர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர். 2019-20 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினை தொடர ரூ.3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.13. மழைக்கால ஆடை, உறை காலணி மற்றும் காலுறை

மலைப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு விலையில்லா மழைக்கால ஆடை, உறைக் காலணி மற்றும் காலுறைகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2016-17 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2018-19 ஆம் கல்வியாண்டில் 1.23 இலட்சம் மாணாக்கர்கள்

இத்திட்டத்தினால் பயன்பெற வழிவகை செய்யப் பட்டுள்ளது.

### 4.14. பேருந்து பயண அட்டை

1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து பள்ளி மாணாக்கர்களுக்கும் அவர்களது பள்ளிக்கு எளிதில் வந்து செல்வதற்கு வசதியாக ஒவ்வொரு ஆண்டும் பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் போக்குவரத்துத் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 2018-19 ஆம் கல்வியாண்டில் பள்ளிகளில் பயிலும் 23.46 இலட்சம் மாணாக்கர்கள் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டம் 2019-20ஆம் கல்வி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.15. மிதிவண்டிகள்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை வாயிலாக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இன மாணவர்களுக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்-

குடியினர் நலத் துறை வாயிலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கும், பள்ளிக் கல்வித் துறை வாயிலாக இதர இன மாணவர்களுக்கும் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2017-18 மற்றும் 2018-19 ஆம் கல்வி ஆண்டுகளில் 11.56 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

### 4.16.வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணாக்கர்களுக்கான நிதி உதவி

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு அவர்களின் வருவாய் ஈட்டும் பெற்றோர் (தாய் / தந்தை) மரணமடைந்தாலோ, விபத்து காரணமாக நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, நிதி உதவி வழங்கப்படுகிறது. இவ்வாறான எதிர்பாராத சூழ்நிலையினால் இப்பெற்றோர்களின் குழந்தைகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதில் இவ்வரசு உறுதியாக உள்ளது. பாதிக்கப்பட்ட மாணாக்கரின் பெயரில் ரூ.75,000 அரசு நிதி நிறுவனங்களில் வைப்பு நிதியாக செலுத்தப்படுகிறது. இந்நிதி உதவித் தொகை 2014-15 ஆம் கல்வியாண்டில் ரூ.50,000லிருந்து ரூ.75,000 ஆக உயர்த்தப்பட்டது. 2018-19 ஆம் ஆண்டில் 660 மாணவர்கள்

பயனடைந்துள்ளனர். 2019-20 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் தொடர ரூ.4.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.17. மாணாக்கர் விபத்து நிவாரண நிதியுதவி

பள்ளி மற்றும் பள்ளிசார் செயல்பாடுகளின்போது எதிர்பாராது நிகழும் விபத்துகளினால் பாதிப்புக்கு உள்ளாகும் மாணாக்கர்களுக்காக புதுமையான இத்திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணாக்கர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் நிவாரண நிதியுதவி வழங்கப் படுகிறது. இறப்பு நேரிடின், ரூ.1.00 இலட்சம், பெரிய காயங்களுக்கு ரூ.50,000 மற்றும் சிறிய காயங்களுக்கு ரூ.25,000 மாணாக்கரின் குடும்பத்திற்கு நிவாரண நிதியுதவியாக வழங்கப்படும். வழக்கமான பிற காப்பீட்டுத் திட்டங்களைப் போலன்றி மாணாக்கர்களுக்கு இந்நிவாரண நிதியானது விரைந்து வழங்கப்படும்.

## 4.18. இடைநிற்றலைத் தவிர்ப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை

எந்தவொரு மாணாக்கரும் தன்னுடைய பொருளாதாரத் தடையினால் பள்ளியில் இருந்து

இடைநிற்கக் கூடாது என்பதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. 2011-12 ஆம் கல்வியாண்டு முதல் இடை-நிலையில் இடைநிற்றலைக் குறைப்பதற்காக சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.1,500, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.2,000 வீதம் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டு 12 ஆம் வகுப்பு முடித்த பிறகு மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 2018-19 ஆம் கல்வி ஆண்டில் 17.20 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். 2019-20 ஆம் கல்வியாண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட ரூ.313.59 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. மெட்ரிகுலேசன் பள்ளிகள்

### 5.1. முன்னுரை

மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆங்கில வழியில் கல்வி கற்பிப்பதை முதன்மையாக கொண்டு செயல்படும் தனியார் சுயநிதிப் பள்ளிகளாகும். இப்பள்ளிகள் முதலில் சென்னை மற்றும் மதுரை பல்கலைக்கழகக் கட்டுப்பாட்டில் இருந்தன, பின்னர் 1978 ஆம் ஆண்டு, பள்ளிக் கல்வி இயக்கக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. மேலும், 2001 ஆம் ஆண்டு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் தனியாக உருவாக்கப்பட்டது. தற்போது 4,380 மெட்ரிகுலேசன் பள்ளிகள் 38 இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைகளுக்கு தரமான கல்வி வழங்கி வருகின்றன.

### 5.2. தொலைநோக்கு

சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள், முழு தகுதி பெற்ற ஆசிரியர்களை நியமித்தல், புதிய பாடத்திட்டத்தின்படி பள்ளிக் குழந்தைகளின் உயர்நிலைக் கற்றல் அடைவுகள் மற்றும் முழுமையான வளர்ச்சி ஆகியவற்றை உறுதி செய்து தரமான கல்வி வழங்குவதே இவ்வியக்ககத்தின் தொலை நோக்காகும்.

### 5.3. நோக்கங்கள்

- புதிய மெட்ரிகுலேசன் பள்ளி தொடங்க அனுமதி அளித்தல்
- அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் வரையறைகளை பூர்த்தி செய்யும் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணை வழங்குதல்
- முழு தகுதி பெற்ற ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவதை உறுதி செய்தல்
- கற்றலுக்கு உகந்த சூழல் இருப்பதை உறுதி செய்தல்
- பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல்
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ நடைமுறைப்படுத்த மாநில முகமையாகச் செயல்படுதல்

## 5.4.நிர்வாகப் பொறுப்புகள்

### *5.4.1. அனுமதி / அங்கீகாரம்*

அரசால் நிர்ணயிக்கப்படும் வரையறைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்த பின்னர் புதிய பள்ளிகள் தொடங்க அனுமதி, அங்கீகாரம் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அனுமதி ஆணைகள் இவ்வியக்ககத்தால் வழங்கப்படுகின்றன. அங்கீகாரம் அதிகபட்சமாக மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், அங்கீகாரம் புதுப்பித்தல் ஆணை சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களால் வழங்கப்படுகிறது.

2018-19 ஆம் ஆண்டில், 52 புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகளை தொடங்கவும், 89 மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்தியும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### *5.4.2. நிர்வாக மறுசீரமைப்பு*

முன்னதாக, மெட்ரிகுலேசன் பள்ளிகள் 17 மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர்களின் கட்டுப்-பாட்டில் இருந்தன. ஒவ்வொரு மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளரின் கட்டுப்பாட்டு எல்லைக்குள்ளும் இரண்டு

அல்லது மூன்று மாவட்டங்கள் இருந்ததால் பரந்த நிர்வாக எல்லையை கவனிக்க வேண்டியிருந்தது. பள்ளிகளை சீரிய முறையில் கண்காணிப்பதை உறுதிசெய்யவும், தரமான கல்வி வழங்கவும் மற்றும் அங்கீகாரமற்ற பள்ளிகள் உருவாவதை தடுக்கவும் நிர்வாக அமைப்பில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் பணியிடங்கள் மாவட்டக் கல்வி அலுவலர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, ஒவ்வொரு மாவட்டக் கல்வி அலுவலரும் சமமான எண்ணிக்கையில் பள்ளிகளை கண்காணிக்கும் வண்ணம் நிர்வாக எல்லை மாற்றி அமைக்கப்பட்டது. மாவட்டக் கல்வி அலுவலர்கள் அந்தந்த மாவட்டத்தின் முதன்மைக் கல்வி அலுவலரின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டனர். மெட்ரிகுலேசன் பள்ளிகளை சீரிய முறையில் கண்காணிக்க முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன.

- அங்கீகாரம் புதுப்பித்து ஆணை வழங்குதல்
- கூடுதல் பிரிவுகள் தொடங்க அனுமதி ஆணை வழங்குதல்
- சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக்

கல்வி உரிமைச் சட்டம், 2009இன் கீழ் 25 விழுக்காடு இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை நடைமுறைகளைக் கண்காணித்தல்

- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் அதற்கான விதிகளை மீறும் பள்ளிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்க, மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த மற்றும் பொதுநலன் கருதி பள்ளிகளை மூடுவதற்கான கருத்துருக்களை பரிந்துரை செய்தல்

### *5.4.3. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ நடைமுறைப் படுத்துதல்*

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்-2009 தமிழகத்தில் சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்-2009, சட்டப்பிரிவு 12 (1) (c)இன்படி சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளை நுழைவுநிலை வகுப்பில் அதாவது எல்.கே.ஜி / முதல் வகுப்பில் சேர்க்கை

செய்வது சார்ந்து தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வகைச் சேர்க்கையில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய, 2017-18 ஆம் ஆண்டு முதல் 25 விழுக்காடு இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கைக்கு இணைய வழியாக விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இந்த வசதியின் மூலம் பள்ளிகளில் சேர்க்கைக்கு பெற்றோர் இணைய வழியில் விண்ணப்பிக்கலாம். தகுதியான விண்ணப்பங்களுக்கு சேர்க்கை வழங்க வேண்டிய பொறுப்பு பள்ளிகளுக்கானதாகும். வட்டார மற்றும் மாவட்ட அளவில் உள்ள கல்வி அலுவலகங்களில் கட்டணமில்லாமல் இணைய வழியில் விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பள்ளிகளில் சேர்க்கைக்கு நிர்ணயிக்கப்பட்ட காலியிடங்களை விட அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டிருப்பின் விண்ணப்பதாரர் / பெற்றோர் முன்னிலையில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர். முன்னுரிமைப் பிரிவினரான ஆதரவற்ற மற்றும் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், மூன்றாம் பாலினர், துப்புரவுப் பணியாளரின் குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோரிடமிருந்து பெறப்படும் தகுதியான விண்ணப்பங்கள் முதலில் பரிசீலனை

செய்யப்பட்டு குலுக்கல் நடத்தப்படுவதற்கு முன்னர் அவர்களுக்கு சேர்க்கை வழங்கப்படும். 2018-19 ஆம் ஆண்டில், 64,385 வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். பிரிவு வாரியாக சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பிரிவு | சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகள் |
|---|---|---|
| 1 | வாய்ப்பு மறுக்கப்பட்டவர் | 12,984 |
| 2 | நலிவடைந்த பிரிவினர் | 51,068 |
| 3 | ஆதரவற்றவர் | 58 |
| 4 | எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டோர் | 4 |
| 5 | சுகாதாரப் பணியாளர் குழந்தைகள் | 72 |
| 6 | மாற்றுத் திறனாளிகள் | 198 |
| 7 | மூன்றாம் பாலினர் | 1 |
| **மொத்தம்** | | **64,385** |

2013-14 ஆம் ஆண்டு முதல் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 சட்டப்பிரிவு 12 (1) (c)ன் கீழ் இதுவரை சேர்க்கை செய்யப்பட்ட

4,83,902 குழந்தைகளுக்கான தொகை ரூ.644.69 கோடி அரசால் பள்ளிகளுக்கு ஈடுசெய்யப்பட்டுள்ளது.

**5.5. தரமான கல்வி**

தொடர் கண்காணிப்பின் மூலம் பள்ளிகளில் தரமான கல்வி அளிக்க அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கலைத்திட்டம், பாடத் திட்டம் மற்றும் பாடப்புத்தகங்கள் ஆகியவை இதர தேர்வு வாரியங்களுக்கு இணையாக மாற்றியமைக்கப் பட்டுள்ளன. அனைத்து மெட்ரிகுலேசன் பள்ளிகளும் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட புதிய பாடத் திட்டத்தினை பின்பற்றுகின்றன.

**5.6. அங்கீகாரம் மற்றும் புதுப்பித்தலுக்கு இணையம் வழியாக விண்ணப்பித்தல்**

ஆரம்ப அங்கீகாரம், அங்கீகாரம் புதுப்பித்தல், கூடுதல் வகுப்பு தொடங்க அனுமதி, மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அனுமதி ஆகியவற்றிற்கு இணையம் வழியாக விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இணையம் வழியாக அங்கீகாரம் புதுப்பித்தலுக்கு விண்ணப்பித்த பள்ளிகளுக்கு

சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களால் ஆணை வழங்கப்பட்டுவருகிறது.

### 5.7. கட்டண நிர்ணயம்

பள்ளிகளில் நன்கொடை வசூலிப்பதைத் தடுக்கவும், கல்வியை வணிகமயமாக்குதல் மற்றும் இலாப நோக்கத்தினைக் கட்டுப்படுத்தவும், 'தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப் படுத்துதல்) சட்டம், 2009' சட்டமாக்கப்பட்டது. தனியார் பள்ளிகளுக்கு கட்டண நிர்ணயம் செய்ய ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரைத் தலைவராகக் கொண்ட தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு, இதுவரை 7,805 பள்ளிகளுக்கு கட்டண நிர்ணயம் செய்துள்ளது. கட்டண நிர்ணய ஆணை சம்பந்தப்பட்ட பள்ளிகளின் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படுகிறது. மேலும், கட்டண நிர்ணய ஆணை இக்குழுவின் இணைய தளமான "www.tamilnadufeecommittee.com"-இல் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இதுவரை கட்டண நிர்ணயம் செய்திட கட்டண நிர்ணயக் குழுவின் முன் ஆஜராகாத பள்ளிகள் குழுவின் முன் ஆஜராகி கட்டண நிர்ணயம் செய்துகொள்ள அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. 2018-19 ஆம் ஆண்டில், கட்டண நிர்ணயக் குழுவின்

ஆணையால் பாதிக்கப்பட்ட 51 பள்ளிகள், சட்டப் பிரிவு 6 (3) இன்படி ஆட்சேபனைகளை சமர்ப்பித்துள்ளன. பள்ளிகளின் ஆட்சேபனைகள் இக்குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு உரிய ஆணைகள் வழங்கப் பட்டுள்ளது. சட்டப்பிரிவு 7(3)இன்படி கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டதாக பெற்றோர்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் மீது பள்ளி நிர்வாகத்திற்கும் பெற்றோர்களுக்கும் உரிய வாய்ப்பு வழங்கி, விசாரணை மேற்கொள்ளப்பட்டு தக்க ஆணைகள் வழங்கப்பட்டுவருகிறது.

### 5.8. தனியார் பள்ளிகளை முறைப்படுத்துதல்

மாநில பள்ளிக் கல்வி பொதுப் பாடச்சட்டம், 2010 சட்டமாக்கப்பட்டு அனைத்து வகை தனியார் பள்ளிகளும் மாநில பொதுக் கல்வி வாரியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மேற்படி சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், மாநில பொதுக் கல்வி வாரியம் மற்றும் இதர வாரியங்களில் இணைப்பு பெற்ற அனைத்து தனியார் பள்ளிகளையும் ஒழுங்குபடுத்தும் பொதுவான சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொதுவான சட்டம் மற்றும் விதிகளை வகுக்க மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. குழுவின்

அறிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்ட முன்வடிவு-2018, தமிழக சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டு மாண்புமிகு குடியரசுத் தலைவரின் இசைவு வேண்டி மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்துதல்) விதிகள் வகுக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

### 5.9. நிதி ஒதுக்கீடு

2019-20 ஆம் ஆண்டிற்கு ரூ.251.45 கோடி நிதி அரசால் இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

# 6. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

## 6.1. முன்னுரை

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் பள்ளிக் கல்வியில் கற்றல் கற்பித்தல் முறைகளில் தரம் வாய்ந்த மாற்றங்களை நடைமுறைப் படுத்துவதில், மாநிலத்தின் முதன்மைக் கல்வி நிறுவனமாக செயல்பட்டுவருகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சிறந்த கல்வி வல்லுநர்களை ஈடுபடுத்தி, 12 ஆம் வகுப்பு வரை கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை உருவாக்கி வருகிறது. இந்நிறுவனம் ஆசிரியர் பணிமேம்பாட்டுப் பயிற்சிகளையும் வடிவமைத்துத் தருகிறது. தகவல் தொழில்நுட்பத்தில் காணும் புதிய அணுகுமுறைகளை அறிமுகப்படுத்தி மாணவர்களை 21ஆம் நூற்றாண்டிற்கேற்ற கற்போராக மாற்றவும், அவர்கள் பல்வேறு நுண்திறன்களைப் பெறவும் உதவுகிறது. பள்ளிப்படிப்பை முடித்தபின் சவால்களை எதிர்கொள்ளும் வகையிலும் தகுந்த உயர்கல்வியைத் தெரிவு செய்யவும், தங்கள் திறனுக்குத் தகுந்த எதிர்காலத்தை தேர்வு செய்யவும், மாணவர்களுக்கு தகுந்த திட்டங்களை வகுத்து அதன் மூலம் வழிகாட்டுதல் வழங்குகிறது. பள்ளிக்கல்வித் துறையின் பிற

இயக்ககங்களின் செயல்பாட்டிற்கு இந்நிறுவனம் உறுதுணையாக செயல்பட்டு தேவை அடிப்படையிலான பயனுள்ள பணியிடைப் பயிற்சிகளை தயாரித்து அனைத்து நிலை ஆசிரியர்களுக்கும் வழங்கி வருகிறது. வகுப்பறைகளில் எழும் கல்வி சார்ந்த பொருண்மைகளுக்கு தீர்வு காணவும், ஆசிரியர்களை சிந்தனைத் திறன் கொண்ட கல்வியாளர்களாக மாற்றவும் செயல் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஊக்குவிக்கின்றது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன வழிகாட்டுதலின் அடிப்படையில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தும் மாவட்டம் சார்ந்த ஆய்வுகள் கொள்கை வடிவமைப்பாளர்களுக்கு அறிவார்ந்த முடிவுகளை மேற்கொள்ள உதவுகின்றன. தமிழ் நாட்டில், அனைத்து நிலைகளிலும் குழந்தைகளின் தரமான கற்றல் அடைவுத் திறனை மேம்படுத்துவதில் மின்னியல் தொழில்நுட்பத்தினை முழுமையாகப் பயன்படுத்திட, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் உறுதுணையாக உள்ளது.

## 6.2. தொலைநோக்கு

கருத்துப் பரிமாற்றம் சார்ந்த ஆசிரியர் பயிற்சி, கணினிசார் கற்றல் வளங்கள் கொண்ட கல்வி மேம்பாடு போன்ற தொழில்நுட்ப அடிப்படையில், வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப நுண்ணறிவுத் திறனுடன் கற்கும் திறனை மாணவர்களிடம் மேம்படுத்துவதன் வாயிலாக தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறை நாட்டிலேயே உயர்வான நிலையை எட்டுவதற்கு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் முனைந்து செயல்பட்டுவருகிறது.

## 6.3. நோக்கங்கள்

- கலைத்திட்டம், பாடத்திட்டம், பாடநூல்கள், கற்றல் துணைப் பொருள்கள், செய்தி மடல்கள், இதழ்கள், கல்வி உபகரணங்கள், கணினி வாயிலாகக் கற்பிக்கும் பல்லூடக உள்ளடக்கங்கள் மற்றும் கல்விசார் நூல்கள் ஆகியவற்றை உருவாக்கல்

- பயிற்சி ஆசிரியர்களுக்கான பணிமுன் பயிற்சி மற்றும் ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சிகளை வழங்குதல்

- பள்ளிக்கல்வி சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், உதவுதல், ஊக்குவித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்

- புதுமையான கல்வி உத்திகளையும் நடை-முறைகளையும் உருவாக்கிப்பரவலாக்குதல்


- பல்வேறு வகையான மதிப்பீட்டு முறைகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு ஆக்கப் பூர்வமான பின்னூட்டம் வழங்குதல்

- வகுப்பறையில் கற்பித்தல் செயல்பாடுகளில் கற்றல் விளைவுகள் சார்ந்த கல்வி முறைகளைக் கையாள ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து ஊக்குவித்தல்.


- கல்வி மற்றும் பிற தொடர் சேவைகள் வழங்கும் சார்ந்த இயக்ககங்கள் மற்றும் துறைகள், பல்கலைக் கழகங்கள், அரசுசாரா நிறுவனங்கள், பிற கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்கள்/முகமைகள் ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றுதல்.

## 6.4. நிருவாக அமைப்பு

### *6.4.1. நிருவாக கட்டமைப்பு*



## 6.4.2. நிறுவன அமைப்பு



### 6.5. பணிகள் மற்றும் செயல்கள்

- பள்ளித் தரமேம்பாட்டிற்கான நெறி முறைகள், கல்விக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதில் மாநிலத்தின் முதன்மைக் கல்வி அமைப்பாகச் செயல்படுதல்
- உலகின் பல்வேறு துறைகளில் ஏற்படும் விரைவான மாற்றங்களைக் கருத்தில் கொண்டு கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை உருவாக்குதல்
- தொடக்கக் கல்விப் பட்டயப் பயிற்சிக்கான ஆசிரியர் கல்வி கலைத்திட்டத்தை வடிவமைத்தல் மற்றும் அவ்வப்போது சீரமைத்தல்
- ஒற்றைச் சாளர முறையில் தொடக்கக் கல்விப் பட்டயப் பயிற்சிக்கு மாணவர்களைத் தெரிவு செய்தல்
- ஆசிரியர் பயிற்றுநர்களின் பணித்திறன்களை மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் மின்னியல்

தளத்தைப் பயன்படுத்திக் கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளை மாற்றியமைக்கும் பணிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்

- கடினப் பாடப்பகுதிகளை எளிமையாக்க உரிய கணினிசார் கற்றல் உள்ளடக்கங்களை உருவாக்குதல்
- மாநிலம் முதல் வட்டாரம் வரையிலும் அனைத்து நிலைகளிலும் அனைத்து வகுப்புகளுக்கும் அவசியமான பயிற்சித் திட்டங்களைத் திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் உருவாக்குதல்
- மாநிலக் கல்வி மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக அனைத்துக் கல்வி நிர்வாக அலுவலர்களுக்கான பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009க்கு ஏற்ப, அனைத்துப் பாடப் பகுதிகளின் உட்கருத்துக்களை மாணவர்கள் அடையச் செய்ய, ஆசிரியர் மையக் கற்பித்தலை மாணவர் மையக் கற்றலாக மாற்றும் வகையில் கற்றல் அடைவுகளைக் கடைபிடிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்

- தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தொடக்க மற்றும் உயர்தொடக்க நிலைகளுக்குப் பரிந்துரைத்துள்ள கற்றல் அடைவுகள் உள்ளடக்கிய உத்திகளை, அடையவும் மேம்படுத்தவும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியுடன் இணைந்து செயல்படுதல்
- தமிழ்நாடு தொலைநோக்கு 2023 இலக்கினை அடைதல் தொடர்பான பணிகளுக்கான வழிகாட்டல் மற்றும் உயர் படிப்புகளைத் தேர்வு செய்தல் ஆகியவற்றின் அடிப்படையில் பள்ளியில் உயர் மற்றும் மேல் நிலைகளில் கற்றலைச் சீரமைத்தல்
- தேசிய மற்றும் மாநில அடைவுத் தேர்வுகளின் முடிவுகளை ஆராய்ந்து மாணவர்களின் கற்றல் அடைவுகளைப் பாதிக்கும் இடைவெளிகளைக் கண்டறிந்து பொருத்தமான குறைதீர் நடவடிக்கைகளை வடிவமைத்தல்
- மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களைக் கொண்டு, தொடர்ச்சியாக பள்ளிகளைப் பார்வையிட்டு அவர்களின் வாயிலாக பணிசார் உதவிகளை வழங்குதல்

## 6.6. ஆய்வுப்புலச் செயல்பாடுகள்

### *6.6.1. ஆய்வுச் செயல்திட்டங்கள்*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால், நாடு முழுவதும் உள்ள பல்கலைக் கழகங்களுடன் ஒருங்கிணைந்து தற்போதைய ஆய்வு முன்மொழிவுகளைக் கூர்ந்தாய்ந்து மேலாய்வு செய்ய, பணிமனைகள் நடத்தப்பட்டன. பணிமனைகளின் போது முன்வைக்கப்பட்ட 80 ஆய்வு முன்மொழிவுகளில் 50 முன்மொழிவுகள் தேர்வு செய்யப்பட்டு வல்லுனர்களால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்டன. ஆய்வுகளின் முடிவுகளால், ஆராய்ச்சி முறைகளில் தக்க புரிதல் ஏற்படுத்தப்பட்டு, கற்பித்தல் கற்றல் செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டன.

செயலாய்வுத் திட்டங்களின் முக்கிய கருப்பொருட்கள் பின்வருமாறு:

- பள்ளிகளில் சிறந்த கற்பித்தல் குறித்த முறைகள்
- தேசிய அடைவு ஆய்வுத் தேர்வு முடிவுகள் பற்றி ஆய்வு செய்தல்
- மலைவாழ் மக்களின் கல்விசார் இடர்பாடுகள்

- வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளின் கல்விசார் இடர்பாடுகள்
- நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் கற்போரின் இடர்பாடுகள்
- கல்வியில் மாணவர்களின் பின்னடைவுக்கான காரணங்கள் மற்றும் அதைக் களைவதற்கான உத்திகள்
- தொடக்கப்பள்ளி மாணவர்களின் படித்தல், எழுதுதல் மற்றும் பேசுதலில் காணப்படும் இடர்பாடுகள்
- கணிதப் பாடத்தை கற்றுக் கொள்வதிலும் புரிந்து கொள்வதிலும் மாணவர்களுக்குரிய திறன்களை அறிதல்
- கற்றலில் ஏற்படும் குறைபாடுகளையும் தடைகளையும் ஆராய்தல்

### *6.6.2. மாவட்ட அளவிலான செயல் ஆராய்ச்சிகள்*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மண்டல அளவிலான ஆராய்ச்சிப் பணிமனைகளை தொடர்ச்சியாக நடத்தி, 310 செயல் ஆராய்ச்சி முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் வழங்கியது. இச்செயலாராய்ச்சிகள் பள்ளி ஆசிரியர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டன. ஆராய்ச்சிகள் மற்றும்

செயலாராய்ச்சிகளின் முடிவுகள் தொகுக்கப்பட்டு அவற்றை ஆராய்ச்சித் தொகுப்பறிக்கையாகத் தயாரித்து மாவட்ட மற்றும் மாநிலக் கருத்தரங்கம் வாயிலாக பள்ளிக் கல்வித்துறை சார்ந்த அனைத்து தரப்பினருக்கும் வரும் கல்வியாண்டில் பரவலாக்கப்படும்.

## 6.7. பயிற்சி திட்டங்களும் செயல்பாடுகளும்

### *6.7.1. தரம் வாய்ந்த பணிமுன் பயிற்சி*

ஆசிரியர் பயிற்சி மாணவர்களின் கற்றல்- கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்கு கற்பித்தலில் புதுமையான நடைமுறைகளையும் புதிய அணுகுமுறைகளையும் உட்புகுத்தி பணிமுன் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. அறிவியல், கணக்கு மற்றும் ஆங்கிலப் பாடங்களைத் திறம்பட கற்பிக்கவும், ஆய்வு கூடங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கற்பிக்கவும் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப் படுகின்றனர். ஆசிரியர்கள், தங்கள் கற்பித்தல் செயல்பாடுகளில் கணினியைப் பயன்படுத்திக் கற்பிக்கும் வகையில், கணினிக் கல்விப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. மேலும், ஆசிரியர்களின் மனநலம் மற்றும் உடல்நலம் ஆகியவற்றை மேம்படுத்திக்கொள்ள, யோகாப் பயிற்சி வழங்கப்படுகிறது. மாணவ ஆசிரியர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வை நம்பிக்கையுடன் எதிர்கொள்வதை மேம்படுத்த

அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களும் இரண்டாமாண்டு மாணவர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்விற்கான பயிற்சிகளை அளித்து வருகின்றன.

2018-19ஆம் கல்வியாண்டில் தொழிற்கல்வி பட்டயப்பயிற்சி சேர்க்கப்பட்ட மாணவர்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நிறுவனங்களின் வகை | நிறுவனங்களின் எண்ணி-க்கை | சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு |
| 1 | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் | 12 | 410 | 1,047 |
| 2 | ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனம் | 7 | 59 | 66 |
| 3 | அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 9 | 137 | 113 |
| 4 | அரசு உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 34 | 465 | 264 |
| 5 | சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 247 | 2,415 | 3,317 |
| | **மொத்தம்** | **309** | **3,486** | **4,807** |

### *6.7.2. பணியிடைப் பயிற்சிகள்*

பணியிடைப் பயிற்சி ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்தும் பொருட்டு செயலூக்கத்துடன் பாடநூல்களின் கருத்துகளை பரிவர்த்தனை செய்யும் முக்கியப்பங்கினை வகிக்கின்றது. பள்ளி வகுப்பறைகளைப் பார்வையிட்டு ஆசிரியர்களுடன் கலந்துரையாடி மாணவர்கள் அடைந்துள்ள கற்றல் விளைவுகளின் இடர்பாடுகளைக் கண்டறிந்து அதற்கு ஏற்றவாறு பயிற்சித் திட்டங்களைத் தயாரித்து குழந்தைகளின் கற்றல் முறைகளில் தரம் சார்ந்த மாற்றங்களை ஏற்படுத்தும் நிலையில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன வழிகாட்டுதலுடன் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் செயல்படுகின்றன. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் முழுமையான ஆசிரியர் மேம்பாட்டு முயற்சிகளான புதிய உத்திகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஆசிரியர்களின் சிறந்த கற்பித்தலை பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு உதவி புரிகின்றன.

### *6.7.2.1. தொடக்கநிலை.*

தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பாடங்களில் கேட்டல், பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல் திறன்களை மேம்படுத்தும் வகையில் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அறிவியல் கருத்துகளை உள்ளூர், சுற்றுப்புற வளங்களைப் பயன்படுத்திப் புரிந்துகொள்ளுதல் பயிற்சியும், கணித உபகரணப் பெட்டி பயன்படுத்துதல் பயிற்சியும் முறையே அறிவியல் மற்றும் கணிதப்பாட கற்பித்தலில் பயன்படுத்தப்பட்டன. வகுப்பறைகளில் பல்லூடகப் பயன்பாட்டினை இணைத்தல் குறித்த பயிற்சியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. பயிற்றுநர் மற்றும் பயிற்சி பெறுபவர்களுக்கான கையேடுகள், பயிற்சியின் போது பரிவர்த்தனையில் ஏற்படும் இழப்பினை தடுக்கும் வகையில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. 2018-19 ஆம் கல்வியாண்டில், 1,15,232 தொடக்க நிலை ஆசிரியர்கள் இப்பயிற்சிகளால் பெரிதும் பயன் அடைந்தனர்.

### *6.7.2.2. உயர் தொடக்க நிலை*

முதன்மைப் பாடங்களுக்கு ஐந்து நாள் பயிற்சிகள் 2018-19 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. மொழிப்பாடங்களுக்கு பாடம், செய்யுள் மற்றும் இலக்கணம் கற்பித்தல் குறித்த மூன்று நாள் பயிற்சியும், நடைமுறை

இலக்கணம் மற்றும் வகுப்பறைத் தொடர்பு குறித்த இரண்டு நாள் பயிற்சியும் வழங்கப்பட்டது. இதே போன்று அறிவியல் தொடர்பான பாடங்களில், கணிதத்திறன் வளர்த்தல் மற்றும் கணித உபகரணப்பெட்டி பயன்படுத்துதல், அறிவியல் உபகரணப் பெட்டி மற்றும் உள்ளூர் சுற்றுப்புற வளங்களை பயன்படுத்துதல் குறித்த மூன்று நாள் பயிற்சியும், வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள் மற்றும் இயற்கை வளங்களை நில வரைபட நூலைப் பயன்படுத்திப் புரிந்து கொள்ளுதல் மற்றும் கண்டறிதல் குறித்த இரண்டு நாள் பயிற்சியும் நடத்தப்பட்டன. மேற்காண் பயிற்சிகளால் 76,000 ஆசிரியர்கள் பயனடைந்தனர். இது தவிர மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தேசியக் கல்வித் திட்டமிடல் மற்றும் மேலாண்மை நிறுவனத்துடன் இணைந்து, 6,950 நடுநிலைப் பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்குப் பள்ளித் தலைமைத்துவ மேம்-பாட்டுப் பயிற்சியினை நடத்தியுள்ளது.

### *6.7.2.3. பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகிய பாடங்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை நடத்தியது.

இப்பயிற்சியில் பாடக்-கருத்துகளைப் புரியவைத்தல், மாணவர்களை அரசுத் தேர்வுகளுக்கு ஆயத்தம் செய்தல் மற்றும் திறன் மிக்க மாணவர்கள் மற்றும் மெதுவாகக் கற்போர் ஆகியோருக்கு ஏதுவான கற்பித்தல் முறைகளை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பாடம் சார்ந்த பயிற்சி மட்டுமல்லாது, வகுப்பறைச் செயல்பாடுகளில் தொழில்நுட்பத்தினை இணைத்தல் மற்றும் வளரிளம் பருவ மாணவர்களுக்கு வழிகாட்டுதல் அளித்திடும் உளவியல் வழிகாட்டுதல் ஆகியவை உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு 5 நாள் பயிற்சியாக வழங்கப்பட்டன. 2018-19 ஆம் கல்வி ஆண்டில் இப்பயிற்சியின் மூலம் 37,630 பட்டதாரி ஆசிரியர்கள் பயனடைந்தனர்.

*6.7.2.4. முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களுக்கு வகுப்பறைச் செயல்பாட்டுத் திறன்கள் மற்றும் கற்பித்தல் திறன்களை மேம்படுத்துவதற்காகக் கருத்தாளர்கள் மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பணியிடைப்பயிற்சி அனைத்து மாவட்டங்களிலும் அறிவியல் பாடங்களுக்கு மூன்று நாட்களும், கலை பாடங்களுக்கு இரண்டு நாட்களும் வழங்கப்பட்டது. இரு

கட்டங்களாக வழங்கப்பட்ட இப்பயிற்சிகளில் 2018-19 ஆம் ஆண்டில் 17,456 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**6.8.கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை மேம்படுத்துதல்**

இந்தியாவின் அறிவுசார் மையமாகவும் புதுமை மையமாகவும் தமிழ்நாடு திகழ வேண்டும் என்பது தொலைநோக்கு தமிழ்நாடு 2023இன் நோக்கமாகும். உலகமயமாக்கல், சமூக மாற்றம் மற்றும் கலைத்திட்டப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி ஆகியவற்றின் காரணமாகவும், திறன் வாய்ந்த மனித வளங்களை உருவாக்குவதற்காகவும் கலைத்திட்டங்களை மாற்றியமைப்பதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. பள்ளி மாணவர்களிடையே தரமான கல்வியை நடைமுறைப்படுத்தவும், வருங்கால சவால்களை எதிர் கொள்ளும் பொருட்டும் அவர்களின் பகுப்பாய்வுத் திறன், கூர்சிந்தனைத் திறன், அறிவுத்திறன் ஆகியவற்றை வெளிப்படுத்த வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இதன் பொருட்டு, 2018 – 19 ஆம் கல்வியாண்டில் 1, 6, 9 மற்றும் 11ஆம் வகுப்புகளுக்கும் அதனை தொடர்ந்து 2019 – 20 ஆம் கல்வியாண்டில் 2, 3, 4, 5, 7, 8, 10 மற்றும் 12ஆம்

வகுப்புகளுக்கும் திருத்தி-யமைக்கப்பட்ட பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை அரசு அறிமுகப்படுத்த முடிவு செய்ததின் அடிப்படையில் பல்வேறு மாவட்டங்களில் பாடநூல் எழுதும் பணி நடைபெற்றது. திறன் மிகுந்த ஆசிரியர்கள் இப்பாடநூல் எழுதும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, அனைத்து வகுப்புகளுக்கும் புதிய பாடநூல்கள் 2019-20ஆம் கல்வியாண்டில் வழங்கப்படத் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

கடினமான பகுதிகள் மற்றும் மதிப்பீடு பகுதிகளுக்கு விரைவுக் குறியீட்டு துலங்கல் (QR Code) புதிய பாடத்திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளதால் இவை செறிவூட்டப்பட்ட பாடநூல்கள் என்றும் கூறப்படுகின்றன. ஒன்பது மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களுக்குக் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் வழிகாட்டுவதற்கு உதவும் வகையில் அறிவுரைக் குறிப்புகள் பாடநூலில் இடம் பெற்றுள்ளன. விரைவுக் குறியீட்டுத் துலங்கல் (QR code) வாயிலாகப் பாடப்பொருள் சார்ந்த காணொலிகள், பாடம் சார்ந்த கூடுதல் தகவல்கள், படங்கள் போன்றவற்றை மென்பொருள்கொண்டு பதிவிறக்கம் செய்யும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. திக்ஷா இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட பாடத்தொடர்புடைய

காணொலிகளை பள்ளி மாணவர்கள் பதிவிறக்கம் செய்து, பயன்படுத்திட முடியும்.

வாழும் பகுதி சார்ந்து மாணவர்களுக்கு ஏற்ற வகையிலும், தமிழக அரசியல் வரலாறு, அறநெறிகள் மற்றும் கலாச்சார மரபுரிமைகளை வெளிப்படுத்தும் வகையிலும் பாடநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உலகளாவிய கலைச்சொற்கள் மற்றும் அறிவியல் அகராதியை தமிழில் உருவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் ஆசிரியர் கையேடுகள், மாணவர் பயிற்சி ஏடுகள் ஆகியனவும் புதிய பாடநூலின் அடிப்படையில் உருவாக்கப் பட்டுள்ளன.

### 6.9. பிற செயல்பாடுகள்

#### *6.9.1.எண்ணியமாக்கும் முயற்சிகள் – பாடப் புத்தகங்களை எண்ணியமாக்குதல் (மின்-பதிப்பு)*

வழக்கமாகப் பயன்படுத்தப்படும் பாடநூல்களை நவீன மின்-நூல்களாக மாற்றும் பணியினை தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மேற்-கொண்டுள்ளது. பாடநூல்கள் மின்-

பதிப்பு 3.0 வடிவமாக மாற்றப்பட்டுள்ளன. இம்மின்-பதிப்பு தனித்தன்மையுடன் வடிவமைக்கப்பட்டுள்ள படிப்பானின் உதவியுடன் பயன்படுத்தக் கூடியது. பாடப்பொருளைத் தெரிவு செய்யவும், அதனைப் பெரிதாகக் காட்டவும், சில பகுதிகளைக் கோடிட்டுக் காட்டவும், திரை, எழுத்து, வண்ணம் ஆகியவற்றைச் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள் உட்பட அனைத்துக் குழந்தைகளின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றவும் இம்மின் நூல்களால் இயலும். தேவைப்படும் இடங்களில், இப்பாடநூல்களுடன் தேவையின் அடிப்படையில் பல்லூடகப் பாடப் பொருட்களையும் உள்ளடக்கங்களையும் இணைக்க இயலும். தற்போது, 10ஆம் வகுப்புப் பாடநூல்கள் மின்-பதிப்பு முறைக்கு மாற்றப்பட்டுள்ளன. இந்தப் பாடநூல்கள் **தமிழ்நாடு மின் - பதிப்புப் படிப்பான்** என்று பெயரிடப்பட்ட சிறப்பு ஆண்ட்ராய்டு செயலி மூலம் மாணவர்கள் பெற்றிட வழிவகை செய்யப் பட்டுள்ளது. இந்த செயலியில் மாணவர்கள் 10ஆம் வகுப்பின் ஆங்கில வழி மற்றும் தமிழ் வழிப் பாடநூல்களைக் காண இயலும். இதனைத் தொடர்ந்து அனைத்து வகுப்புப் பாடநூல்களையும் மின்-பதிப்பு முறைக்கு மாற்றியமைத்து அனைவரும் இவற்றை எளிதாக இணைய வழியில் பெற திட்டமிடப்பட்டுள்ளது.

### *6.9.2. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்*

#### *6.9.2.1. மெய்நிகர் வகுப்பறைகள் மூலம் கற்றல் மற்றும் கற்பித்தல்*

அரசுப் பள்ளிகளில் கற்றல் தரத்தை மேம்படுத்தும் வகையில் தகவல் தொடர்புத் தொழில் நுட்பத்தை பயன்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. புவியியல் தடைகளால் பிரிக்கப்பட்டுள்ள, தொடர்பு கொள்ள வசதியற்ற, தரமான கற்பித்தல் வசதியில்லாத இடங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் கற்றலில் மெய்நிகர் வகுப்பறை பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 770 அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 11 மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களில் மெய்நிகர் வகுப்பறை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2018-19 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில், 258 கற்பித்தல் வகுப்புகள் மெய்நிகர் வகுப்பறைகள் வாயிலாக நடத்தப்பட்டன. இதன் மூலம் மாணவர்கள், பாட வல்லுநர்கள் மற்றும் அனுபவமிக்க ஆசிரியர்களுடன் உரையாடி, முக்கிய பாடங்களின் கருத்துகளில் தெளிவு பெற்றனர்.

*6.9.2.2. கட்டற்ற திறந்த வள மென்பொருள் பயிற்சி*

கட்டற்ற திறந்த வள மென்பொருள்களைப் பயன்படுத்தி, கற்றல்-கற்பித்தலை மேம்படுத்தும் முயற்சியை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. ஆசிரியர்கள் பயனுள்ள பாட வளங்களை உருவாக்கும் போது, அவர்களுக்குப் படைப்புச் சுதந்திரத்தை வழங்க கட்டற்ற திறந்தவள மென்பொருள்கள் உதவுகின்றன. இம்மென்பொருள்கள் இணைய வழியில் இலவசமாகக் கிடைக்கின்றன. இவற்றைக் கற்பித்தலில் பயன்படுத்தி ஆசிரியர்களைப் பாடவள வல்லுநர்களாக உருவாக்குவதற்கென, பயிற்சிகளை வழங்க திட்டமிட்டுள்ளது.

*6.9.2.3. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுப் பணித் தாள்களின் (CCE Worksheets) வழியாக மதிப்பீட்டில் மாற்றுவழி*

மதிப்பீட்டில் மாற்று முறையாக, அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான அனைத்து வகுப்புகளுக்கும், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுப் பணித்தாள்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இப்பணித்தாள்களின் மூலம், மாணவர்களின்

கருத்தியல் புரிதலையும் ஆசிரியர்களின் வினா கேட்கும் திறனையும் மேம்படுத்த முடியும்.

### *6.9.3. தேசிய அடைவு ஆய்விற்கு பிந்தைய செயல்பாடுகள்*

தேசிய அடைவு ஆய்வு, 2017-18 வழியாகக் கிடைத்த முடிவுகளைக் கொண்டு, தமிழக மாணவர்கள், உயர் கற்றல் திறனுடனும் நம்பிக்கையுடனும் முன்னிலை பெறுவதற்கு உகந்தவாறு பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த பலதரப்பட்ட அலுவலர்கள் அனைவருக்கும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் பல கட்டப் பணிமனைகளை நடத்தியுள்ளது.

2018-19 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பயிற்சிகள் நடத்தப்பட்டன.

- கற்றல் விளைவுகள் சார்ந்த புத்தாக்கப் பயிற்சி 28.08.2018 அன்று, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கும் வழங்கப்பட்டது.
- 06.09.2018 மற்றும் 07.09.2018 ஆகிய இரண்டு தினங்களில், பல்வேறு பாடங்களுக்கான முதன்மை பயிற்றுநர் புத்தாக்க பயிற்சி

நடைபெற்றது. கற்றல் செயல்பாடுகளை வடிவமைக்க இப்பயிற்சி உதவியாக அமைந்தது. இப்பயிற்சியால், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் 397 நபர்கள் பயனடைந்தனர்.

- அனைத்து மாவட்டங்களிலுள்ள 236 நிர்வாக அலுவலர்களுக்கு (உதவித் திட்ட அலுவலர், மாவட்ட உதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர், மாவட்டக் கல்வி அலுவலர், தேசிய அடைவு ஆய்வு ஒருங்கிணைப்பாளர்கள்) மேற்பார்வை சார்ந்த புத்தாக்க பயிற்சி வழங்கப்பட்டது.
- இரண்டு கட்டங்களாக 865 உயர் தொடக்க நிலை பள்ளி ஆசிரியர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டது.

### *6.9.4. பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு நடவடிக்கைகள்*

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் துணையுடன் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பேரிடர் மேலாண்மைப் பொருள் சார்ந்த பாடத்திட்டங்களையும் பயிற்சிக் கட்டகங்களையும் உருவாக்கியுள்ளது. 2018-19 ஆம் கல்வியாண்டில் புதிய பாட

நூல்களில் பேரிடர் மேலாண்மை பற்றிய பாடக் கருத்துகள் சேர்க்கப்பட்டுள்ளன. பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் பேரிடர் மேலாண்மை மாதிரிப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு அதன்மூலம், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பேரிடர் மேலாண்மை மற்றும் மீட்பு நடவடிக்கைகள் சார்ந்த பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளன. 2019-20 ஆம் ஆண்டில், பேரிடர் மேலாண்மை மாதிரிப் பள்ளி ஆசிரியர்கள் 64 நபர்களுக்கு பயிற்சி வழங்க மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### *6.9.5. குழந்தை உரிமைகளும் பாதுகாப்பும்*

குழந்தைகள் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகத் தமிழ்நாடு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இடைநிலை ஆசிரியர்களுக்கான பட்டயப்படிப்புப் பாடத்திட்டத்தில் குழந்தை உரிமைகள் மற்றும் பாதுகாப்பு குறித்தான பாடத்தை இணைக்கவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

குழந்தை உரிமைகள், சிறுவர் சீர்திருத்தச் சட்டம் மற்றும் அச்சட்டத்தின் முக்கியப் பிரிவுகள் குறித்து ஆசிரியர் பட்டயப்படிப்பிற்கான பாடத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. மாவட்ட மேற்பார்வை அலுவலர்களான முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி-பயிற்சி நிறுவன முதல்வர்கள் ஆகியோருக்கு சென்னை மாநில மேல்நிலைப் பள்ளியில் 29.08.2018 அன்று சிறுவர் சீர்திருத்தச் சட்டம் குறித்துப் பயிற்சி நடைபெற்றது. 96 ஆசிரியர்களுக்கு குழந்தைகள் பாதுகாப்பு, சிறுவர் சீர்திருத்தச் சட்டம், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுக்காக்கும் சட்டம் ஆகியன குறித்த இரண்டு நாள் பயிற்சி 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடத்தப்பட்டது.

### *6.9.6. கற்றல் குறைபாடுகள்- டிஸ்லெக்ஸியா முதன்மை பயிற்றுநர் பயிற்சி*

"டிஸ்லெக்ஸியா மாணவர்களுக்கான குறைதீர் கற்பிப்பு அடிப்படைகள்" பயிற்சி மற்றும் வகுப்பறையில் உள்ள நடுத்தர நிலை டிஸ்லெக்ஸியா மாணவர்களை இனங்கண்டு அவர்களைக் கையாள வேண்டிய முறைகள் குறித்த பயிற்சி, தேர்ந்தெடுக்கப்பட்ட 34 ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், 1,088 ஆசிரியர்களுக்கு

டிஸ்லெக்ஸியா குறித்து உணர்வூட்டல் பயிற்சி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், கடலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், வேலூர், திருவாரூர், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய எட்டு மாவட்டங்களிலிருந்து 320 ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு ஐந்து நாள் பயிற்சி வழங்கியுள்ளது.

### *6.9.7. தீக்சா–ஆசிரியர்களுக்கான மின்மய பணித்தளம்*

மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய மின்மய பணித்தளம் தீக்சா. இப்பணித்தளம் கற்றல், கற்பித்தல், தொழில் மேம்பாடு குறித்த திறந்த வளங்களை மாநில அரசுகளுக்கும் பிற நிறுவனங்களுக்கும் வழங்கி ஆசிரியர் மைய முயற்சிகளை ஒருங்கிணைத்து வருகிறது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் 40,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் வழியாகத் திறம்படக் கற்பிக்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. விரைவுத் துலங்கல் குறியீட்டை (QR code) ஒவ்வொரு பாட அலகிலும் பதித்து, பாடம் தொடர்பான காணொலிகள், இயங்கு நிலை மாதிரிகள், முப்பரிமாண அசைவூட்டல்கள் போன்றவற்றை

எந்நேரமும் மாணவர்கள் காண வழிவகை செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதும் பகிர்ந்தளிக்க ஏதுவாக, இதுவரை தீக்சா மின்மய பணித்தளத்தில் 8,333 எண்ணிக்கையிலான மேற்காணும் உள்ளடக்கங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### *6.9.8. சாகுண் (Shagun) இணையதளம்*

பள்ளிக் கல்வியில் புகுத்தப்பட்ட புதுமைகளை சாகுண் இணையதளம் ஆவணப்படுத்துகிறது. ஆசிரியர்களின் சிறந்த செயல்பாடுகளைக் காணொலிகள், நிகழ்வு ஆய்வுகள், நற்சான்றுகள், படங்கள் வழியாக விளக்கும் கொள்கலனாக இவ்விணையதளம் திகழ்ந்து வருகிறது. சாகுண் இணையதளத்திலுள்ள இணையவழி கண்காணிப்புக் கூறுகளின் வாயிலாகக் கல்வி வளர்ச்சி அளவுகோல்களின்படி மாநிலக் கல்வித்துறை பெற்றுள்ள செயல்திறனை அளவிட முடியும். பல்வேறு நடவடிக்கைகள் தொடர்புடைய வழக்காய்வுகள், சாட்சியங்கள், படங்கள் மற்றும் காணொலிப் படங்கள் இவ்விணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. முக்கிய கல்வி குறியீடுகளைப் பொறுத்தவரை தமிழ்நாடும் முன்னணி வகிக்கும் மாநிலங்களில் ஒன்றாக திகழ்கின்றது.

### *6.9.9. கணித-அறிவியல் ஆய்வகத் திறன்கள் மேம்பாட்டுப் பயிற்சி*

2018–19 ஆம் கல்வியாண்டில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஓர் அரசு சாரா நிறுவனத்துடன் இணைந்து மாவட்ட ஆசிரியர் கல்வி-பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் 128 பேர்களுக்கு கணிதம்-அறிவியல் கருவிகளைக் கையாளுதல் குறித்த பயிற்சிகளை வழங்கியது. இதன்மூலம், மாணவர்கள் தாமே செய்து கற்றல் வாயிலாக அவர்களின் சிந்தனைத்திறன் தூண்டப்படுகிறது.

### *6.9.10. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணி மேம்பாட்டு பயிற்சி*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சாஸ்திரா பல்கலைக் கழகத்துடன் இணைந்து, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் பணியாற்றும் கல்வியாளர்களுக்கு ஆறு நாட்கள் உண்டு உறைவிடப் பயிற்சியாகத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சியினை ஏழு கட்டங்களாக 2018-19 ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது.

### *6.9.11. பெரு நிறுவன சமூகப் பங்களிப்புடன் கூடிய செயல்பாடுகள் (CSR activities)*

இருபரிமாண, முப்பரிமாண அனிமேஷன் மற்றும் கிராபிக்ஸ் கொண்ட பாடங்களுக்கான களஞ்சியம் உருவாக்கப்பட்டு வருகிறது. கல்வி மற்றும் கல்விசார் செயல்பாடுகளில் மாணவர்களின் திறனை மதிப்பிடும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, இரண்டு நாட்கள் நடைபெற்றது. இப்பயிற்சியின் வாயிலாக, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், கல்வியாளர்கள் 64 பேர் பயனடைந்தனர். 600 அரசு பள்ளி மாணவர்களின் செயல்திறன் ஆய்வு செய்யப்பட்டது.

### 6.10.நிதி ஒதுக்கீடு

2019-20 ஆம் ஆண்டிற்கு ரூ103.59 கோடி நிதி அரசால் இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

# 7. அரசுத் தேர்வுகள்

## 7.1. முன்னுரை

அரசுத் தேர்வுகள் இயக்ககம், 1975 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது, மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களது கற்றல் அடைவினை துல்லியமாக அளவிடும் வகையில் பொதுத் தேர்வுகளை மட்டுமின்றி இதரத் தேர்வுகளையும் அரசுத் தேர்வுகள் இயக்ககம் நடத்திட பொறுப்பேற்றுள்ளது. 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்கள் உயர்கல்வி தொடர்வதற்கும் வேலைவாய்ப்பு பெறுவதற்குமான மிக முக்கிய மற்றும் மதிப்பு வாய்ந்த ஆவணங்களாகும். அரசுத்தேர்வுகள் இயக்ககம் எண்ணியல் தொழில்நுட்பத்தின் அவசியத் தேவையினை உணர்ந்து, பொதுத்தேர்வுகள் நடத்தும் முறைகளை துல்லியமாக மேம்படுத்திடவும், நேரத்தினை குறைத்திடவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 7.2. தொலைநோக்கு

உரிய தேர்வுகளை திறம்பட நடத்தி நேர்மையாக கற்றல் மதிப்பீடுகளை உறுதி செய்தல்

### 7.3. நோக்கங்கள்

- பொதுத் தேர்வுகளை பாதுகாக்கப்பட்ட சூழலிலும், நேர்மையான முறையிலும் நடத்துதல்
- வினாத்தாட்கள் அமைத்தலில் புதிய சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதன் வாயிலாக மாணாக்கரின் பன்முக சிந்தனைத் திறனை வளர்த்தல்
- மதிப்பீட்டு முறையினை மேம்படுத்துதல்
- நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் தேர்வு முடிவுகளை வெளியிட்டு மதிப்பெண் சான்றிதழ்களைத் தேர்வர்களுக்கு வழங்குதல்

### 7.4. செயல்பாடுகள்

அரசுத் தேர்வுகள் இயக்ககம் 35 விதமான தேர்வுகளை நடத்துவதனை முதன்மையான பொறுப்பாகக் கொண்டுள்ளது. அத்தேர்வுகளுக்கு வினாத்தாள் தயாரித்து

வழங்குதல், தேர்வுகளை ஒளிவு மறைவின்றி நடத்துதல், தேர்வு முடிவுகளை வெளியிடுதல், மதிப்பெண் சான்றிதழ் வழங்குதல் ஆகிய பணிகளில் இவ்வியக்ககம் ஈடுபட்டுள்ளது. 2018-19 ஆம் ஆண்டில் 26,52,241 மாணாக்கர்கள் இடைநிலை மற்றும் மேல்நிலை (முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு) பொதுத் தேர்வுகளை எழுதியுள்ளனர்.

## 7.5. நிர்வாக அமைப்பு: சீர்திருத்தங்கள்

தேர்வுகளை எளிதாக நடத்தும் பொருட்டு அரசுத் தேர்வுகள் இயக்ககம் மற்றும் 7 அரசுத் தேர்வுகள் மண்டல அலுவலகங்களின் அமைப்பு மாற்றி அமைக்கப்பட்டு, தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும், புதிதாக அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டு 04.12.2018 முதல் செயல்பட்டு வருகிறது. தற்பொழுது இயக்குநருக்கு உதவியாக 2 இணை இயக்குநர்களும், 9 துணை இயக்குநர்கள் மற்றும் 34 உதவி இயக்குநர்களும் செயல்படுகின்றனர். தேர்வு மையங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள் மற்றும் பிற படிவங்கள், தேர்விற்கான முன்பணத்தினை விநியோகம் செய்தல், தேர்வு முடிவுகள் வெளியிட்ட பின்னர் மதிப்பெண் சான்றிதழ்கள் விநியோகம் போன்ற

முக்கியப் பணிகள் 32 உதவி இயக்குநர் அலுவலக துணையுடன் இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

### 7.6. இணையதள வசதி

மாணவர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு தேவையான தகவல்களை பெறுவதற்கு www.dge.tn.gov.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் நடத்தப்படும் தேர்வுகள், தேர்வுகளுக்கான கால அட்டவணை, விண்ணப்பப் படிவங்களின் மாதிரிப் படிவம், கட்டண விவரங்கள், சான்றிட்ட மதிப்பெண் நகல் (CCM), புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ் பெறுதலுக்கான நடைமுறைகள், பொதுத் தேர்வுகளுக்கான மாதிரி வினாத்தாட்கள் மற்றும் முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்கள் ஆகியவற்றை இணையதளத்தின் வாயிலாக மாணாக்கர்கள் தெரிந்து கொள்ளலாம். மேலும், மேற்படி இணையதள உருவாக்கத்தின் வாயிலாக, தேர்வுகள் எழுதவுள்ள பள்ளி மாணாக்கர்கள் மற்றும் தனித்தேர்வர்களது பெயர் பட்டியல் தயாரிப்பதற்கு தேவையான விவரங்களைப் பெற்றுக் கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2017-18 ஆம் ஆண்டு முதல் பாரத ஸ்டேட் வங்கியின் கட்டணச் சேகரிப்பு இணையதளத்தின் வழியாக தேர்வுக்

கட்டணங்களைச் செலுத்துவதற்கு வழிவகை செய்யப் பட்டுள்ளது. தற்போது தனித்தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை இணையதளத்தில் நேரடியாகப் பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப் பட்டுள்ளது. பள்ளிகள், தங்களது அனைத்து மாணாக்கர்களின் நுழைவுச் சீட்டுகளையும் பதிவிறக்கம் செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 7.7. தேர்வு சேவை மையங்கள்

பள்ளி வளாகத்திலேயே 253 தேர்வு சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சேவை மையத்தில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் அனைத்து விதமான தேர்வுகளுக்கும் எளியமுறையில் திறம்பட தேர்வர்கள் விண்ணப்பிக்கலாம்.

## 7.8. தமிழ் வழியில் பயிலும் மாணாக்கருக்குத் தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்களித்தல்

இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வினை தமிழ் வழியில் பயின்று தேர்வெழுதும் பள்ளி மாணாக்கருக்குத் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு வருகிறது. 2018-19 ஆம் கல்வியாண்டில், இடை-நிலைப் பள்ளி இறுதி

விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வில் 5,22,409 பள்ளி மாணாக்கரும் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வில் 4,54,552 பள்ளி மாணாக்கரும், மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் 5,13,861 பள்ளி மாணாக்கரும், தமிழ் வழியில் பயின்றதால் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்குப் பெற்று பயனடைந்துள்ளனர்.

## 7.9.சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சலுகைகள்

இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத்தேர்வு எழுதும் கற்றலில் குறைபாடுடைய தேர்வர்கள், கண்பார்வையற்றோர், காதுகேளாதோர் மற்றும் இதர மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்குத் தேர்வு எழுதுவதற்கு அனைத்து பாடங்களுக்கும் கூடுதலாக நேரம் வழங்கப்படுகிறது. மேலும், அவர்கள் சொல்வதை எழுதுபவர் நியமனம் / ஏதேனும் ஒரு மொழிப்பாட விலக்களிப்பு / தேவையின் அடிப்படையில் கணிப்பான் பயன்படுத்த அனுமதி போன்ற சலுகைகள் வழங்கப்படுகின்றன. மார்ச் 2019 இல் மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வில் 2,896 சிறப்புக் கவனம் தேவைப்படும் தேர்வர்களுக்கும், மேல்நிலை

இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் 2,697 சிறப்புக்கவனம் தேவைப்படும் தேர்வர்களுக்கும், இடைநிலைப் பள்ளி இறுதி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வில் 4,816 சிறப்புக்கவனம் தேவைப்படும் தேர்வர்களுக்கும் உரிய சலுகைகளுடன் தேர்வெழுத அனுமதிக்கப்பட்டனர்.

## 7.10. சிறையிலேயே தனித்தேர்வு மையம் அமைத்தல்

சிறைவாசிகளும் கல்வியில் ஏற்றம் கண்டிட, சிறை வளாகத்திலேயே தேர்வு மையம் அமைக்கப் பட்டுள்ளது. மார்ச் 2019 இல் புழல் மத்தியச் சிறையில் 11 ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை 78 சிறைவாசிகளும், 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை 45 சிறைவாசிகளும் எழுதியுள்ளனர். 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை 152 சிறைவாசிகள் பாளையங்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் புழல் மத்தியச் சிறைகளில் எழுதியுள்ளனர்.

## 7.11. தேர்வு நடத்தும் முறை

ஒவ்வொரு தேர்வின்போதும் வினாத்தாட்கள் தேர்வு மையங்களுக்கு பிரத்தியேக வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்டு, தேர்வு முடிவுற்றவுடன் அதே வாகனங்களைப் பயன்படுத்தி விடைத்தாள் கட்டுகளை, விடைத்தாள் சேகரிப்பு மையங்களில் சேர்ப்பதற்கு

வழிவகை செய்யப்பட்டு வினாத்தாள் மற்றும் விடைத்தாள் கட்டுகள் அனைத்தையும் எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பான முறை பின்பற்றப்படுகிறது.

தேர்வறையில் ஆள்மாறாட்டத்தைத் தவிர்க்கும் பொருட்டு, தேர்வு எழுதும் அனைத்துத் தேர்வர்களின் புகைப்படம் அடங்கிய முகப்புத்தாளுடன் விடைப் புத்தகம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. முகப்புத்தாளின் மேல்பகுதி பிரித்தெடுக்கும் வசதியுடன் அச்சிடப்பட்டுள்ளதால், தேர்வு முடிந்ததும் இப்பகுதி பிரித்தெடுக்கப்பட்டு, விடைப்புத்தகத்தினை மதிப்பீடு செய்ய விடைத்தாள் மதிப்பீட்டு முகாமிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. விடைத்தாள் மதிப்பீடு மையங்களில் பார்க்கோடு ரீடரைக் கொண்டு விடைத்தாளுக்குரிய மாற்றெண்கள் துல்லியமாக கணினியில், மிக எளிதாக பதிவேற்றம் செய்யப்படும் முறை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. 2018-19 ஆம் ஆண்டில் முகப்புச்சீட்டுகள் அச்சிடும் பணிகளை மேற்கொள்ளும் வகையில், 6 புதிய டிஜிட்டல் அச்சு இயந்திரங்கள் ரூ.2.34 கோடி நிதி ஒதுக்கீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதன் மூலம் விடைத்-தாட்களின் பாதுகாப்பு உறுதி செய்யப் பட்டுள்ளது.

குறிப்பிட்ட மற்றும் சம்பந்தப்பட்டப் பாடங்களுக்கேற்ப முதன்மை விடைப் புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளன. விடைத்தாளுடன் விடையளிக்கப்பட வேண்டிய படிவங்கள், வரைகட்டத்தாள் மற்றும் நிலவரைபடங்கள் இணைக்கப்பட்டு அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

பொதுத்தேர்வுகள் நடைபெறும் காலங்களில், பொதுத்தேர்வுகள் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் நடைபெறுவதினை கண்காணிக்கும் பொருட்டு, அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் தேர்வுக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, இக்கட்டுப்பாட்டு அறை காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செயல்படுகிறது. பொதுமக்கள் மற்றும் தேர்வர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் அடிப்படையில் உடனுக்குடன் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

### 7.12.மேல்நிலைக்கல்வி மொழிப்பாடங்களை ஒரே தாளாக மாற்றுதல்

புது முயற்சியாக, மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைக்கும் வகையில், கற்றல் மதிப்பீட்டில் எவ்வித சமரசமுமின்றி, மேல்நிலைக் கல்வி முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு அரசுப் பொதுத் தேர்வுகளில்

நடைமுறையிலிருந்த மொழிப் பாடங்களிலுள்ள இரண்டு தாட்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரே தாளாக தேர்வெழுதும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

### 7.13. தேர்வு முடிவுகள் வெளியிடுதல்

மாணவர்கள் எவ்வித பதற்றமும் இன்றி தேர்வு முடிவுகளை இணைய வழி வாயிலாகத் தெரிந்து கொள்ளப் பின்வரும் மூன்று இணையதளங்களின் வழியாகவும் www.tn.results.nic.in, www.dge1.tn.nic.in, www.dge2.tn.nic.in, குறுஞ்செய்தி (SMS) வாயிலாகவும் தெரிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மார்ச், 2018 முதல், அட்டவணைப் படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) பள்ளிகளுக்கு அச்சிட்டு வழங்குவதற்குப் பதிலாக, சம்பந்தப்பட்ட பள்ளிகள் இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

மார்ச், 2019-இல் நடைபெற்ற மேல்நிலை மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதிய தேர்வர்களுக்கான மதிப்பெண்களுடன் கூடிய தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட சில நிமிடங்களில்

மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் பதிவின்போது வழங்கப்பட்ட அலைபேசி எண்களுக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்பட்டது. 26,17,113 தேர்வர்கள் இதன் மூலம் பயனடைந்தனர்.

## 7.14. சான்றிதழ்கள் வழங்குதல்

### *7.14.1. தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்*

தேர்வர்கள் www.dge.tn.nic.in என்ற இணைய தளத்தின் வாயிலாக தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக வழங்கப்படும் தற்காலிகச் சான்றிதழ்கள் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்கு மட்டுமே செல்லத்-தக்கவையாகும். மேலும், இச்சான்றிதழ்கள் உயர்கல்வி சேர்க்கைக்கு பயன்படுத்தப்படுகிறது.

### *7.14.2. மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகளுக்கு தனித்தனி மதிப்பெண் சான்றிதழ்கள்*

மார்ச், 2018 ஆம் ஆண்டு முதல், மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகளில் அனைத்துப்பாடங்களிலும் தேர்ச்சி

பெற்றவர்களுக்கு மட்டும், மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகளுக்கு 600 மதிப்பெண்கள் கொண்ட தனித்தனி மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

***7.14.3.பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் ஒரு முயற்சிக்கு மேல் தேர்வெழுதி தேர்ச்சி பெறும் தேர்வர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்***

இதற்குமுன், பொதுத்தேர்வுகளில் தேர்ச்சி பெறும் வரை ஒவ்வொருமுறை தேர்வெழுதும் போதும் தேர்வர்களுக்கு, தனித்தனியாக மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, அவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட மதிப்பெண் சான்றிதழ்களை வைத்திருக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. இத்தகைய தேர்வர்களுக்கு அவர்கள் பயனடையும் வகையில் அவர்கள் தேர்ச்சிபெற்ற முழு விவரங்களுடன் கூடிய ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### *7.14.4. மதிப்பெண் பட்டியலின் சான்றிட்ட நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்*

மதிப்பெண் பட்டியலின் சான்றிட்ட நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்கள் தேர்வர்களின் கோரிக்கையின் பேரில் வழங்கப்பட்டு வருகிறது. அதற்கான விண்ணப்பத்தினை இணையதளம் வாயிலாகப் பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2018-19 ஆம் ஆண்டில் 4,035 சான்றிட்ட மதிப்பெண் நகல்களும், 7,674 மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

### *7.14.5. புலப்பெயர்ச்சிச் சான்றிதழ்*

10 மற்றும் 12 ஆம் வகுப்புக்கான பொதுத் தேர்வுகளில் தேர்ச்சியடைந்து பிற மாநிலங்களில் மேற்படிப்பைத் தொடர விரும்பும் மாணாக்கர்களுக்குப் புலப்பெயர்ச்சிச் சான்றிதழ்கள் விண்ணப்பித்த 5 தினங்களுக்குள் வழங்கப் படுகின்றது. 2018-19 ஆம் ஆண்டில் 7,853 புலப்பெயர்ச்சிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### *7.14.6. மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மையினை சரிபார்த்தல்*

உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் நியமன அதிகாரிகள் மதிப்பெண் சான்றிதழின் உண்மைத் தன்மை குறித்த அறிக்கையினைக் கோரும் பட்சத்தில், உண்மைத் தன்மை சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. 2018-19 ஆம் ஆண்டில் 3,72,947 மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### *7.14.7. மின் ஆவணக் காப்பகம் (Digilocker)*

மின்னணு முறையில் மதிப்பெண் சான்றிதழ்களை வழங்குதல், ஆய்வு செய்தல் மட்டுமல்லாமல், காகித வடிவிலான ஆவணங்களை கையாள்வதை தவிர்ப்பதற்கு மின் ஆவணக்காப்பகம் ஒரு சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வெழுதி, ஆதார் எண்ணைக் குறிப்பிட்டு மின் ஆவண காப்பக கணக்கு வசதியினை பெற்ற மாணவர்கள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் தகவல் களஞ்சியத்திலிருந்து மின்னணு மதிப்பெண் சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 2016 முதல் 2018 வரையிலான தேர்வு பருவத்தில் மேல்நிலை மற்றும் இடைநிலை பொதுத் தேர்வெழுதிய 55,31,863

தேர்வர்களுக்கு மின்னணு மதிப்பெண் சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான மின்னணு கணக்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

## 7.15. மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கான விடைத்-தாட்களை பதிவேற்றம் செய்தல்

மேல்நிலைப் பொதுத்தேர்வுகளில் விடைத் தாட்களின் கணினி பிரதி பெறுவதற்கு, விண்ணப்பித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. அத்தகைய பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பிறகு, மாணவர்களது விடைத்தாட்கள் கணினிப்பிரதி செய்யப்பட்டு, இணையதளம் வாயிலாகப் பதிவேற்றம் செய்யும் முறையும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் தங்களது விடைத்தாள் நகலைப் பதிவிறக்கம் செய்து, திருத்தப்பட்ட விடைத்தாட்களை சரிபார்த்த பின்னர் தேவைப்படின் தங்களின் நியாயமான கோரிக்கைகளை மறுகூட்டல்/ மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பதின் மூலம் முன்வைக்கலாம்.

### 7.16. ஜூன்/ஜூலை மாதங்களில் சிறப்புத் துணைத் தேர்வுகள் நடத்துதல்

மார்ச்/ஏப்ரல் மாதங்களில் நடத்தப்படும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளினால் இடைநிறுத்தம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு தோல்வியுறும் மாணாக்கர்களுக்கு ஒரு முழு கல்வியாண்டு வீணாகாமல், அக்கல்வியாண்டிலேயே அவர்தம் உயர்கல்வியினை தொடர்வதற்கு உதவியாக உடனடி சிறப்புத் துணைத் தேர்வு ஒவ்வொரு ஆண்டும் ஜூன்/ஜூலை மாதத்தில் நடத்தப்படுகிறது.

கல்வியாண்டின் இடையில் கற்பித்தல், கற்றல் பணியில் ஏற்படும் பாதிப்பினைத் தவிர்க்கும் வகையில், அரசுப் பொதுத் தேர்வுகளில் இடைநிலைக் கல்வி, மேல்நிலைக்கல்வி முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு தனித்தேர்வர்களுக்காக நடத்தப் பட்டு வந்த செப்டம்பர்/அக்டோபர் துணைத்தேர்வு இரத்து செய்யப்பட்டு, அத்தகைய தனித்-தேர்வர்களுக்கு ஜூன்/ஜூலை பருவத்திலேயே தேர்வெழுத வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## 7.17. பல்வேறு வகையான பிற தேர்வுகள் நடத்துதல்

### *7.17.1. எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வு*

அரசுத் தேர்வுகள் இயக்ககம், குறைந்தபட்சக் கல்வித் தகுதியினை வழங்குவதற்காகவும், வேலை வாய்ப்புக்காகவும், அடிப்படை நிலையில் பதவி உயர்வுக்காகவும், எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வினை நடத்தி வருகின்றது. ஜனவரி, 2019 இல் நடைபெற்ற இத்தேர்வில் 11,393 தேர்வர்கள் தேர்வெழுதினர்.

### *7.17.2. அரசுத் தொழில் நுட்பத் தேர்வு*

தேர்வர்களுக்கு தொழில்நுட்பக் கல்வித்தகுதியை வழங்குவதற்காகவும், வேலைவாய்ப்புக்காகவும், ஓவியம், தையல், விவசாயம், இசை, அச்சுக்கலை, கைத்தறி, நெசவு மற்றும் பிற பாடப்பிரிவுகளில் அரசுத் தொழில் நுட்பத் தேர்வினை நடத்தி வருகிறது. இத்தேர்வு கீழ்நிலை, மேல்நிலை என இருநிலைகளில் நடத்தப்படுகிறது. 2018 இல் நடைபெற்ற இத்தேர்வில் 11,823 தேர்வர்கள் தேர்வெழுதினர்.

### *7.17.3. தொடக்கக் கல்விப் பட்டயத்தேர்வு*

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வும் நடத்தப்படுகிறது. ஜூன் 2018 இல் நடைபெற்ற இத்தேர்வில் 17,049 தேர்வர்கள் தேர்வெழுதியுள்ளனர். இத்தேர்வர்கள் விடைத்தாள் ஒளிநகல் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டு, விடைத்தாள் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு செய்யவும் அனுமதிக்கப் படுகிறார்கள்.

### *7.17.4. உதவித்தொகைக்கான தேர்வுகள்*

#### *7.17.4.1. தமிழ்நாடு ஊரக மாணாக்கர் திறனாய்வுத் தேர்வு*

ஒவ்வொரு கல்வியாண்டிலும் 9 ஆம் வகுப்பு படிக்கும் ஊரக மாணாக்கர்கள், அவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூபாய் 1,00,000க்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில், தமிழ்நாடு ஊரக மாணாக்கர் திறனாய்வுத் தேர்வினை எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். இத்திறனாய்வுத் தேர்வு ஆண்டுதோறும் செப்டம்பர் திங்களில் ஊரக மாணாக்கர்களை ஊக்குவிக்கும் விதமாக நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவியர் மற்றும் 50 மாணவர்கள் மேற்படி எழுத்துத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு, ஆண்டொன்றுக்கு ரூ.1,000

வீதம் நான்கு ஆண்டுகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2018 இல் நடைபெற்ற இத்தேர்வினை 66,389 மாணாக்கர்கள் எழுதியதில், தேர்ச்சி பெற்ற 3,200 மாணாக்கர்கள் உதவித்தொகை பெறுவதற்கு தகுதி பெற்றனர்.

### *7.17.4.2. தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித்தொகை பெறுவதற்கான தேர்வு*

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 7 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று 8 ஆம் வகுப்பில் பயிலும் மாணாக்கர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.1,50,000க்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில், அவர்கள் தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான தேர்வெழுதலாம். இவ்வுதவித்தொகை 2019-20 ஆம் ஆண்டு முதல் ரூ.6,000லிருந்து ரூ.12,000 என அதிகரிக்கப்பட்டுள்ளது. தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஆண்டு தோறும் ரூ.12,000 (மாதந்தோறும் ரூ.1,000 வீதம்) உதவித்தொகையாக 9 முதல் 12ஆம் வகுப்பு வரை வழங்கப்படும். பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் மாணாக்கர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் ஆண்டு தோறும் 6,695 மாணாக்கர்களுக்கு படிப்பு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2018 ஆம்

ஆண்டில் நடைபெற்ற இத்தேர்வினை 1,44,427 மாணாக்கர்கள் எழுதியுள்ளனர்.

*7.17.4.3. தேசிய அளவிலான திறனறித் தேர்வு (NTSE)*

தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் இத்தேர்விற்கு அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைக்கும் முகமையாகச் செயல்படுகிறது. மத்திய/மாநிலப் பள்ளி வாரியங்களில் 10 ஆம் வகுப்புப் பயிலும் மாணாக்கர்கள் அனைவரும் இத்தேர்வினை எழுத தகுதிபடைத்தவர்கள். முதல்நிலைத் தேர்வுக்கான முடிவுகள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வெளியிடப்பட்டு, பின்னர் தகுதியுள்ள தேர்வர்களுக்கு தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் இரண்டாம் நிலைத்தேர்வுகள் நடத்தப்படுகிறது. 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் நிலை தேர்வினை 1,59,030 மாணாக்கர்கள் எழுதியதில் 466 மாணாக்கர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்தின் மூலம் தேர்ச்சிப் பெறும் 40 தமிழக மாணாக்கர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகின்றது. தெரிவு செய்யப்படும் மாணாக்கர்களுக்கு 11 மற்றும் 12 ஆம் வகுப்பு வரை மாதந்தோறும் ரூ.1,250ம், பட்டப்படிப்பிற்கு மாதந்தோறும்

ரூ.2,000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ஆராய்ச்சிப்படிப்பு மேற்கொள்ளும் மாணாக்கர்களுக்கு பல்கலைக்கழக மானியக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் உதவித்தொகை அதிகபட்சமாக நான்கு ஆண்டு காலத்திற்கு மட்டும் வழங்கப்படுகிறது.

புது முயற்சியாக, கல்வி உதவித்தொகை பெறுவதற்காக நடத்தப்படும் மேற்காண் தேர்வுகளுக்கு தேர்வர்களின் புகைப்படத்துடன் கூடிய ஒளியியல் குறியீடு வாசிப்பான் (OMR) விடைத்தாட்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இதன் மூலம் ஆள்மாறாட்டம் தடுக்கப் படுகிறது.

### 7.18. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்(UPSC) மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் (SSC) தேர்வுகளை நடத்துதல்

ஆண்டுதோறும் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் பல தேர்வுகளை சென்னையில் நடத்திட, அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது.

## 7.19. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினை கணினிமயமாக்குதல்

புது முயற்சியாக, அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் அனைத்து செயல்பாடுகளையும் கணினி மயமாக்குவதற்காக தமிழ்நாடு மின்ஆளுமை நிறுவனத்தின் வாயிலாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவை முடிவுறும் நிலையில் உள்ளன.

## 7.20. நிதி ஒதுக்கீடு

2019-20 ஆம் ஆண்டிற்கு ரூ.127.31 கோடி நிதி அரசால் இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

# 8. பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

## 8.1. முன்னுரை

தமிழகத்தில், 15 வயதுக்கு மேற்பட்ட கல்லாதோர் அனைவருக்கும் அடிப்படைக் கல்வி, தொழில் திறன் மேம்பாட்டுக் கல்வி மற்றும் சமநிலைக் கல்வி வழங்கி, கல்லாமை என்கிற நிலையை அகற்றிட பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் கடந்த 1976 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

கல்லாதோர் அனைவரையும் கற்றோராக்கிடல் வேண்டும் என்கிற குறிக்கோளை நிறைவேற்றிட ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம், மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம், கற்பவருக்கான பள்ளி சாராக் கல்வி, மக்கள் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம், முழு எழுத்தறிவு இயக்கம், தொடர் கல்வித் திட்டம், வளர் கல்வித் திட்டம், கற்கும் பாரதம் திட்டம் மற்றும் சமநிலைக் கல்வித் திட்டம் போன்ற பல்வேறு வயது வந்தோருக்கான திட்டங்கள் இவ்வியக்ககத்தின் வாயிலாகச் செயல்படுத்தப் பட்டுள்ளன.

வயது வந்தோர் கல்வித் திட்டமானது, கற்போருக்கு அடிப்படைக் கல்வி வழங்குவதை மட்டும் நோக்கமாகக்

கொண்டதாக இல்லாமல், அவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குவதன் மூலம், அவர்களை முன்னேற்றமடையச் செய்து முழுமையான வளர்ச்சி பெற்றவர்களாகவும் மாற்றுகிறது.

**8.2. தொலைநோக்கு**

முழு எழுத்தறிவு நிலையை அடைந்திடும் வகையில் அடிப்படை எழுத்தறிவு வழங்குதல், தொழில் திறன் கல்வி வழங்குதல் மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலில் முன்னேற்றத்தை உருவாக்குதல்.

**8.3. நோக்கங்கள்**

- எழுத்தறிவற்றோருக்கும், எண்ணறி வற்றோருக்கும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு வழங்கிடச் செய்தல்.
- புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் அடிப்படைக் கல்விக்கு மேல் கற்றலைத் தொடரவும், பள்ளிகளில் அளிக்கப்படும் முறையான கல்விக்கு இணையான கல்வி பெறவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.
- தொழில் சார்ந்த பயிற்சி அளிப்பதன் மூலம் எழுத்தறிவற்றோர் மற்றும் புதிதாக எழுத்தறிவு

பெற்றோரின் வருவாய்த் திறன் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படச் செய்தல்.

- புதிதாக எழுத்தறிவு பெற்றோருக்கு, வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதன் மூலம் கற்கும் சமுதாயத்தினை வளர்ச்சியுறச் செய்தல்.

### 8.4. கற்கும் பாரதம் திட்டம்

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், பெண்கள் எழுத்தறிவு 50 விழுக்காட்டிற்கும் குறைவாகப் பெற்ற தருமபுரி, சேலம், ஈரோடு, பெரம்பலூர், விழுப்புரம், அரியலூர், திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 9 மாவட்டங்களில் “கற்கும் பாரதம் திட்டம்” 2009 ஆம் ஆண்டு முதல் மார்ச், 2018 வரை சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் வயது வந்தோர் தங்களது அடிப்படைக் கல்வியறிவினை முறையான பள்ளித் திட்டத்திற்கு அப்பால் பெறுவதையே நோக்கமாக கொண்டுள்ளது. 15 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்கள், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்டோர் ஆகியோருக்கு இத்திட்டத்தில் முக்கியத்துவம்

கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது, ரூ.160.90 கோடி மொத்தத் திட்ட மதிப்பீட்டில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் 75:25 என்ற நிதிப் பங்களிப்புடன் 2014-2015 ஆம் நிதியாண்டு வரையும், 2015-2016 ஆம் நிதியாண்டு முதல் திட்ட முடிவு காலம் வரை 60:40 என்ற நிதிப்-பங்களிப்புடனும் செயல்படுத்தப்பட்டது.

கற்கும் பாரதம் செயல்படுத்தப்பட்ட 9 மாவட்டங்களில், 3,602 வயது வந்தோர் கல்வி மையங்கள் கிராமப் பஞ்சாயத்து அளவில் அமைக்கப்பட்டன. இம்மையங்களில் வயது வந்தோருக்கு அடிப்படைக் கல்வி மற்றும் சமநிலைக் கல்வி ஆகியவை அளிக்கப்பட்டன. 50 மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்களுக்கு கல்விசார் தகவல் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் இதர பொருள்களை வழங்கியதன் மூலம் கற்போரின் கல்வி கற்கும் திறனை அடுத்த நிலைக்கு உயர்த்திடும் வகையில் அவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். மேலும், இம்மையங்களில் கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வியோடு, அவர்கள் வருமானம் ஈட்டும் வகையில், செயற்கை ஆபரணம், பினாயில், சோப்பு எண்ணெய் மற்றும் பவுடர், மெழுகு, வாசனைப் பொருள்கள், பொம்மைகள் தயாரித்தல், சம்கி வேலைபாடு பயிற்சி, எம்ராய்டரி மற்றும்





அடிப்படை எழுத்தறிவு வகுப்பு

தொழிற்திறன் பயிற்சி



மாதிரி வயது வந்தோர் கல்வி மையம்

தையல் பயிற்சி ஆகிய தொழிற்திறன் சார்ந்த பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

கற்போருக்கான அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வுகளை, தேசிய திறந்த நிலைப் பள்ளி நிறுவனத்தின் ஒருங்கிணைப்போடு நடத்தி, கற்போருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

**அடிப்படை எழுத்தறிவில் முன்னேற்றம்**

| வருடம் | அடிப்படை எழுத்தறிவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றோர் எண்ணிக்கை | அடிப்படை எழுத்தறிவில் முன்னேற்றம் |
|---|---|---|
| 2010-11 | 2,67,555 | 10.89 |
| 2011-12 | 15,12,607 | 61.55 |
| 2012-13 | 17,26,088 | 70.23 |
| 2013-14 | 17,93,393 | 72.97 |
| 2014-15 | 21,36,756 | 86.94 |
| 2015-16 | 22,72,387 | 92.46 |
| 2016-17 | 23,88,596 | 97.19 |
| 2017-18 | 25,39,688 | 103.33 |

2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி, இத்திட்டத்தின் கல்லாதோர் இலக்கு 24.57 இலட்சம் ஆகும். 25.39 இலட்சம் பேர் தங்களின் அடிப்படை எழுத்தறிவை இத்திட்டத்தின் மூலம் பெற்றுள்ளனர்.

**8.5.விருதுகள்**

வயது வந்தோர் கல்வித் திட்டத்தினை மிகச் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக கிராம பஞ்சாயத்து, மாவட்டம் மற்றும் மாநிலம் ஆகிய நிலைகளில் தேசிய எழுத்தறிவு

விருதுகளை கடந்த 2013, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் தமிழகம் பெற்றுள்ளது.

## 8.6. நிதி ஒதுக்கீடு

2019-20 ஆம் ஆண்டிற்கு ரூ.7.97 கோடி நிதி அரசால் இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. பொது நூலகங்கள்

### 9.1. முன்னுரை

பொது நூலகங்கள் அறிவுசார் தகவல்களை அனைவருக்கும் இலவசமாகவும், சமமாகவும் உயிரோட்டத்துடனும், தனித்துவத்துடனும் வழங்கிடும் அறிவுக் களஞ்சியமாகச் செயல்படும் ஓர் அமைப்பாகும். உலகெங்கிலும் நடைபெறும் வேகமான மாற்றங்களை மக்களிடம் கொண்டு செல்லும் பணியில் பொதுநூலகங்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. வாசிக்கும் பழக்கத்தையும் மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்பதையும் ஊக்குவிப்பதில் நூலகங்கள் சிறந்து விளங்குகின்றன.

### 9.2. தொலைநோக்கு

கலாச்சார மற்றும் அறிவுசார் தகவல் வளங்களை சமுதாயத்திற்கு இலவசமாக மற்றும் சமமாக வழங்குவதன் மூலம் அதனை அதிகாரமிக்க மற்றும் பலம் வாய்ந்த சமூகமாகத் திகழச் செய்தல்.

### 9.3. நோக்கங்கள்

- தரமான தகவல்களைச் சரியான நேரத்தில், வசதியான முறையில் மக்களுக்கு வழங்குதல்.

- தற்போதைய தொழில் நுட்பத்துடன் கூடிய வலிமையான மற்றும் பொருத்தமான வளங்களை உருவாக்கி, நூலகங்களை மேம்படுத்துதல்.
- புதுமையான சேவைகளுடன் மக்களை ஒருங்கிணைத்தல்.
- நமது கலாச்சாரப் பொருட்கள் மற்றும் ஆவணங்களை மின்னணு வடிவில் பாதுகாத்தல்.
- அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தும் வகையில் நூலகங்களைத் திகழச் செய்தல்.

**9.4. தமிழ்நாட்டில் உள்ள நூலகங்கள்**

வாசிக்கும் பழக்கத்தை வழக்கமாக்கி, ஆராய்ச்சிப் பணிகளை எளிமையாக்கி, மக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கி, சமுதாயத்திலுள்ள அனைத்து வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கேற்ப தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948 இன்படி தமிழகத்தில் இதுவரை 4,634 நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் செயல்படும் நூலகங்களின் விவரம்

| பொது நூலகங்களின் பெயர்/ வகை | எண்ணிக்கை |
|---|---|
| கன்னிமாரா பொது நூலகம் (மாநில மைய நூலகம்) | 1 |
| அண்ணா நூற்றாண்டு நூலகம் | 1 |
| மாவட்ட மைய நூலகங்கள் | 32 |

| | |
|---|---|
| கிளை நூலகங்கள் | 1926 |
| நடமாடும் நூலகங்கள் | 14 |
| ஊர்ப்புற நூலகங்கள் | 1915 |
| பகுதிநேர நூலகங்கள் | 745 |
| மொத்தம் | 4634 |

### *9.4.1.கன்னிமாரா பொது நூலகம்*

கன்னிமாரா பிரபு அவர்களுக்கு புகழாரம் செலுத்தும் விதமாக, அன்னாரது விருப்பத்தினை நிறைவேற்றும் வகையில் உருவாக்கப்பட்ட, தமிழ்நாட்டின் பெருமையாகக் கருதப்படும் "கன்னிமாரா பொது நூலகம்" 05.12.1896 அன்று பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்தியாவின் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றான கன்னிமாரா பொது நூலகம், இந்தியாவில் வெளியாகும் அனைத்து நூல்கள், செய்தித் தாள்கள் மற்றும் பருவ இதழ்களின் ஒரு பிரதியினைப் பெற்று வருகிறது. இந்நூலகம், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் வெளியீடுகள் மற்றும் பதிப்புகளின் வைப்பு நூலகமாகவும் செயலாற்றி வருகிறது.

பருவ இதழ் பிரிவு, மொழியியல் பிரிவு, பாடநூல்கள் பிரிவு, குடிமைப்பணி கல்வி வட்டம் மற்றும் அரிய நூல்கள் பிரிவு என பல்வேறு பிரிவுகளுடன் செயல்படும் இந்நூலகமானது, இணைய இதழ்கள் மற்றும் மின்

புத்தகங்களின் தனித்துவமான சேகரிப்புகளுடன் கூடிய இலக்கமுறை சேவையினை முழுநேரமும் பயனாளிகளுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

### *9.4.2.அண்ணா நூற்றாண்டு நூலகம்*

அண்ணா நூற்றாண்டு நூலகம் மிகுந்த கலைநயத்துடன், ஆற்றல் திறன் கொண்ட பசுமைக் கட்டட அமைப்புடன் 3.75 இலட்சம் சதுர அடியில் ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாக சென்னையில் உருவாக்கப் பட்டுள்ளது. தற்போது, இந்நூலகத்தில் பரந்த அளவிலான பொருண்மைகளை உள்ளடக்கிய 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன.

இந்நூலகத்திலுள்ள நூல்களின் தொகுப்பு முழுவதையும் இணைய வழியாக எந்த இடத்திலிருந்தும் எளிமையாகவும், விரைவாகவும் அணுகத் தக்க ஒருங்கிணைந்த நூலக மேலாண்மை அமைப்பு (WEB-OPAC) இந்நூலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நூல்களுக்கு RFID குறியிடுதல் முறையில் தானியங்கி செயல்பாட்டின் மூலம் நூல்கள் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது. இந்நூலகத்தில் தனித்துவம் பெற்று

விளங்கும் பார்வையற்றோருக்கான பிரிவில் 2,100 க்கும் மேற்பட்ட பதிவுபெற்ற உறுப்பினர்கள் மற்றும் 1,050 க்கும் மேற்பட்ட இணையதள உறுப்பினர்கள் (brailleacl.googlegroups.com) உள்ளனர். இப்பிரிவில் 3,100 க்கும் மேற்பட்ட பிரெய்லி நூல்கள், ஒலித்தொகுப்பின் குறுந்தகடுகள், DVD மற்றும் 1.1 TB வரையான இலக்கமுறைப் பொருட்கள் உள்ளன.

15,000 சதுர அடியில் பரந்து விரிந்து, 1.60 இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள், பலதரப்பட்ட ஊடக உபகரணங்கள், செயற்கை முறையில் அமைக்கப்பட்ட மரம், ஒரு உட்கரு கொண்ட மனமகிழ் நிறைந்த வாசிப்புப் பகுதி, 4 முதல் 14 வயதுடைய குழந்தைகள் தங்கள் செயல்திறனை வெளிப்படுத்தும் மேடை ஆகியவற்றைக் கொண்ட ஒரு இடமாக குழந்தைகள் பிரிவு திகழ்கிறது. கதை சொல்லுதல், வினாடி-வினா, அறிவியல் ஆய்வுகள், பொம்மலாட்டம், சதுரங்க வகுப்புகள் போன்ற குழந்தைகளுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நடத்தப்பட்டு வருகிறது.



குழந்தைகள் பிரிவு - அண்ணா நூற்றாண்டு நூலகம்

கிழக்கத்திய சுவடிகள் நூலகப் பிரிவில், விலை மதிப்பற்ற 50,180 பனை ஓலைச் சுவடிகள் மற்றும் 22,134 காகிதச் சுவடிகள் உள்ளன. இந்நூலகம் தமிழ், சமஸ்கிருதம் மற்றும் பிற தொன்மையான இந்தியக் கலாச்சாரம் சார்ந்த துறைகளில் முனைவர் மற்றும் ஆய்வுநிலை நிறைஞர் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கான ஆராய்ச்சி மையமாக சென்னைப் பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியம், திரைப்படம், ஊடகம், மருத்துவம் என பல்வேறு களங்களில் உயர்ந்து, புகழ் பெற்று விளங்கும் பிரமுகர்களுடன் நடைபெறும் உரையாடல்கள் மூலம் பார்வையாளர்களின் ஆர்வம் மற்றும் புதுமை உணர்வுகள் தூண்டப்படும் வகையில் கற்பனை வளத்தை பெருக்குவதற்கும் மற்றும் வாசகர்களுடனான

தொடர்புகளை ஏற்படுத்தவும் உதவும் "பொன்மாலைப் பொழுது" என்ற இலக்கிய நிகழ்ச்சி ஒவ்வொரு சனிக் கிழமையும் மாலை 6.00 மணிக்கு அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சி அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் அதிகாரப்பூர்வ வலைதளமான www.youtube.com/aclchennai வழியாக ஒளிபரப்பப் படுகிறது. தேசிய மாநாடுகள், கருத்தரங்கங்கள், சிறப்பு விரிவுரைகள், பயிற்சி பணிமனைகள் ஆகியவற்றின் மூலம் நூலகம் மற்றும் தகவல் அறிவியல் வல்லுநர்களுக்கான தொழில்சார் அறிவு மற்றும் திறன்களை வழங்குவதில் அண்ணா நூற்றாண்டு நூலகம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. இந்நூலகத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கான நோக்குநிலை திட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அண்ணா நூற்றாண்டு நூலகப் பராமரிப்புப் பணிகளுக்காக 2018-19 ஆம் நிதியாண்டில் ரூ.725.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### *9.4.3. தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்*

இந்தியாவின் பழமை வாய்ந்த நூலகங்களில் ஒன்றாகத் திகழும் தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம் 1535 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, மகாராஜா சரபோஜி (1798 முதல் 1832 வரை) காலத்தில் தனது புகழின் உச்சத்தை அடைந்தது. 1918 ஆம் ஆண்டு முதல் இந்நூலகம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

உலகின் புகழ் பெற்ற அறிவுக் களஞ்சியமான இந்நூலகத்தில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராட்டியம் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட சுமார் 47,334 கையெழுத்துப் பிரதிகள், 24,165 பனை ஓலைச் சுவடிகள் மற்றும் 23,169 காகித வடிவங்கள், 45,000 நூல்கள், வரைபடங்கள் மற்றும் இலக்கியம், கலை, பண்பாடு சார்ந்த ஓவியங்கள் உள்ளன. இந்நூலக வளர்ச்சி மற்றும் பணியாளர்களின் நலனுக்காக 2018-19 ஆம் ஆண்டில் பராமரிப்பு மானியமாக ரூ.142.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 9.4.4. டாக்டர்.உ.வே.சாமிநாத அய்யர் நூலகம், சென்னை

தமிழறிஞரும், நூல் ஆராய்ச்சியாளருமான டாக்டர்.உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் நினைவாக அவரது புதல்வர் திரு.சா.கலியாணசுந்தரம் மற்றும் திருமதி.ருக்மணி தேவி அருண்டேல் ஆகியவர்களின் பெரும் முயற்சியால் 05.07.1943 அன்று டாக்டர்.உ.வே.சாமிநாத அய்யர் நூலகம் நிறுவப்பட்டது. இந்நூலகத்தில் குறிப்பிடத்தக்க சேகரிப்புகளாக 2,200 அரிய தமிழ் நூல்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை உள்ளன. மேலும், தமிழறிஞர்கள் பலர் டாக்டர்.உ.வே.சாமிநாத அய்யர் அவர்களுக்கு எழுதிய 3,421 கடிதங்கள், தனிப்பாடல்கள் மற்றும் 1883 முதல் 1939 ஆண்டு முடிய டாக்டர்.உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் எழுதிய நாட்குறிப்புகள் மற்றும் பயன்படுத்திய பொருட்கள் உள்ளன. இந்நூலகத்தில் 37,355 புத்தகங்கள், 855 கையெழுத்துப் பிரதிகள் மற்றும் டாக்டர்.உ.வே.சாமிநாத அய்யர் அவர்களால் சேகரிக்கப்பட்ட 2,170 பனை ஓலைச் சுவடிக் கட்டுகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பழமையான, அரிய, அச்சிடப்பட்ட 1,504 புத்தகங்கள், 344 பருவ இதழ்கள் மற்றும் 500 பனை ஓலைச்சுவடிகள்

எண்முறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலகத்தின் வளர்ச்சி, பராமரிப்பு மற்றும் பணியாளர்களின் நலனுக்காக 2018-19 ஆம் நிதியாண்டில் ரூ.19.86 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### *9.4.5. மறைமலை அடிகள் நூலகம்*

புத்தகங்கள் மீது தீராத பற்று கொண்ட மறைமலை அடிகள் அவர்களின் பெயரிடப்பட்டு 1958 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ வி.சுப்பையா பிள்ளை என்பவரால் சென்னை லிங்கித் தெருவில் மறைமலை அடிகள் நூலகம் தொடங்கப்பட்டது. தற்போது கன்னிமாரா பொது நூலக வளாகத்தில் செயல்பட்டு வரும் இந்நூலகமானது தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக நிர்வாகத்தின் கீழ் உள்ளது. இந்நூலகத்தில் உள்ள 80,000 புத்தகங்களில் 1,400 புத்தகங்கள் பழமை வாய்ந்த அரிய நூல்களாகும். இந்நூலகத்தை 3,528 உறுப்பினர்கள் மற்றும் ஏறத்தாழ 1,500 ஆராய்ச்சி அறிஞர்கள் பயன்படுத்தி வருகின்றனர். ஒவ்வோராண்டும் பராமரிப்பு மானியமாக ரூ.1.00 இலட்சம் அரசால் வழங்கப்படுகிறது.

### *9.4.6. மாவட்ட மைய நூலகங்கள்*

தரம் வாய்ந்த தகவல், அறிவாற்றல் மற்றும் கல்வித் தொகுப்புகளை ஏழ்மையான மற்றும் பின்தங்கிய மக்கள் அனைவரும் பெறும் வகையில் தமிழ்நாடு பொது நூலக விதிகள், 1950 இன்படி, மாவட்டத்திற்கு ஒரு நூலகம் வீதம் 32 மாவட்ட மைய நூலகங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதுவரை 11,18,160 உறுப்பினர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். 2018-19 ஆம் ஆண்டில் 47,75,963 வாசகர்கள் இந்நூலகத்தைப் பயன்படுத்தி உள்ளனர். பருவ இதழ்கள், குறிப்பு நூல்கள், குடிமைப்பணி உட்பட போட்டித் தேர்வுகள், பெண்கள், குழந்தைகளுக்கான சிறப்பு பிரிவுகள், சொந்த நூல்கள் வாசிப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான பிரிவுகளுடன் இணையதள வசதியினையும் கொண்ட இந்நூலகங்களில் பல்வேறு துறைகள் சார்ந்த 55,30,267 நூல்கள் மற்றும் பருவ இதழ்களின் பரந்த தொகுப்புகள் உள்ளன.

மாவட்ட மைய நூலகங்கள் யாவும் கணினி-மயமாக்கப்பட்டுள்ளன. துறைசார் வல்லுநர்கள் மற்றும் சிறந்த நிபுணர்களைக் கொண்டு மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (UPSC), மத்திய பணியாளர் தேர்வாணையம் (SSC), தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC),

வங்கிப் பணிகள் பணியாளர் தேர்வாணையம் (BSRB), இரயில்வே பணியாளர் தேர்வாணையம் (RRB) போன்ற பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான சிறப்பு வகுப்புகள் போட்டித் தேர்விற்குத் தயாராகும் இளைஞர்களின் நலனுக்காக நடத்தப்பட்டு வருகிறது.

### *9.4.7. கிளை நூலகங்கள்*

பெருகி வரும் பரவலான மக்கள் தொகைக்கேற்ப 5,000 முதல் 50,000 வரை மக்கள் தொகை கொண்ட நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் கிளை நூலகங்கள் அமைக்கப் பட்டுள்ளன. தற்போது, 1,926 கிளை நூலகங்கள் நல்ல நூல் வளம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் 58,14,262 உறுப்பினர்களுக்குச் சேவையாற்றி வருகின்றன. 2018-19 ஆம் ஆண்டில் 4,58,47,746 வாசகர்கள் இந்நூலக வசதிகள் மூலம் பயன் பெற்றுள்ளனர். "வகுப்பறை நூலகம்" என்ற திட்டத்தின் மூலம் 3,593 பள்ளிகளைச் சேர்ந்த 17,10,210 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

### *9.4.8. ஊர்ப்புற நூலகங்கள்*

கிராமப்புற மக்கள் நூலகச் சேவைகளை பெறுவதற்கு, அவர்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 1,915 ஊர்ப்புற நூலகங்கள்

அமைக்கப்பட்டுள்ளன. ஊர்ப்புற நூலகங்கள் சமுதாயத்திற்கு பெரும் பயனளிக்கும் வகையில் பொது மற்றும் சமூக நலன் கொண்ட மக்கள் நேரடியாகக் கூடும் இடமாகத் திகழுகின்றன. இந்நூலகங்களில் உள்ள 1,81,18,625 உயரிய நூல் தொகுப்புகளின் மூலம் 18,84,590 உறுப்பினர்கள் மற்றும் 2018-19 ஆம் ஆண்டில் 2,21,40,237 வாசகர்கள் பயன்பெற்றுள்ளனர்.

***9.4.9. நடமாடும் நூலகங்கள்***

மலைப்பாங்கான குறிப்பாக, எளிதாகச் செல்ல இயலாத தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களைக் கொண்டு சேர்க்கும் பணியை நடமாடும் நூலகங்கள் 14 மாவட்டங்களில் செயல்படுத்தி வருகின்றன. கிராமப்புற பள்ளி மாணவர்களிடையே வாசிப்புப்பழக்கத்தினை ஊக்குவிக்கும் வகையில் உரிய கால இடைவெளிகளில் பள்ளிகளுக்குச் சென்று, இந்நூலகங்கள் மாணவச் சமூகத்திற்கும் சேவையாற்றி வருகின்றன. இதுவரையில் நடமாடும் நூலகங்கள் மூலம் 26,019 உறுப்பினர்கள் மற்றும் 1,60,925 வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.




நடமாடும் நூலகம்

### *9.4.10. பகுதிநேர நூலகங்கள்*

கடைக்கோடியில் உள்ள மக்களையும் சென்றடையும் நோக்கில், தமிழ்நாடு பொது நூலக விதிகள், 1950 இன்படி பகுதி நேர நூலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது செயல்பட்டுவரும் 745 பகுதிநேர நூலகங்கள் வாயிலாக 3,08,524 உறுப்பினர்கள் மற்றும் 2018-19 ஆம் ஆண்டில் 39,93,029 வாசகர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 9.5. மாநில ஆதார வளமையத்தில் சிறப்பு நூலகம்

சென்னையில் அமைந்துள்ள உள்ளடக்கிய கல்விக்கான மாநில ஆதார வளமையத்தில் சிறப்பு நூலகமொன்று ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில், சிறப்புக்

கவனம் தேவைப்படும் குழந்தைகளின் திறனை ஆராய்ந்து, அவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தில், தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், உரிய துணைத் தொழில்நுட்பங்களுடன் கூடிய ஆதார வளங்களை உள்ளடக்கியதாய் அமைக்கப்பட்டுள்ளது.



மாநில ஆதார வளமையம் - சென்னை

பல்வேறு குறைபாடுகள், சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகள் குறித்த தகவல்களை வழங்குவதற்கு இம்மையத்தில் தனிப்பிரிவு உள்ளது.

## 9.6. நிதி ஆதாரம்

### *9.6.1. நூலக வரி*

பொது நூலகங்களின் செயல்பாடுகளுக்குரிய முக்கிய வருவாயான நூலக வரியானது, சொத்து வரியிலிருந்து

பெறப்படுகிறது. நூல்கள் மற்றும் பிற பொருட்கள் கொள்முதல் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், புதிய கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல், பழமையான, அரிய நூல்களை எண்முறையாக்கம் செய்தல் மற்றும் இதர வளர்ச்சிப் பணிகளுக்கு இந்நூலக வரி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

2018-19 ஆம் ஆண்டில் நூலக வரியாக ரூ.116.68 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

### *9.6.2. இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை மானியம்*

இந்தியாவில் உள்ள பொது நூலகச் சேவையினை ஒருங்கிணைத்து, கண்காணித்து, மேம்படுத்திட இந்திய அரசால் கொல்கத்தாவில் இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. 2018-19 ஆம் ஆண்டில் 50:50 என்ற விகிதத்தில் ரூ.200.00 இலட்சத்தை இணை மானியமாக இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

### 9.7. பொது நூலகங்களின் உட்கட்டமைப்பு

1,780 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 2,522 நூலகங்கள் வாடகையில்லா கட்டடங்களிலும் மற்றும் 318 நூலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு

வருகின்றன. 2018-19 ஆம் ஆண்டில், ஒரு கிளை நூலகம் மற்றும் 2 ஊர்ப்புற நூலகங்களுக்கு புதிய கட்டடங்கள், 2 கிளை நூலகங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் மற்றும் விருதுநகர் மாவட்ட நூலக அலுவலர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் போன்றவை மொத்தம் ரூ.257.65 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

### 9.8. நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்குதல்

மக்களின் தேவைகளையும் வாசகர்களின் மாறிவரும் விருப்பங்களையும் கருத்தில் கொண்டு அறிவியல், சமூக, வரலாறு, இலக்கியம், கலாச்சாரம் மற்றும் அறிவு சார்ந்த வாசகர்களின் தேடல்களுக்கு முக்கியத்துவமளித்து, திறன்வாய்ந்த தேர்வுக் குழுவின் மூலம் நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் தேர்வு செய்யப்படுகின்றன. பொதுவாக ஓராண்டில் வசூலிக்கப்படும் நூலக வரி வசூலில் 25 விழுக்காடு நூல்களுக்கும் மற்றும் 6.5 விழுக்காடு பருவ இதழ்கள் வாங்குவதற்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

### 9.9. கணினிமயமாக்கம்

ஒரு நூலகம் என்பது குறைந்த செலவில் ஒரு வளமான தகவல் ஆதாரமாய் உள்ளதால், நூலகத்தின் சேவைகளை நவீனமயமாக்குவது அத்தியாவசியமாகிறது.

தானியக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மக்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பொது நூலகங்களைக் கணினிமயமாக்க முன்னுரிமை அளிக்கப் பட்டுள்ளதன் தொடர்ச்சியாக, சேவைகளின் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது, தகவல் தேடல் பணிகள் எளிமையாக்கப்பட்டுள்ளன. கணினிமயமாக்கப்பட்ட நூலக மேலாண்மை அறிமுகம், நூல் சார்ந்த பொருட்களை கணினி அடிப்படையில் மீட்டல், கணினி வலைதளம், ஆவணங்களை கணினி உதவியுடன் மறு ஆய்வு செய்தல், மின்னஞ்சல் பரிமாற்றம் மற்றும் மின் வளங்கள் போன்ற சேவைகள் வாசகர்கள் மற்றும் நூலகர்களிடையே மனதளவில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 2018-19 இல் ரூ.27.47 இலட்சம் மதிப்பில் 2,316 மின் நூல்கள், ரூ.3.01 இலட்சம் சந்தா மதிப்பில் 268 மின் இதழ்கள், ரூ.44.32 இலட்சம் மதிப்பில் 49 மின் பருவ இதழ்கள் வாங்கப்பட்டுள்ளன. மின் நூல்கள் மற்றும் மின் பருவ இதழ்களைப் பயன்படுத்த 32 மாவட்ட மைய நூலகங்களில் கற்றல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இணைய வசதியுடன் கூடிய கணினிகள் 314 முழுநேர கிளை நூலகங்களில் அமைக்கப் பெற்றுள்ளன.

### 9.10. குடிமைப்பணி கல்வி மையங்கள்

பொது நூலகங்களை குடிமக்கள்-மைய நிறுவனங்களாக மாற்றம் செய்திடும் வகையில் குடிமைப்பணி கல்வி மையங்கள் பொது நூலகங்களில் அமைக்கப் பட்டுள்ளன. ஆர்வமுள்ள இளைஞர்களுக்குத் தேவையான நூல்களையும், பிற குழுக்களுடன் இணைந்து ஈடுபடுவதற்கான வாய்ப்பையும் இக்கல்வி மையங்களில் பெறலாம். 32 மாவட்ட மையநூலகங்கள் உள்ளிட்ட 289 நூலகங்களில் குடிமைப்பணி கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரசு மற்றும் அரசுத் துறைகள் சார்ந்த பணிகளுக்கான போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் இளைஞர்கள், அதற்கான விண்ணப்பங்களை கணினி வழியில் பதிவு செய்யும் வசதி, கன்னிமாரா பொது நூலகம் மற்றும் மாவட்ட மைய நூலகங்களில் கட்டணமின்றி வழங்கப்படுகிறது. 32 மாவட்ட மைய நூலகங்களில் தற்போதுள்ள வசதிகள் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

### 9.11. வாசகர் வட்டம்

சமூக கலாச்சார மற்றும் கலை வளர்ச்சியில் கவனத்தை ஈர்க்கும் வகையில், இலக்கிய சொற்பொழிவு,

இலக்கிய விவாதங்கள், கட்டுரை, மேடைப் பேச்சு மற்றும் வினாடி வினா ஆகிய நிகழ்ச்சிகளின் மூலம் அடித்தள மக்களைச் சென்றடைய சிறந்த வலையமைப்பாக நூலகங்களில் வாசகர் வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அறிவுத் தேடலில் மிகுந்த ஆர்வமுள்ள நண்பர்கள் மற்றும் சக மனிதர்களை கண்டறியும் சிறந்த தளமாக வாசகர் வட்டங்கள் உள்ளன.

நூலகங்களுக்கும், சமுதாயத்திற்கும் உள்ள இடைவெளியை நிரப்ப வாசகர் வட்டம் மற்றும் ஏனைய பயனாளிகளின் உறுதுணையுடன் புதுமையான சேவைகள் அளிக்கப்படுகின்றன.

### 9.12. உறுப்பினர்கள் / வாசகர்கள் / புரவலர்கள்

பொது மக்களிடையே கல்வியறிவு மற்றும் வாசிப்பு ஆர்வத்தை ஊக்குவித்து, அவர்களை அன்றாட நூலக வாசகர்களாக உருவாக்கி பல்வேறு துறைகளின் தகவல் மற்றும் அறிவை பெறுவதற்கும், மேம்படுத்துவதற்குமான சிறப்பு முனைவு ஏற்பாடு செய்யப்பட்டதன் விளைவாக, 92,95,147 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளதோடு 7,79,31,305 வாசகர்களும் பயனடைந்துள்ளனர். நூலகத்திற்கு ரூ.1,000 வழங்குவதன் மூலம் ஒருவர் நூலகத்தின் புரவலராகவும், ரூ.5,000 செலுத்துவதன்

வாயிலாக பெரும் புரவலராகவும் மற்றும் ரூ.10,000 வழங்குவதன் மூலம் கொடையாளராகவும் திகழ்கிறார்கள். இதுவரை 1,28,138 புரவலர்கள், 1,147 பெரும் புரவலர்கள் மற்றும் 377 கொடையாளர்கள் நூலகங்களில் சேர்ந்து ரூ.71.89 இலட்சம் பங்களித்துள்ளனர். நிலையான வைப்பாக உள்ள இந்நிதியிலிருந்து ஆண்டுதோறும் பெறப்படும் வட்டித் தொகை நூலகங்களை வலுப்படுத்த பயன்படுகிறது.



கதை சொல்லுதல் நிகழ்ச்சி – திருச்சிராப்பள்ளி

## 9.13. நூலக நிகழ்ச்சிகள்

### *9.13.1. நூலகர்கள் தினம்*

தனது அடிப்படைச் சிந்தனையின் மூலம் நூலகவியலில் புகழ்பெற்ற ஐந்து விதிகளை வகுத்த நூலகவியலின் தந்தை முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன்

அவர்களுக்கு புகழுஞ்சலி செலுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அன்னாரின் பிறந்த்தினமான ஆகஸ்டு திங்கள் 12 ஆம் நாள் இந்தியாவில் தேசிய நூலகர்கள் தினமாக கொண்டாடப்படுகிறது. இதன் மூலம் தொடர்ச்சியாக உருவாகி வரும் பணிகளை நூலகர்கள் நன்கு உணர்ந்து கொண்டு, வாசகர்களின் பன்முகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருகின்றனர்.

### *9.13.2. நூலக தினம்*

நூலக வளங்களின் பயன்பாட்டினை அதிகரித்து, சமூகத்தில் நூலகத்தின் முக்கியத்துவத்தை நிலைநாட்ட, ஆண்டுதோறும் மே திங்கள் 22 ஆம் நாள் "நூலக தினம்" கொண்டாடப்படுகிறது. இதன் மூலம் வசகர்களிடையே வலுவான சமுதாய ஈடுபாட்டை உருவாக்க இயலுகிறது.

### *9.13.3. தேசிய நூலக வார விழா*

மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தி, பொது நூலகங்களின் வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பு நல்கிய நூலகர்கள் மற்றும் ஆர்வலர்களை கௌரவிக்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 முதல் 20 முடிய தேசிய நூலக வார விழா கொண்டாடப்படுகிறது.

### *9.13.4. உலகப் புத்தக தினம்*

உலகின் சிறந்த ஆங்கில எழுத்தாளர் அ. வில்லியம் ஷேக்ஸ்பியர் அவர்களின் புகழ்பெற்ற சேவைகளை அங்கீகரித்து, அவரது பிறந்த நாளான ஏப்ரல் 23 ஆம் நாளினை யுனெஸ்கோ உலகப் புத்தக தினம் அல்லது காப்புறுதி தினமாக அறிவித்துள்ளதற்கு இணங்க அன்றைய தினம் புத்தக தினமாக தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆர்வத்துடன் கொண்டாடப்படுகிறது.

### *9.13.5. புத்தகக் கண்காட்சி மற்றும் விழா*

ஆண்டுதோறும் நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சியான புத்தகக் கண்காட்சி விழாவானது சிறந்த படைப்பாளிகளையும், அதன் வாசகர்களையும் ஒரே மேடையில் இணைக்கிறது. அனுபவமிக்க வாசகர்களின் அளப்பரிய ஆர்வத்தைக் கருத்திற் கொண்டு கன்னிமாரா பொது நூலகத்தில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. புத்தக விற்பனையாளர்கள் மற்றும் நூல் வெளியீட்டாளர்கள் ஒருங்கிணைப்புடன் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

## 9.14. சிறப்பு விருதுகள்

### *9.14.1. முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது*

சிறந்த செயல்திறனைக் கொண்ட நூலகர்களை கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதானது ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் ரூ.5,000 பரிசுத் தொகையை உள்ளடக்கியதாகும். அர்ப்பணிப்புடன் பணியாற்றிய 33 நூலகர்களுக்கு 14.11.2018 அன்று இவ்விருது வழங்கப்பட்டது.

### *9.14.2. சிறந்த நூலகங்களுக்கான கேடயம்*

நூலகங்களை நன்முறையில் பாரமரிப்பதற்காக நூலகர்களை ஊக்குவித்து, உற்சாகப்படுத்த 2012-13 ஆம் ஆண்டு முதல் நூலகங்களுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டு வருகிறது. சிறப்பு முனைப்புடன் உறுப்பினர்கள் மற்றும் புரவலர்கள் சேர்க்கையினை அதிகரித்தல், நன்கொடைகள் பெறுதல் மற்றும் பிற மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நூலகங்களுக்கு, மாநில அளவிலான செயல்திறன் அடிப்படையில் இவ்விருது வழங்கப்படுகிறது.

### *9.14.3. நூலக ஆர்வலர் விருது*

இதுவரை சிறந்த 3 வாசகர் வட்டத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த ரூ.5,000 மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழைக் கொண்ட நூலக ஆர்வலர் விருதானது, 2018-19 ஆம் ஆண்டில் 32 மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

## 9.15. 2018-19 ஆம் ஆண்டில் புதிய முயற்சிகள்

### *9.15.1. சாதனைகள்*

- அரிய வகை நூல்கள், ஆவணங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளை பொது மற்றும் தனியார் அமைப்புகளிடமிருந்து பெற்று பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் வாயிலாக, அரியலூர், திண்டுக்கல், ஈரோடு, கரூர், தேனி, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலிருந்து 110 அரிய நூல்களும் மற்றும் கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களிலிருந்து 13 கையெழுத்துப் பிரதிகளும் சேகரிக்கப்பட்டுள்ளன.

- மாநிலம் முழுவதும் உள்ள பொது நூலகங்கள் பயன்பாட்டிற்கு ரூ.25.00 கோடி மதிப்பில் புத்தகங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.
- தனியார் அமைப்புகளால் நடத்தப்படும் நூலகங்களிலுள்ள அரிய நூல்கள் மற்றும் ஆவணங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள "பன்னாட்டு தமிழ் இதழ்கள் ஆய்வு நூலகம்", விருதுநகர் மாவட்டத்தில் உள்ள "பென்னிங்டன் பொது நூலகம்" மற்றும் "காந்தி கலை மன்றம்" ஆகியவற்றிற்கு முறையே ரூ.1.15 இலட்சம், ரூ.1.00 இலட்சம் மற்றும் ரூ.1.00 இலட்சம் பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியுதவியுடன் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு ரூ.5.00 கோடி மதிப்பில் நூல்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.
- ஒரு இலட்சம் அரிய வகை தமிழ் நூல்கள் சேகரிக்கப்பட்டு, இலங்கையில் உள்ள தமிழர்கள் பயன் பெறும் வகையில் யாழ்ப்பாணம் நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

- போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த உலக அளவிலான பத்திரிகைகள், இதழ்களை பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகளுடன் அனைத்து மாவட்ட மைய நூலகங்களும் திறன்மிகு நூலகங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

### *9.15.2. நடைமுறையில் உள்ள செயல்படுத்தப்படும் திட்டங்கள்*

- மதுரையில் உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியுதவியுடன் ரூ.5.79 கோடி மதிப்பில் ஒரு இலட்சம் நூல்கள் அடங்கிய ஒரு மாபெரும் நூலகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பண்டைய நாகரிகங்கள் சார்ந்து சிவகங்கை மாவட்டம் கீழடியிலும், தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் குறித்து தஞ்சாவூரிலும், நாட்டுப்புறக் கலைகள் குறித்து மதுரையிலும், தமிழ் மருத்துவம் சார்ந்து திருநெல்வேலியிலும்,

பழங்குடியினர் பண்பாடு சார்ந்து நீலகிரியிலும், கணிதம், அறிவியல் குறித்து திருச்சிராப்பள்ளியிலும், வானியல், புதுமைக் கண்டுபிடிப்புகள் குறித்து கோயம்புத்தூரிலும், அச்சுக்கலை சார்ந்து சென்னையிலும் ரூ.3.91 கோடி செலவில் சிறப்பு நூலகங்கள் மற்றும் கண்காட்சிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

- அரிய நூல்கள், ஆவணங்கள் மற்றும் பனை ஓலைச் சுவடிகளை மின்மயமாக்கி, அனைத்து நூலகங்களையும் ஒருங்கிணைக்கும் அட்டவணையினை உள்ளடக்கிய மின் நூலகம் அமைக்கும் பணி ரூ.2.00 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.
- அரிய வகை நூல்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களைப் பாதுகாக்கும் வகையில், கன்னிமாரா பொது நூலகத்தின் தொன்மை வாய்ந்த நூலகக் கட்டடத்தினை ரூ.1.50 கோடி மதிப்பில் குளிர்சாதன வசதியுடன் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள சின்னக் காஞ்சிபுரம் கிளை நூலகத்தை ரூ.49.99 இலட்சம் மதிப்பிலும், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள மணவாளநகர்

கிளை நூலகத்தை ரூ.49.28 இலட்சம் மதிப்பிலும் மற்றும் திருப்பூர் மாவட்டத்திலுள்ள உடுமலைப் பேட்டை கிளை நூலகத்தை ரூ.49.96 இலட்சம் மதிப்பிலும் அந்தந்த நூலக ஆணைக்குழு நிதியில் மாதிரி நூலகங்களாக மேம்படுத்திடும் பணி நடைபெற்று வருகிறது.

## 9.16. நிதி ஒதுக்கீடு

2019-20 ஆம் ஆண்டிற்கு ரூ.125.01 கோடி நிதி அரசால் இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. ஆசிரியர் தேர்வு வாரியம்

### 10.1. முன்னுரை

1987 ஆம் ஆண்டில் அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர், தொழில்நுட்பக் கல்லூரி இயக்குநர், சட்டக் கல்வி இயக்குநர் ஆகியோரின் கட்டுப்பாட்டின் கீழ்வரும் அரசு கல்வி நிறுவனங்களில் உள்ள சில பணியிடங்களுக்கும் பணிநாடுநர்களை தாமதமின்றி தெரிவுசெய்து அளிக்கும் பொருட்டு ஆசிரியர் தேர்வு வாரியம் நிறுவப்பட்டது. மேற்கண்ட பணியிடங்களுக்கு பணிநாடுநர்களை தெரிவு செய்யும் பணியினை இதற்கு முன்னர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மேற்கொண்டது. இதுவரை 1,59,561 பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வினை (TNTET) நடத்தும் மாநில முகமையாகவும் ஆசிரியர் தேர்வு வாரியம் செயல்பட்டு வருகிறது. பல்வேறு இனங்களுக்கான நியமனங்கள் குறித்த விவரங்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் http://trb.tn.nic.in என்ற இணையதளத்தில் தேர்வர்களின் பயன்பாட்டிற்காக பதிவேற்றம் செய்யப் படுகிறது.

### 10.2. நோக்கங்கள்

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் முதன்மை நோக்கம், பணிநாடுநர்களைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறைகளை மேம்படுத்துவதும் மற்றும் பணியிடங்களின் தகுதிக்கேற்ப தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர் பணிநாடுநர்களின் வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த திறமைகளைக் கண்டறிவதும் ஆகும். மேலும் நடைமுறைத் தொழில்நுட்ப உத்திகளைக் கையாண்டு நேர்மையான தெரிவு முறையை ஆசிரியர் தேர்வு வாரியம் உறுதி செய்கிறது.

### 10.3. பிழைக்கு இடம்கொடாத (fool-proof) நியமன நடைமுறைகளை உறுதி செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

தேர்வு நடைமுறைகளில் முறைகேடான செயல்களைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்பான முறையில் தேர்வுகளை நடத்திட நிலையான செயல் வழிமுறைகளை மாற்றி வகுத்தல் இன்றியமையாததாகும். சில நுட்பமான பகுதிகள் வரையறுக்கப்பட்டு தொடர் கண்காணிப்பு ஏற்பாடுகள் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. இவற்றில் வினாத்தாள் பாதுகாக்கப்படும் இடம், தேர்வு மையம், முக்கிய ஆவணங்கள் எடுத்துச்செல்லுதல், ஒளியியல்

குறியீடு வாசிப்பான் (OMR), விடைத்தாட்கள் பாதுகாப்பு மற்றும் உள்ளீடு (Scanning) பணிகள் போன்றவை அடங்கும். விடைத்தாள்களில் பட்டைக் குறியீடு (Bar Code) ஆசிரியர் தேர்வு வாரிய பணியாளர்களால் மட்டுமே வழங்கப்பட்டு அதன் விவரம் நியமிக்கப்பட்ட அலுவலரால் பாதுகாப்பாக பராமரிக்கப்படுகிறது.

ஆசிரியர் தேர்வு வாரியம் எழுத்து தேர்வுகளை ஒளியியல் குறியீடு வாசிப்பான் (OMR) விடைத்தாட்களை பயன்படுத்தி நடத்தி வருகிறது. பல்வேறு மையங்களில் வினாத்தாட்களை பாதுகாப்பாக வைத்தலும் இவற்றை எவ்வித சேதமின்றியும், வெளியாதலின்றியும் பாதுகாத்தலும் மிகப்பெரிய சவாலாக உள்ளது. ஒளியியல் குறியீடு வாசிப்பான் (OMR) விடைத்தாட்கள் மற்றும் வினாத்தாட்கள் அதிக நிதிச்செலவில் தொடர் கண்-காணிப்பில் வைக்கப்படுகின்றது. இந்நடைமுறைகள் தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்துவதோடு கடும் நடைமுறைச் சிக்கல்கள் நிறைந்ததாகவும் உள்ளது.

எனவே, ஆசிரியர் தேர்வு வாரியம் அனைத்து நியமனங்களுக்கான தேர்வுகளையும் இணைய வழியில் மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

10.4. தகவல் மையம்

2015 ஆம் ஆண்டு முதல் ஆசிரியர் தேர்வு வாரியத்தில் முழுமையான வசதிகளுடைய தகவல் மையம் செயல்பட்டு வருகிறது. இத்தகவல் மையத்தில் பணிநாடுநர்கள், நியமனம் தொடர்பான தங்களது கோரிக்கைகளை சமர்ப்பித்திடத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

10.5. தெரிவுப்பணிகள்

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 2018-19 ஆம் ஆண்டில், பள்ளிக் கல்வித் துறைக்கு 24 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களும், பிற துறைகளுக்கு 86 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர் தேர்வு வாரியமானது 2011-12 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை பல்வேறு வகைகளின் கீழ் 45,942 ஆசிரியர்களை பின்வருமாறு தெரிவுசெய்துள்ளது.

| துறையின் பெயர் | தெரிவு பெற்ற ஆசிரியர்கள் எண்ணிக்கை |
|---|---|
| பள்ளிக்கல்வி | 43,068 |
| பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்-படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை-யினர் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூகப் பாதுகாப்பு மற்றும் மாநகராட்சி பள்ளிகள் | 1,346 |
| உயர் கல்வி | 1,528 |

மேலும், அரசு சட்டக்கல்லூரிகளுக்கு 117 உதவி பேராசிரியர்கள் தற்காலிகமாக தெரிவு செய்யப் பட்டுள்ளனர். 2019 ஆம் ஆண்டிற்கான 2,144 முதுகலை ஆசிரியர் பணியிடங்களுக்கான தெரிவுப் பணி சார்ந்த அறிவிக்கை 12.06.2009 அன்று ஆசிரியர் தேர்வு வாரியத்தால் வெளியிடப்பட்டுள்ளது .

## 10.6. தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு 2019

ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் 2019 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்திட 28.02.2019 இல் அறிவிக்கை வெளியிடப்பட்டது. விண்ணப்பங்கள் 15.03.2019 முதல் 12.04.2019 வரை இணைய வழியாக பெறப்பட்டன. ஆசிரியர் தகுதித்தேர்வு தாள்-I மற்றும் தாள்- IIற்கும் சேர்த்து மொத்தம் 6.04 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அதிகமான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதால் ஒளியியல் குறியீடு வாசிப்பான் (OMR) விடைத்தாள்களைப் பயன்படுத்தி தேர்வுகள் நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர் தகுதி தேர்வு தாள்-I மற்றும் தாள்-IIக்கான எழுத்துத் தேர்வு முறையே 08.06.2019 மற்றும் 09.06.2019இல் நடைபெற்றது.

## 10.7. இணையவழியில் எழுத்துத்தேர்வு

நேரடித் நியமனத்தின் மூலம், 814 கணினி பயிற்றுநர் நிலை-1 (முதுகலை ஆசிரியர் நிலையில்) பணியிடங்களுக்கான அறிவிக்கை 01.03.2019 அன்று ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் வெளியிடப்பட்டது. இணையவழியில் 20.03.2019 முதல் 10.04.2019 வரையில் 30,831 விண்ணப்பங்கள் பணிநாடுநர்களிடமிருந்து பெறப்பட்டன. 23.06.2019 அன்று கணினி பயிற்றுநர் (நிலை 1) தேர்வு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் இணையவழியில் நடத்தப் பட்டுள்ளது.

## 10.8. புதிய முயற்சிகள்

- ஆசிரியர் தேர்வு வாரியத்தில் பணியாளர்களுக்கென தொழில் நுட்ப தொட்டுணர் வருகைப்பதிவு சாதனம் நிறுவப்பட்டுள்ளது.
- ஆசிரியர் தகுதித் தேர்வு தவிர வாரியத்தால் நடத்தப்படும் அனைத்து எழுத்துத் தேர்வுகளையும் இணைய வழியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திட ஆசிரியர் தேர்வு வாரியம் திட்டமிட்டுள்ளது.

## 10.9.நிதி ஒதுக்கீடு

2019-20 ஆம் ஆண்டிற்கு ரூ.4.11 கோடி நிதி அரசால் இவ்வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

### 11.1.முன்னுரை

1961 ஆம் ஆண்டு உயர்கல்வி தொடர்பாக பிற மொழிகளில் இருக்கும் நூல்களை தமிழில் மொழி பெயர்ப்பு செய்து அவற்றை வெளியிடும் நோக்கத்துடன் "**தமிழ் வெளியீட்டுக்கழகம்**" அமைக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டு தமிழ் வெளியீட்டுக் கழகத்தை உள்ளடக்கிய "தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்" உருவாக்கப்பட்டது. பின்னர் 1993 ஆம் ஆண்டு, "தமிழ்நாடு பாடநூல் கழகம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய பணிகளாக இலக்கியம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பிற துறை சார்ந்த பாடநூல்களை அச்சிடல், விற்பனை மற்றும் விநியோகம் செய்தல் ஆகியவை இருந்தன. "தமிழ்நாடு பாடநூல் கழகம்" என்பது 06.09.2013 முதல் "தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" எனப் பெயர் மாற்றம் பெற்றது. தற்போது இக்கழகமானது பாடநூல்கள் மற்றும் வழிகாட்டிகளை அச்சிட்டு வழங்கும் பணியுடன், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்காக விலையில்லா பொருட்களை கொள்முதல் செய்து வழங்கும் பணியையும் மேற்கொண்டு வருகிறது.

## 11.2. நோக்கங்கள்

- 12 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணாக்கர்களுக்கான பாடநூல்களை அச்சிட்டு வழங்குதல்
- பொறியியல், மருத்துவம், விவசாயம், சட்டம், கால்நடை அறிவியல் மற்றும் இதர பாடங்கள் தொடர்பான நூல்களை தமிழில் அச்சடித்து வெளியிடுதல்
- பழமையான அரிய தமிழ் நூல்களை மறுபதிப்பு செய்வதுடன் தமிழ் இலக்கிய வளங்களை உருவாக்குதல்
- அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு விலையில்லா பொருட்களான கிரையான்ஸ், வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டி, நிலவரைபட புத்தகம், கம்பளிச் சட்டை, காலுறைகள், மழைக்கால ஆடை, காலணி, புத்தகப்பை மற்றும் உறை காலணி ஆகியவற்றை கொள்முதல் செய்யும் முகமையாக இக்கழகம் செயல்பட்டு வருகிறது

## 11.3. உட்கட்டமைப்பு

டி.பி.ஐ வளாகத்தில் உள்ள 10 மாடிகள் கொண்ட தனது சொந்தக் கட்டடத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும்

கல்வியியல் பணிகள் கழகம் இயங்கி வருகிறது. அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு விலையில்லாப் பாடநூல்களை விநியோகம் செய்வதுடன், 22 வட்டார கிடங்குகளிலிருந்து பாடநூல்கள் இணையதளம் வாயிலாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், சென்னையில் டி.பி.ஐ வளாகத்தில் உள்ள பாடநூல் விற்பனை நிலையம் மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் உள்ள பாடநூல் விற்பனை நிலையம் வாயிலாக நேரிடையாகவும் பொது மக்களுக்கு பாடநூல்கள் விற்பனை செய்யப் படுகின்றன.

**11.4.அச்சுப்பணி**

2011-12 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆம் ஆண்டு வரை, 80 ஜிஎஸ்எம் ஹைடெக் மேப் லித்தோ தாள்கள் / 60 ஜிஎஸ்எம் கிரீம் வோவ் தாள்கள் புத்தக அச்சுப்பணிக்கும், 230 ஜிஎஸ்எம் மல்டி லேயர் கோட்டட் அட்டை மேலட்டையாகவும் பயன்படுத்தப் பட்டன. 2018-19 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில், முதல் கட்டமாக 1, 6, 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்களுக்கு உயர் தரமான மேம்படுத்தப்பட்ட 80 ஜிஎஸ்எம் நேர்த்தியான

தாள்கள் மற்றும் லேமினேஷன் செய்யப்பட்ட 230 ஜிஎஸ்எம் அரா போல்ட் ப்ளூ அட்டை மேல் அட்டைகள் அச்சடிக்க பயன்படுத்தப்பட்டன. 2019-20 ஆம் ஆண்டில் 1 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கான பாடநூல்கள் அனைத்தும் மேலே கூறப்பட்ட தரமான தாள்கள் மற்றும் லேமினேஷன் செய்யப்பட்ட அட்டையினைக் கொண்டு அச்சடிக்கப் பட்டுள்ளது. மேலும் பாடப்புத்தகங்கள் விரைவு துலங்கல் (Q.R) குறியீடுகள் என்ற சிறப்பு அம்சத்துடன் அச்சிடப்-பட்டுள்ளது. இக்குறியீடுகளைப் பயன்படுத்தி காணொலி உள்ளடக்கிய பாடம் மற்றும் வினாவங்கி தொடர்பான விவரங்களை மாணாக்கர்கள் இணையத்தின் வழியாக காணலாம். இவ்வாறு 2019-20 ஆம் ஆண்டில் அனைத்துப் பாடப்புத்தகங்களும் செறிவூட்டப்பட்ட பாடப் புத்தகங்களாக அச்சிடப்பட்டுள்ளன.

2018-19ஆம் ஆண்டில் இக்கழகத்தால் அச்சடிக்கப்பட்ட பாடநூல்கள், வழிகாட்டி நூல்கள் மற்றும் பிற நூல்களின் விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளன.

***அ) பாடநூல்கள்***

| பாடநூல்களின் விவரங்கள் | அச்சடிக்கப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | மொத்த மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கான பாடநூல்கள் | 565.00 | 266.89 |
| சுயநிதி பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்-களுக்கான பாடநூல்கள் | 269.00 | 225.61 |
| மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பள்ளிகளில் பயிலும் 1 முதல் 10 வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்-களுக்கான தமிழ் பாடநூல்கள் | 8.40 | 6.93 |

***ஆ) வழிகாட்டி நூல்கள்***

இக்கழகம் பிற துறைகளின் தேவையின் அடிப்படையில், 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான சிறப்பு வழிகாட்டி நூல்களை அச்சடித்து விநியோகம் செய்து வருகின்றது.

| துறையின் பெயர்/ இயக்ககம் | அச்சடிக்கப்பட்ட வழிகாட்டி நூல்களின் எண்ணிக்கை | மொத்த மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் | 2,34,000 | 51.00 |
| பிற்படுத்தப்பட்டோர் நலம் | 96,000 | 21.00 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் | 1,12,000 | 25.00 |
| சிறுபான்மையினர் நலம் | 1,000 | 03.00 |

***இ) பிற நூல்கள்***

இக்கழகமானது, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், பெற்றோர் ஆசிரியர் கழகம், சென்னை பல்கலைக்கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தொலைதூர கல்வி நிறுவனம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் போன்ற பிற துறைகளுக்கு ரூ.9.68 கோடி மதிப்பீட்டில் 55.58 இலட்சம் நூல்களை அச்சடித்துள்ளது. மேலும் கோரிக்கையின் அடிப்படையில் 1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் கண்பார்வையற்ற மாணாக்கர்களுக்கான பிரெய்லி புத்தகங்கள் NIVH நிறுவனம் மூலம் அச்சடிக்கப்பட்டு, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்விக்கென வழங்கப்பட்டது.

## 11.5. கொள்முதல் பணிகள்

2018-19 ஆம் கல்வியாண்டில், இக்கழகம் பள்ளி மாணாக்கர்களை தக்க வைத்துக் கொள்வதை உறுதி செய்யவும், இடைநிற்றலைத் தவிர்க்கவும், அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காகவும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி கீழ்க்கண்ட விலையில்லா பொருட்களை கொள்முதல் செய்துள்ளது.

| வ.எண். | விலையில்லா பொருட்கள் | கொள்முதல் செய்த அளவு |
|---|---|---|
| 1. | கிரையான்ஸ் | 9,15,311 |
| 2. | வண்ணப் பென்சில் | 15,15,525 |
| 3. | கணித உபகரணப் பெட்டி | 16,29,323 |
| 4. | நிலவரைபட புத்தகம் | 7,05,803 |
| 5. | கம்பளிச் சட்டை | 1,22,657 |
| 6. | காலுறை | 2,45,314 |
| 7. | மழைக்கால ஆடை | 1,22,657 |
| 8. | காலணி | 58,63,516 |
| 9. | புத்தகப்பை | 69,81,005 |

மேலும், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் நலனுக்காக 4,161 எரியூட்டி இயந்திரங்கள் (Incinerators) நிறுவப்பட்டுள்ளன. இக்கழகம், 3,090 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 2,939 அரசு மேல்நிலைப் பள்ளிகளில், உயர் தொழில்நுட்ப

கணினி ஆய்வகங்களை அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளியினை இறுதி செய்து, அவற்றை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

## 11.6. அரிய மற்றும் பழமை வாய்ந்த உயர்கல்வி நூல்களை மின்மயமாக்குதல்

உயர்கல்விக்கு பயன்படும், அரிய மற்றும் பழமை வாய்ந்த புத்தகங்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டும் அவற்றை நாடுவோர் பயன்படுத்தும் வகையிலும், அந்நூல்களை தேடிக் கண்டறிந்து, அச்சிட்டு வெளிச்சந்தையில் கிடைத்திடும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், அவற்றை மின்மயமாக்கி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இக்கழகத்தால் தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலம் இதுவரையில் 875 நூல்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 536 அரிய வகை நூல்கள், 100 படிகள் வீதம் அச்சடிக்கப்பட்டு சென்னை வட்டார கிடங்கில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு 190 தலைப்புகளில் அச்சடிக்கப்பட்ட 2,072 படிகள் ரூ.2.72 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 11.7. பாடநூல்களை தமிழாக்கம் செய்தல்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் ஆங்கிலத்தில் உள்ள மருத்துவம், சட்டம், பொறியியல், கலை, அறிவியல், ஓமியோபதி, சித்த மருத்துவம், மீன் வளம், உடற்கல்வியியல், கால்நடை அறிவியல் மற்றும் வேளாண்மை நூல்களை தமிழாக்கம் செய்து வருகிறது.

உயர்கல்வியைத் தொடர்ந்திட பல்வேறு போட்டி மற்றும் நுழைவுத் தேர்வுகளில் பங்கேற்கும் மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக, புகழ்பெற்ற தனியார் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களுக்கான வழிகாட்டி நூல்களின் ஆங்கில பதிப்பினை இக்கழகமானது தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளது.

## 11.8. திட்டங்களுக்கான நிதி வழங்கல்

2018-19 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் நிதி அளிக்கப்பட்ட திட்டங்களின் விவரங்கள்.

- டி.பி.ஐ வளாகத்தில் "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு நினைவு கட்டடம்" கட்டுவதற்கு ரூ.39.90 கோடி.
- அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் பள்ளிக் கல்வித்துறையின் பிற நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினி வாங்குவதற்காக ரூ.37.86 கோடி.
- 32 மாதிரி பள்ளிகள் ஏற்படுத்துவதற்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ.50.00 இலட்சம் வீதம் ரூ.16.00 கோடி.
- தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கம் செம்மையாக நடைபெறுவதற்கு ரூ.2.00 கோடி வைப்புத் தொகை வழங்கப்பட்டு அதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையை பயன்படுத்துதல்.
- அண்ணா நூற்றாண்டு நூலக கட்டடப் பணிக்காக வட்டியில்லா கடனாக பொது நூலக இயக்ககத்திற்கு ரூ.10.50 கோடி விடுவிக்கப் பட்டது.
- தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் குறித்த சிறப்பு நூலகம் தஞ்சாவூரில் அமைப்பதற்கும், நாட்டுப்புறக்கலைகள் குறித்த சிறப்பு நூலகம் மதுரையில் அமைப்பதற்கும், தமிழ் மருத்துவம் சார்ந்த நூலகம் திருநெல்வேலியில்

அமைப்பதற்கும், பழங்குடியினர் பண்பாடு சார்ந்த நூலகம் நீலகிரியில் அமைப்பதற்கும், கணிதம் மற்றும் அறிவியல் சார்ந்த சிறப்பு நூலகம் திருச்சிராப்பள்ளியில் அமைப்பதற்கும், வானியல் புதுமை கண்டுபிடிப்புகள் சார்ந்த நூலகம் கோயம்புத்தூரில் அமைப்பதற்கும், அச்சுக் கலை தொடர்பான சிறப்பு நூலகம் சென்னையில் அமைப்பதற்கும் மற்றும் சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக் கூடங்களை சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடியில் அமைப்பதற்கும் மொத்தம் ரூ.3.91 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமானது உயர்தர பாடநூல்கள், வழிகாட்டி நூல்கள் வழங்குவதிலும் மற்றும் உயர்தரமான விலையில்லா பொருட்களை உரிய காலத்திற்குள் கொள்முதல் செய்து வழங்குவதிலும் முன்னோடியாக திகழ்கிறது.

# 12. நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண். 43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2019-20 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு **ரூ. 28,957.62 கோடியாகும்.**

**2019 -20 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

(ரூபாய் இலட்சத்தில்)

| | கணக்கு தலைப்பு | | மாநில செலவினங்கள் | வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் | மத்திய அரசு திட்டங்கள் | மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| வருவாய் பகுதி | | | | | | | |
| 2051 | அரசுப் பணியாளர் தேர்வாணையம் | | 410,99 | | | | 410.99 |
| 2059 | பொதுப் பணிகள் | | 3892.00 | | | | 3892.00 |
| 2202 | பொதுக் கல்வி | | | | | | |
| | 1 | தொடக்கக் கல்வி | 1203945.61 | | | 199783.77 | 1403729.38 |
| | 2 | இடைநிலைக் கல்வி | 1327668.30 | | | 88518.65 | 1416186.95 |
| | 4 | வயது வந்தோர் கல்வி | 197.39 | | | 600.00 | 797.39 |
| | 5 | மொழி வளர்ச்சி | 1611.60 | | 0.01 | 2.51 | 1614.12 |
| | **மொத்தம் - பொதுக் கல்வி** | | **2533422.90** | | **0.01** | **288904.93** | 2822327.84 |
| 2204 | விளையாட்டு, இளைஞர் நலப் பணிகள் | | 150.38 | | | 50.71 | 201.09 |
| 2205 | கலையும் பண்பாடும் | | 12501.02 | | | | 12501.02 |

<table>
<tr><th></th><th>கணக்கு தலைப்பு</th><th>மாநில செலவினங்கள்</th><th>வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள்</th><th>மத்திய அரசு திட்டங்கள்</th><th>மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>2225</td><td>ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்</td><td>16850.99</td><td></td><td></td><td></td><td>16850.99</td></tr>
<tr><td>2235</td><td>சமூக பாதுகாப்பும் நலனும்</td><td>90.00</td><td></td><td></td><td></td><td>90.00</td></tr>
<tr><td>2251</td><td>தலைமைச் செயலகம் - சமூகப் பணிகள்</td><td>928.74</td><td></td><td></td><td></td><td>928.74</td></tr>
<tr><td colspan="2">நிகர மொத்த வருவாய்ப் பகுதி</td><td>2568247.02</td><td></td><td>0.01</td><td>288955.64</td><td>2857202.67</td></tr>
<tr><td colspan="2">மூலதன செலவு பகுதி</td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>4202</td><td>மூலதன செலவு</td><td>38131.46</td><td></td><td></td><td>300.01</td><td>38431.47</td></tr>
<tr><td colspan="2">மொத்த மூலதன பகுதி</td><td>38131.46</td><td></td><td></td><td>300.01</td><td>38431.47</td></tr>
<tr><td colspan="2">கடன் பகுதி</td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>7610</td><td>அரசு பணியாளர்களுக்கான கடன்கள்</td><td>29.50</td><td></td><td></td><td></td><td>29.50</td></tr>
<tr><td>7615</td><td>பல்வகை கடன்கள்</td><td>0.01</td><td></td><td></td><td></td><td>0.01</td></tr>
<tr><td colspan="2">மொத்த கடன் பகுதி</td><td>29.51</td><td></td><td></td><td></td><td>29.51</td></tr>
<tr><td colspan="2">நிகர மொத்தம்</td><td>2606407.99</td><td></td><td>0.01</td><td>289255.65</td><td>2895663.65</td></tr>
<tr><td colspan="6">கூட்டுக - திருப்பி வசூலிப்பவை (வருவாய் இனத்தின் கீழ்)</td><td>98.71</td></tr>
<tr><td></td><td colspan="5">மானியக் கோரிக்கை எண். 43 இன் நிகர மொத்தம்</td><td>2895762.36</td></tr>
</table>

**துறையினால் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், தொடர்ந்து**

செயல்படுத்தவும், அரசு முன்னெப்போதும் இல்லாதவாறு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு அளித்து வருகிறது. கல்வித் தரத்தை மேம்படுத்துவதே அண்மைக் காலங்களில் பள்ளிக் கல்வித் துறையின் செயல்பாடுகளை நடத்திச்செல்லும் முதன்மையான வழிகாட்டும் சக்தியாக உள்ளது. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வகுத்தளித்த தொலைநோக்கு தமிழ்நாடு 2023 இன் நோக்கங்களை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

**கே.ஏ. செங்கோட்டையன்**
பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்